1509 52

# நெல்சன்

85983

இஃது

சேலம் காலேஜ் பிரின்சிபால்
அ. இராமசுவாமி கவுண்டர், M.A., L.T.,

அவர்களால்

இயற்றப்பட்டது.

OFFICE OF THE ... 27 JUN 1934 MADRAS

தருமபுரி சஞ்சீவி அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

85983

1934

பதிவு செய்தது.] [விலை அணா 8.

# நெல்சன்

இஃது
சேலம் காலேஜ் பிரின்சிபால்
அ. இராமசுவாமி கவுண்டர், M.A., L.T.,
அவர்களால்
இயற்றப்பட்டது.

OFFICE OF THE REGISTRAR OF ...
27 JUN 1934
MADRAS

தருமபுரி சஞ்சீவி அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1934.

பதிவு செய்தது.] [விலை அணா 8.

# முகவுரை.

பெரியோர்களின் சரித்திரங்களைப் படிப்பதன்மூலமாக, அரும் பெரும் விஷயங்களை எளிதில் அறியக் கூடும் என்பது எல்லோராலும் ஒப்ப முடிந்ததொன்றாம். ஆதலால், வீரமும் ஈரமும் ஒருங்கே அமையப்பெற்ற அஞ்சா நெஞ்சினனும், தன்னலமும் பேராசையும் அற்ற பெரியோனும், தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த தகைமையாளனும், இங்கிலாந்தின் கடலாதிக்கத்தை நிலை நாட்டியவனும், தேசசேவையினையே தனது நோக்கமாகக் கொண்ட வாழ்க்கையனுமாகிய நெல்சனது சரித்திரத்தை எழுதலானேன்.

மாணவர்க்கும் மற்றவர்க்கும் பயன்படுமாறு எளிய நடையில் எழுதப் பட்டுள்ள இப்புத்தகத்தைத் தமிழ்மக்கள் ஆதரிப்பார்களென நம்புகின்றேன்.

சேலம்,
14—6—34.

அ. இராமசுவாமி கவுண்டர்.

# பொருளடக்கம்.


| அத்தியாயம். | விவரம். | பக்கம். |
|---|---|---|
| 1. | இளமைப் பருவம் ... ... | 1 |
| 2. | திருமணம் ... ... | 19 |
| 3. | மத்திய தரைக்கடல் யுத்தங்கள் ... | 32 |
| 4. | நைல் யுத்தம் ... ... | 48 |
| 5. | கூடா நட்பு ... ... | 61 |
| 6. | பால்டிக் வெற்றி ... ... | 74 |
| 7. | போலோன் பாசறை ... | 89 |
| 8. | பகைவரைத் துரத்தல் ... | 96 |
| 9. | டிரபல்கார் வெற்றியும் நெல்சனின் மரணமும் ... ... | 101 |

# கடவுள் வணக்கம்.

---

“ ஒன்றா யிரண்டு சுடராயொரு மூன்று மாகிப்
பொன்றாத வேத மொருநான்கொடைம் பூத மாகி
யன்றாகி யண்டத் தகத்தாகியப் புறத்து மாகி
நின்றா னொருவன் அவனீள்கழ னெஞ்சில் வைப்பாம். ”



லார்ட் (Lord) நெல்சன்.

# நெல்சன்.

## அத்தியாயம்—1

### இளமைப் பருவம்.

### 1758—1783.

திருமகளின் அருளும் கலைமகளின் கருணையும் ஒருங்கே அமையப் பெற்று நிலமகளின் திலகமெனச் சீர்பெற்று விளங்கும் இங்கிலாந்து தேசத்தில் வட கடலின் கரையருகே பர்ன்ஹாம் தோர்ப் என்ற ஓர் ஊர் உண்டு. அவ்வூரில் எட்மண்ட் நெல்சன் என்னும் பாதிரியார் ஒருவர் இருந்தார். குலத்திலும், குணத்திலும், திருவிலும், உருவிலும் சிறந்த கேதரின் சக்ளிங் என்னும் கன்னிகையை மணந்து தன்னமர் மனையுந் தானுந் தளிர்த்துளம் இனிதிருந்தார்.

1758-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29-ஆந் தேதி

கன்ன லின்மொழிக் காரிகை பெற்றனள்
மன்னு தங்குல மாசு துடைத்திடும்
பொன்னி னன்ன புதல்வனைத் தானரோ.

பெறல ருஞ்சேய் பிறந்தெனத் தந்தைதான்
அறைம கிழ்ச்சி யிருங்கட லாழ்ந்தனன்
பொறையு யிர்த்தவப் பொற்றொடி யெய்திய
வுறும கிழ்ச்சி யுரைப்பவர் யாவரே.

அக்குழந்தைக்கு நெல்சன் என்று பெயரிட்டனர்.

1767-ம் ஆண்டில் நெல்சனது தாயார் இறந்தனர். அவள் இறக்கும்போது எட்டுக் குழந்தைகள் இருந்தனர். நெல்சனது தாய்மாமனுன மாரீஸ் என்பவர் தங்கையின் மரணத்தைக் கேள்வியுற்றுத் துக்கம் விசாரிக்கும் பொருட்டு அவ்வூர்க்குச் சென்று சில நாட்கள் அங்கே தங்கியிருந்தார். அப்பொழுது அவர், தாயையிழந்த குழந்தைகட்குப் பல ஆறுதல்களைச் சொன்னதுமன்றித் தாம் புரிந்த கடற் சண்டைகளின் பெருமையினையும் தமது வீரச் செயல்களையும் குழந்தைகளுக்கு விளக்கமாகச் சொல்லி வந்தார். போர்க் கதைகளையும் வீரச் செயல்களையுங் கவனமாய்க் கேட்டுவந்த நெல்சனுக்குச் சிறு வயதிலேயே அத்தகைய வாழ்க்கையில் ஓர் விருப்பம் உண்டாயிற்று. மாரீஸ் என்பவர் விடைபெற்றுத் திரும்புகையில் ஒரு குழந்தையைக் காப்பாற்றும் பொறுப்பைத் தாம் ஏற்றுக்கொள்வதாக மைத்துனர்க்கு வாக்களித்தார்.

நெல்சனும் அவனது தமையனும் ஒரு பள்ளியில் வாசித்து வந்தனர். நெல்சன் பிணிவாய்ப்பட்டு உடல் மெலிந்து பலங்குன்றி இருந்தான். எனினும்; மனோதிடம், அஞ்சாமை, தன்னல மறுப்பு முதலிய நற்குணங்கள் அவனிடத்தில் இயற்கையாகவே அமைந்திருந்தன. சிறு பிராய முதல் நெல்சனுக்குப் பறவை வேட்டையில் அதிகப் பிரியம் உண்டு. ஒரு நாள் ஓர் இளைஞனுடன் பறவைகளைத் தேடிக்கொண்டு அதிக தூரம் சென்றனன். போஜன வேளை கழிந்தது. நெல்சனோ வரவில்லை. வீட்டிலுள்ளோர்க்குக் கவலை

அதிகரித்தது. குழந்தையைத் தேடிக்கொண்டு ஒவ்வொருவரும் ஒவ்வொரு பக்கம் சென்றனர். கடைசியில், ஒரு கால்வாயின் ஓரத்தில் அமைதியாய் உட்கார்ந்திருந்த நெல்சனை அவனது பாட்டியார் கண்டனர். கண்டதும் கவலை நீங்கிய அக்கிழவி நெல்சனைப் பார்த்து, “குழந்தாய்! பசியும் பயமும் இன்றி நீ இங்கே தனித்திருப்பது விந்தையாயுளது” என்றனள். அதற்கு நெல்சன், “பாட்டி! பயம் என்பது என்ன? நான் அதைப் பார்த்ததே இல்லை. சற்றுச் சொல்லுங்கள்” என்று மறுமொழி கூறினன்.

நெல்சனும் அவனது தமையனும் குளிர்கால விடுமுறை கழிந்தபின் பள்ளிக்குச் சென்றனர். வழியில் பனிக்கட்டிகள் மிகுதியாய் நிறைந்திருந்தமையால் இருவரும் வீட்டுக்குத் திரும்பிச் சென்று தந்தைக்கு உண்மையை உரைத்தனர். அதைக் கேட்ட தந்தை அப்பிள்ளைகளைப் பார்த்து, “அப்படியாயின் போக வேண்டாம். ஆனால், மறு முறையும் முயற்சித்துப் பாருங்கள். செல்லுதல் முடியாதாயின் திரும்பிவிடுக. இல்லையேல், நேரே செல்லுக. உமது பொறுப்புக்கே அதை விட்டுவிடுகின்றேன்” என்றனர். இருவரும் உடனே புறப்பட்டுச் சென்றனர். பனிக்கட்டிகள் மிகுதியாய் உறைந்து கிடந்தன. அண்ணன் திரும்பிப் போக எண்ணினன். ஆனால், நெல்சன் அதற்கு இணங்காமல், “நாம் கட்டாயம் கடந்து செல்வோம். நமது பொறுப்பிற்கே நம் தந்தை விட்டுவிட்டதை

உமக்கு நினைப் பூட்டுகின்றேன்" என்று சொன்னான். எனவே, இருவரும் பாதையைக் கடந்து அபாய மின்றிப் பள்ளிக்குச் சென்றனர்.

இடும்பைக் கிடும்பை படுப்பர் இடும்பைக்
கிடும்பை படாஅ தவர். —குறள்

உபாத்தியாயாது தோட்டத்தில் ஒரு கனிமரம் இருந்தது. அம்மரத்தின் கனிகள் மிகவும் சுவை யுடையன வாதலால் அவற்றைத் திருட்டுத்தனமாகப் பறித்து உண்ணப் பிள்ளைகள் விரும்பினர். ஆனால், ஒருவனும் தைரியத்துடன் முன்வந்தானில்லை. எல் லோரும் அஞ்சினர். இதையறிந்த நெல்சன் ஓர் நள்ளிரவில் தோட்டத்துள் புகுந்து, மரத்தின்மே லேறிக் கனிகளைப் பறித்து வந்து, எல்லோர்க்கும் பங்கிட்டுக் கொடுத்தான். தனக்கென ஒன்றும் நெல்சன் எடுத்துக் கொள்ளவில்லை. எடுத்துக்கொள் ளும்படி வேண்டிய சிறுர்களைப் பார்த்து, "மற்றவர்கள் பயந்தமையால் அக்காரியத்தைச் செய்தேனேயன்றி விருப்பத்தாலன்று" என்று நெல்சன் பதில் அளித் தான்.

மேற்குறித்த சம்பவங்கள் சிறியனவெனினும் நெல்சனது அஞ்சாமை, தன்னலமின்மை, சுயமரி யாதை, கடப்பாடு முதலிய நற்குணங்களை விளக் குகின்றன அன்றோ? நெல்சனது பிற்காலச் செயல்க ளெல்லாம் இக்குணங்களையே அடிப்படையாகக் கொண்டுள்ளன.

நெல்சனது தந்தை தமது குறைந்த ஊதியத்தைக் கொண்டு பிள்ளைகள் எண்மரையும் கஷ்டத்துடன் காப்பாற்றி வந்தார். தந்தையின் வறுமையினைக் கண்ட நெல்சன் அவருடைய கஷ்டத்தைச் சிறிது குறைக்கத் தீர்மானித்து, தாய் மாமனுடன் கப்பலுக்குச் செல்லத் தான் பிரியப்படுவதாகத் தந்தைக்குத் தெரிவித்தான். நெல்சனது உட்கருத்தை யுணர்ந்த தந்தையும் அதற்கு இணங்கித் தமது மைத்துனர்க்குக் கடிதம் வரைந்தனர். அதற்கு, "பலமற்று மெலிந்த உடலினனான நெல்சனையா கப்பற் சேவகத்துக் கனுப்பத் தீர்மானித்தீர்? கடல் வாழ்க்கைக்குத் தேக பலமும் உடல் நலமும் அத்தியாவசியமாவன. இவ்விரண்டும் அற்ற ஒருவற்குக் கப்பற் சேவகம் என்பது ஒரு தண்டனையே யாகும். அத்தகைய தண்டனையைப் பெறுவதற்கு நெல்சன் இழைத்த பெருங்குற்றம் யாதோ? கப்பற் றொழிலிற் சேர்ந்து குடும்பக் கவலையைக் குறைப்பதே நெல்சனது நோக்கம் எனத் தெரிவித்துள்ளீர். அப்படியாயின் அவன் வரவு நல்வரவாகுக. முதல்நாள் போரிலேயே குண்டுபட்டு இறப்பின் அவனது கவலையும் அன்றே ஒழிந்து போம் அன்றோ?" என்று மாரீஸ் பதில் விடுத்தனர்.

நெல்சனுக்கு வயது பன்னிரண்டாயிற்று. ஓர் நாள் அதி காலையில் நெல்சனுக்கு ஒரு கடிதம் வந்தது. உடனே புறப்பட்டு, மாமனிடஞ் சென்று, கப்பலிற் சேரும்படி அதில் எழுதியிருந்ததைப் படித்ததும் நெல்சன் அளவற்ற ஆனந்தம் கொண்டான்.

புறப்படத் தயாராயினன். ஆனால், பல ஆண்டுகளாகத் தன்னுடன் ஒருங்கே உண்டும், உறங்கியும், விளையாடியும் வந்த தன் அருமைத் தமையனைப் பிரிதல் நெல்சனுக்கு அதிக வருத்தத்தை உண்டாக்கியது. எனினும், அத்துணை வருத்தத்தையும் பொறுமையுடன் சகித்துக் கொண்டு, வீடு சென்று, தந்தையொடு லண்டன்மாநகர் சென்றான். அன்றே நெல்சனைக் கப்பலில் அமர்த்தியதும் அவன் தந்தை திரும்பிச் சென்றனர். பெற்றோரையும் சுற்றத்தையும் பிரிந்து பிறந்த விடத்தினின்று முதன் முதல் வெளியேறுதலைப் போல துக்ககரமானது வேறெதுவும் இல்லை. இளமைப் பருவத்தில் வீட்டிலிருந்து வெளிக்கிளம்பி, வாழ்க்கை என்னும் பிரவாகத்தில் நீந்திச் செல்லுதல் வறுமையினும் கொடியதாகும். இவ்வாற்றொணாத் துக்கத்துடன் நெல்சன் கப்பலிற் சேர்ந்தான். உடல் நலத்துக்கேற்ற நல்லுணவும் நித்திரையும் இன்றித் தான் அநுபவித்த இன்னல்களை நெல்சன் மரணகால வரையிலும் மறக்கவேயில்லை.

மாரீஸின் கப்பலில் நெல்சன் சிறிது காலம் வேலை பார்த்தான். இரண்டு மாதங்கட்குப் பின்னர் மாரீஸ் வேறொரு கப்பற்கு மாற்றப்படவே நெல்சனும் அவருடன் சென்றான். நெல்சனை உயர் பதவிக்குக் கொண்டுவரக் கருதிய மாரீஸ் தக்க தருணத்தை எதிர் பார்த்த வண்ணமே இருந்தார். வியாபாரக் கப்பல்களின் மாலுமிகட்கும் போர்க்கப்பல்களின் வீரர்களுக்கும் இக்காலத்திருப்பது போல் அக்காலத்தில்

அதிக வேற்றுமை இல்லை. இவ்விரு திறத்தினரும் கப்பல் ஓட்டும் தொழிலில் வல்லுநராயிருத்தல் வேண்டும். போர்க்கருவிகள் வியாபாரக் கப்பல்களிலும் அக்காலத்தில் கொண்டுபோகப்பட்டன. போர் ஆற்றல் உடையவர்களே வியாபாரக் கப்பல்களிலும் உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டனர். ஆனல், ஒரே ஒரு வித்தியாசம் இருந்தது. அதாவது, யுத்தக் கப்பல்களில் அநேக இளைஞர்களும் வேலையாட்களும் இருப்பதுண்டு. எனவே, இளைஞர்கள் சுருசுருப்பின்றிச் சோம்பலுற்றுத் தங்கள் தொழிலை விரைவில் கற்றுக் கொள்ள முடியாத நிலையிலிருந்தனர். ஆனல், வியாபாரக் கப்பல்களிலோ இளைஞர்கள் சிலரே நியமிக்கப் பட்டமையாலும், ஒவ்வொருவனும் சோம்பலின்றி ஊக்கத்துடன் உழைத்தல் அத்தியாவசியமானதாலும் உற்சாகமுடைய இளைஞர்கள் அதிக விரைவில் தமது ஆற்றலைப் பெருக்கிக் கொள்ளும் வசதி இருந்தது. இவ்வுண்மையை அறிந்த மாரீஸ், மேற்கு இந்தியத் தீவுகளுக்குச் செல்லும் வியாபாரக் கப்பல் ஒன்றில் நெல்சனை அமர்த்தினர். நெல்சனும் அக்கப்பலில் அதிகக் களிப்புடன் சென்றன். அக்கப்பலில் ஒரு வருடம் வேலை செய்தபின் 1772-ம் ஆண்டு ஜுலை மாதம் நெல்சன் இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்றன்.

பிறகு, மாரீஸின் கப்பலில் நெல்சன் சில மாதங்கள் வேலை செய்து கப்பல் ஓட்டுவதில் வல்லுநனாக விளங்கினன். அப்பொழுது, புதிய தேசங்களைக்

கண்டுபிடிக்க இரண்டு கப்பல்கள் வடதுருவம் புறப்படுவதாக நெல்சன் கேள்வியுற்றான். அந்தப் பிரயாணம் அதிக அபாயகரமானதால் கப்பல் யாத்திரையில் அநுபவமுள்ளவர்களையே அழைத்துச் செல்வதாகத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால், நெல்சன் தானும் செல்ல விரும்பிக் கப்பல் தலைவனை வேண்டிக்கொண்டதாலும், மாரீஸின் சிபார்சினாலும் நெல்சனை அழைத்துப்போகக் கப்பற்றலைவனும் இசைந்தான். இரண்டு கப்பல்களும் புறப்பட்டு வடதுருவத்துக்குச் சென்றன. நெல்சனும் உடன் சென்றான்.

ஒரு நாள் பனிமலைகளின் இடையில் அகப்பட்டுத் தப்பிப்போக வழியின்றிக் கப்பல்கள் அபாயத்தில் இருந்தன. அச்சமயத்தில் நெல்சன் சில நண்பர்களுடன் வெளிப் போந்து, பனிக்கட்டிகளை வாளால் அறுத்து வழியுண்டாக்கிக் கப்பல்களைக் காப்பாற்றினான். நெல்சனது வீரத்தையும் துணிவையுங் கண்டு அனைவரும் மெச்சி ஆசி கூறினர்.

> வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
> உள்ளத்தி னுள்ளக் கெடும். —குறள்

ஒரு நாள் சிலர் படகில் வெளிச் சென்றனர். அப்பொழுது வால்ரஸ் என்னும் ஒரு கடல் மிருகத்தை ஒருவன் துப்பாக்கியால் சுட்டுப் புண்படுத்தினான். வால்ரஸ் என்பது உருவிலும் குணத்திலும் மனிதனைப் போன்றதோர் மிருகம். அடிபட்ட அம்மிருகம் நீர்க்குள் மூழ்கித் தனது இனத்தினரை அழைத்து வந்தது.

அம்மிருகங்கள், படகினைக் கவிழ்த்து அதிலிருந்தவர்களைக் கொல்ல முயன்றன. அதைக் கண்ட நெல்சன் சில நண்பர்களுடன் ஒரு படகிலேறித் துணைக்குச் சென்றான். எதிரிகளின் பலம் அதிகப்பட்டதையறிந்து அம்மிருகங்கள் உடனே மறைந்துபோயின.

ஓர் இரவு நெல்சனும் அவனது நண்பனும் படுக்கையினின்று எழுந்து, எவரும் அறியாமல் வெளியே சென்று, ஒரு பெரிய கரடியைத் துரத்திச் சென்றனர். சிறிது நேரத்திற்குள் விழித்தெழுந்தோர் நெல்சனைக் காணமற் கவலையுற்றுக் கப்பற் றலைவனுக்குத் தெரிவித்தனர். சில நிமிடங்கள் கழிந்ததும் சிறிது தூரத்தில் ஒரு பெரிய கரடியையும் அதனைத் துரத்திச் செல்லும் இருவரையும் தலைவன் கண்டு உடனே திரும்பி வரும்படி அவர்களுக்கு அறிக்கை செய்தான். அவ்வறிக்கைக்குக் கீழ்ப்படியுமாறு நண்பன் வற்புறுத்தியும் நெல்சன் திரும்பவில்லை. தலைவனது கட்டளைக்குங் கீழ்ப்படியாமல், நண்பனது வேண்டுகோளுக்கும் இணங்காமல், வெடிமருந்து முழுவதும் செலவானதையும் பொருட்படுத்தாமல், "அக்கரடியை இத்துப்பாக்கியால் அடித்துக் கொல்லுவேன்" என்று சொல்லிக் கொண்டே நெல்சன் கரடியைத் தொடர்ந்து சென்றான். அத்தருணம், கப்பற்றலைவன் கரடியின்மீது துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தான். அந்தச் சப்தத்தைக் கேட்டதும் கரடி அஞ்சி ஓடிற்று. நெல்சனும் திரும்பினான். தானிழைத்த தவற்றினைக் கருதி நெல்சன் பெரிதும் வருந்தினான். கப்பல் தலைவன் நெல்சனை

அருகழைத்து, "உன் வயதுக்கும் பதவிக்கும் தகாத காரியம் செய்தனே. அடாத காரியம் செய்வோர் படாத பாடு படுவர் என்பதை அறிந்திலேயோ ?" எனக் கண்டித்துப் பின்னரும், "அக்காடியைக் கொல்வதால் விளையும் பயன் யாது ?" என்று வினவினன். அதற்கு நெல்சன் "ஐயா ! அதன் தோலை எடுத்துச் சென்று தந்தைக்குக் கொடுக்கவே அக்காடியைக் கொல்ல முயன்றேன்" எனப் பதில் அளித்தான்.

வடதுருவ யாத்திரையிலிருந்து திரும்பி வந்த இரண்டு வாரத்திற்குள் இந்தியாவுக்குச் செல்லும்படி நெல்சனுக்கு உத்தரவு கிடைத்தது. நெல்சனும் அவ்வாறே சென்று இந்தியாவிலும் இந்தியத் தீவுகளிலும் மூன்று வருட காலம் தங்கினன். இந்தியாவில் அப்பொழுது யுத்தமின்றிச் சமாதானம் நிலவியதால் பம்பாயிலிருந்து பசரா வரையிலுள்ள ஒவ்வொரு இடத்தையும் நெல்சன் பார்வையிட்டான். இந்தியாவின் வளப்பத்தையும் இந்திய மக்களின் குண விசேடங்களையும் கண்டு வியப்புற்ற நெல்சன் இந்தியாவின்மீது அதிக விருப்பங் கொண்டான். ஆனால், இந்தியாவின் உஷ்ணத்தைச் சகித்தற்கேற்ற தேக ஆரோக்கியமும் உடல் பலமும் அவனுக்கில்லை. எனவே, அவனது உடல் நாளடைவில் தளர்வெய்தி என்புக் கூடுபோல் மெலிவுற்றது. இங்கிலாந்துக்குத் திரும்பிப் போனலன்றி அதிக சீக்கிரத்தில் நெல்சன் இறக்க நேரும் என்று வைத்தியர்கள் அபிப்பிராயம் தந்தனர். ஆகையால், நெல்சன் இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்று

1776-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் வீடு சேர்ந்தான். தான் ஏறிச் சென்ற கப்பற்றலைவனது கருணையாலும் ஆதாவாலுமே எமன் வாயிலிருந்து தான் மீண்டதாக நெல்சன் அடிக்கடி கூறுவதுண்டு.

வீட்டுக்குச் சென்றும் நெல்சன் சுகம் அடைந்தான் இல்லை. தனது நிலைமையைக் குறித்துப் பெரிதும் கவலையுற்றான். "என் வாழ்க்கையின் இலட்சியங்கள் கனவாய் முடிந்தன. உடலோ பலமற்றுப் பயனற்ற தாயிற்று. கப்பல் யாத்திரைக்கும் கடற் சண்டைக்கும் இனித் தகுதியற்றவ னாயினேன்" என்று விசனித்து ஆழ்ந்த சிந்தனையுடன் தன்னையும் மறந்த நிலைமையிலிருந்தான். அப்பொழுது, அவனுக்குத் தோற்றம் ஒன்று உண்டானது. அருட் சோதி ஒன்று அவனுக்குத் தோன்றியது. அவ்வகண்ட ஒளியில் அரசனும் அரசியுந் தோன்றி, "நெல்சனே! கவலுவ தொழிக. அஞ்சேல்! உலகில் எவரானும் செயற்கரியன செய்து பெறற் கரிய பெரும் புகழைப் பெறுவாய்" என்று கூறி மறைந்தனர். இவ்வறி துயில் நீங்கி விழித்ததும் நெல்சனுக்குப் புத்துயிரும் புதிய உணர்ச்சியுந் தோன்றின. அன்று முதல் எவ்விதத் துன்பத்துக்கும் அஞ்சாமல் தன்னலமின்றித் தேசசேவை புரிந்து புகழ் ஈட்டத் தீர்மானித்தான். அத்தோற்றம் ஈசனது அருள் ஒளி யென்றும் கடவுளின் கருணைப் பெருக்கென்றும் நெல்சன் அடிக்கடி நினைந்து உருகினான்.

மாதங்கள் சில கழிந்தபின் நெல்சன் சுகம் எய்தினன். 1777-ம் வருடம் ஏப்ரல் மாதம் கப்பல் உத்தியோகப் பரீட்சைக்குச் சென்றான். பரீட்சகர்களில் மாரீஸ் என்பவரும் ஒருவர். பரீட்சை முடிவுற்றது. அறிவின் திறத்தாலும் மதிநுட்பத்தாலும் நெல்சன் உயர்வாகத் தேறினன். பிறகு, மாரீஸ் நெல்சனை அருகே அழைத்து, "இவ்விளைஞன் என் தங்கையின் புதல்வன்" என வுரைத்து மற்றப் பரீட்சகர்களுக்கு நெல்சனை அறிமுகப்படுத்தினர். அதைக் கேட்ட அவர்கள் மாரீஸைப் பார்த்து "நீர் இதனை முன்னரே சொல்லாக் காரணம் என்னே ?" எனக் கேட்டனர். அதற்கு மாரீஸ், "எவனும் தனது திறத்தைக் கொண்டே பரீட்சையில் தேற வேண்டுமே யன்றிப் பிறருடைய உதவியை நாடுதல் பேதமை யாகும். உமது உதவியின்றியே நெல்சன் பரீட்சையில் தேற வேண்டும் என்பது எனது கொள்கை. அவனும் அவ்வாறே தேறினமையால் அவனை உங்கட்கு அறிமுகப் படுத்தினேன்" என்று பதில் அளித்தார்.

பிறகு, நெல்சன் ஜமேகாவுக்கு அனுப்பப்பட்டான். அங்கே சென்ற சிறிது காலத்திற்குள் சேனாபதியின் நன்மதிப்பையும் ஆதரவையும் நெல்சன் பெறலானான். முதலில் உபதலைவனாகவும் பிறகு தலைவனாகவும் நெல்சன் நியமிக்கப்பட்டான். எனினும், தனது திறத்தையும் ஆற்றலையும் காட்டற்குரிய சந்தர்ப்பம் நெல்சனுக்கு வாய்க்க வில்லை.

நிற்க, வட அமெரிக்காவுக்கும் தென் அமெரிக்காவுக்கும் இடையில் நீண்டதோர் பூ சந்தி உண்டு. அது நிகராகுவா என்னுமிடத்தில் மிகவும் குறுகியதாயுளது. அங்கே ஒரு பெரிய ஏரியுமுண்டு. அவ்வேரியினின்றும் ஸான் ஜுவான் நதி உற்பத்தியாகிக் கரிபியன் கடலில் கலக்கின்றது. ஏரிக்குக் கிழக்கிலும் மேற்கிலும் இரு ஊர்களும் உண்டு. இவைகள் ஸ்பெயின் தேசத்தாரின் ஆளுகையில் இருந்தன. அமெரிக்காவின் கிழக்குப் பக்கத்திலிருந்து மேற்குப் பக்கம் செல்லும் கப்பல்கள் தென் அமெரிக்காவைச் சுற்றிச் சென்றுகொண்டிருந்தன. இதனுல் பிரயாணச் செலவும், காலமும், தூரமும் அதிக மாயின. ஆதலால், நிகராகுவா என்னும் இடத்தில் ஒரு கால்வாயை வெட்டிப் பசிபிக் கடலையும் அத்லாந்திக் சமுத்திரத்தையும் இணைத்துத் தமது வியாபார வசதிகளைப் பெருக்கிக்கொள்ள ஆங்கில அரசாங்கத்தார் தீர்மானித்து அந்நதியையும், ஏரியையும் அவ்வேரிக்கு இருபுறமுள்ள ஊர்களையும் கைப்பற்றப் போர் தொடங்குமாறு ஜமேகா கவர்னருக்கு உத்தரவும் அனுப்பினர்

1780-ம் ஆண்டில் ஐந்நூறு மனிதர்களைக் கப்பலில் ஏற்றிக்கொண்டு ஜமேகாவிலிருந்து ஜுவான் நதி முகத்துவாரம் செல்லும்படி நெல்சனுக்கு உத்தரவு கிடைத்தது. அவ்வாறே நெல்சன் புறப்பட்டு, டையோஸ் முனை சென்று, செவ்விந்தியர்கள் அநேகரையும் அழைத்துக் கொண்டு, மார்ச்சு மாதம் ஜுவான்

நதியை அடைந்தான். நெல்சனது வேலை இதனுடன் முடிந்தது. ஆனால், இனிச் செய்யவேண்டிய வேலை அதிகம் இருந்தமையாலும், அநுபவ மில்லாதவர்களை விடுத்துப்போக மனமில்லாததாலும் சிப்பாய்களை நதிவழியே கொண்டுபோக நெல்சன் தீர்மானித்தான்.

நதியில் நீர் குறைவாயிருந்தமையாலும் அப்போது கோடைகாலம் ஆதலாலும் படையெடுத்துச் செல்லற்குத் தகுதியான பருவமாயில்லை. ஆனால், நெல்சனது விருப்பப்படியே எல்லோரும் புறப்பட்டனர். பகற்காலத்து வெய்யிலும் இராக்காலத்து மழையும் சிப்பாய்களின் மனத்திட்பத்தையும் மாய்த்தன.

ஒரு நாள் நெல்சன் அதிகக் களைப்புற்று ஒரு மரத்தின்கீழ்ப் படுத்துறங்கினான். அப்பொழுது ஒரு பாம்பு அவனது முகத்தின்மேலேறி அப்புறம் சென்றது. அதைப் பார்த்துக்கொண்டிருந்த செவ்விந்தியர்கள் உடனே நெல்சனிடஞ் சென்று அவனை நித்திரையினின்றும் எழுப்பினர். நெல்சன் விழித்தெழுந்ததும் தன்னருகே சுருண்டு படுத்திருந்த அரவினைக் கண்டான். நெல்சனுக்கு நற்காலம் நெருங்கியதெனவும், அவன் விரைவில் உயர்பதவி பெற்று இன்புற்று வாழ்வான் எனவும், நச்சரவம் முகத்தின்மேல் நகர்ந்து சென்றமையே அவனது பிற்காலப் பெருமைக்குச் சான்றெனவும் இந்தியர்கள் கூறினர். இவ்வுரைகளை நெல்சன் நம்பவில்லையெனினும் இவையனைத்தும் பின்னால் உண்மையாய் முடிந்தன.

இரண்டு வாரங்கட்குப் பின்னர் ஜுவான் கோட்டையை அணுகினர். அக்கோட்டையை உடனே தாக்கிக் கைப்பற்ற நெல்சன் விரும்பினான். ஆனால், சேனைத்தலைவன் அதற்கு இணங்கவில்லை. முதலில் முற்றுகை செய்தலே யுத்தமுறை எனவும் உடனே போர் தொடங்குவதால் இரு திறத்திலும் அநேகர் இறக்க நேரும் என்றும் சேனாதிபதி அபிப்பிராயப் பட்டார். தலைவனது மொழிப்படியே முற்றுகை ஆரம்பித்தது. மழைக்காலமும் வந்துற்றது. ஆங்கிலேயரது சேனையில் சிப்பாய்கள் அநேகர் இறந்து பட்டனர். இந்தியர்களும் அநேகர் மாண்டனர். பகைவர்களோ கோட்டைக்குள்ளிருந்து தற்காப்பைப் பலப்படுத்திக் கொண்டார்கள்.

இந்த நிலைமையில், உடனே புறப்பட்டு ஜமேகாவுக்குச் செல்லுமாறு நெல்சனுக்கு உத்தரவு கிடைத்தது. நெல்சனும் புறப்பட்டான். அவனது உடல் சீதபேதியால் நலிவுற்றுக் கவலைக் கிடமாயிற்று. படுக்கையிலிருந்து எழுந்து நிற்கவும் சக்தியற்றிருந்தான். கப்பலிலிருந்து ஜமேகாவில் இறங்கியதும் அவனைக் கட்டிலில் தூக்கிச் சென்றனர். எனவே, விடுமுறை பெற்று இங்கிலாந்து சென்றான்.

தனது வீட்டுக்குச் சென்றும் சுகம் எய்தினான் இல்லை. ஆகையால், உடல் நலத்தை முன்னிட்டுப் பாத் என்னும் ஊருக்கு அவனைக் கட்டிலில் தூக்கிச் சென்றனர். அங்கே அவன் பட்ட துன்பத்துக்கு

அளவேயில்லை. தனது உடல் நிலைமையினைக் குறித்து நெல்சன் எழுதிய கடிதங்கள் ஈங்குக் குறிப்பிடத் தக்கன.

"நான் நோய் வாய்ப்பட்டுப் படுக்கையிலிருந்து எழுதற்குப் பலமின்றி மல ஜலங் கழித்தற்கும் பிறரால் தூக்கிச் செல்லவேண்டிய நிலைமையிலிருக்கின்றேன். நான் படும் பாடு செப்புந் தரமன்று."

சிறிது சுகம் எய்திய பின்,

"பார்ஸ வாயுவினால் பீடிக்கப்பட்டு வெளிப் பார்வைக்கு முடவன்போலிருப்பினும் உள்ளத்தே உற்சாகமும் ஊக்கமுமுள்ள ஒரு புது மனிதனாய் இருக்கின்றேன்."

இன்னும் சிறிது சுகப்பட்ட பின்,

"இப்பொழுது எனது அவயவங்கள் என் ஏவற்படி இயங்குகின்றன. என் இடது கை மாத்திரம் பழையபடியே இருக்கின்றது. தோளிலிருந்து விரல் நுனி வரையிலுமுள்ள இடது பக்கம் முழுவதும் உயிரற்றாற் போல் உணர்வற்று இருக்கின்றது. காரணம் யாதென அறியேன்."

நிற்க, ஜுவான் கோட்டை முற்றுகையில் பகைவர் சரண்புகுந்தனர். எனினும், உணவின்மையாலும், சீதோஷ்ணத்தாலும், விஷ நோயாலும், மருந்தின்மையாலும் ஆங்கிலேயரது படை முழுதும் மாண்டொழிந்தது. எஞ்சி நின்ற சிலர் கோட்டையை விட்டு விட்டுத் திரும்பிச் சென்றனர். நெல்சனது விருப்பப்படி உடனே போர் தொடங்கியிருப்பின் கைப்பற்றிய

கோட்டையைக் கைவிட்டுச் செல்லும் அவசியமும், சேனையின் சேதமும் நிகழ்ந்திரா என்பதே ஆராய்ச்சியாளர் துணிபு.

நிற்க, ஒரு வருடம் சென்றபின் நெல்சன் உடல் நலம் எய்தினன். வயதும் இருபத்தைந்து ஆயிற்று. 1783-ம் வருடம் அக்டோபர் மாதம் பிரான்சு தேசத்தைப் பார்க்கச் சென்றான். பிரான்சு தேசத்தின் மீதும், பிரன்சுக்காரரின் பழக்க வழக்கங்கள் மீதும் நெல்சனுக்கு அருவருப்பு உண்டாயிற்று. பிரான்சு தேசத்தில் அப்பொழுது வசித்து வந்த ஓர் ஆங்கிலக் கன்னியைக் காதலித்து அவளை மணக்க விரும்பினன். இதைக் குறித்துத் தன் தமையனுக்கு நெல்சன் எழுதிய கடிதம் பின் வருமாறு,

"இன்று ஓர் ஆங்கிலப் பாதிரியாரது வீட்டுக்கு விருந்துண்ணச் சென்றேன். அவருடைய புத்திரியின் பேரழகும் கல்வித் திறமும் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. என் கையில் பத்து லட்சம் பவுன்கள் இருப்பின் அவற்றை அக்கன்னிகைக்குப் பரிசாகக் கொடுக்கப் பின்வாங்கேன். அவளைப் போன்ற நங்கையை நான் இதுவரையிலும் கண்டதே இல்லை."

மேற்குறித்த கடிதத்தை எழுதிய சில நாட்களுக்குள் நெல்சனுக்கு அக்கன்னிகையின்மீது அதிகப் பற்றுதல் உண்டாயிற்று. அவளை மணக்கத் தீர்மானித்தான். உடனே தனது மாமனுக்குக் கீழ்க்கண்ட கடிதம் எழுதினன்.

"இங்கேயுள்ள ஒரு கன்னிகையைக் காதலித்தேன். அவளையே மணக்கவும் தீர்மானித்தேன். கடிமணத்திற்குத் தடையாய் இருப்பது கையில் பணமில்லாமையே யாகும். அவ்வுதவியை உம்மிடத்திலிருந்து எதிர்பார்க்கின்றேன். நீர் என்னைக் கைவிடமாட்டீர் என நம்புகின்றேன். இன்பமற்ற வாழ்க்கையில் பயனில்லை என்பதே எனது துணிவு. அத் தகைய வாழ்க்கை இருத்தலினும் முடிவுறலே எற்றதாகும். நான் கோரிய உதவி உம்மால் மறுக்கப்படின் நான் செய்ய வேண்டுவது யாது என்பதை இப்போதே தீர்மானித்துவிட் டேன். என் மனதைப் பிளக்கும் துன்பம் தீயினுங் கொடியது. ஏனெனில், தீயால் வருவது நீரால் தணியும். ஆனால், எனது துன்பமோ நீருட் குளிப்பினும் தணியாது, குன்றேறி ஒளிப்பினுந் தணியாது."

மன்றல் செலவுக்குப் பணம் அனுப்புவதாக நெல் சனது மாமன் இசைந்தார். ஆனால், கடிமணமோ நடைபெறவில்லை. என்? அந்தக் கன்னிகை சம்மதப் படாமையே காரணமாயிருத்தல் கூடும் என யூகிக்க வேண்டியிருக்கின்றது.

# அத்தியாயம்—2

## திருமணம்.
## 1784—1793.

1784-ம் வருடம் மார்ச்சு மாதம் மேற்கு இந்தியத் தீவுகளுக்குச் செல்லுமாறு நெல்சனுக்கு உத்தரவு கிடைத்தது. நெல்சன் அங்குச் சென்றவுடன் கப்பற்றலைவனுக நியமிக்கப்பட்டான். அச்சிறு வயதிலேயே அத்துணை உயர்வான உத்தியோகம் தனக்குக் கிடைத்ததைக் குறித்துப் பெரிதும் மகிழ்வுற்றுன். யூகீஸ் என்பவர் அப்பொழுது படைத்தலைவராக இருந்தனர். அவர் வயது முதிர்ந்தவர்.

1783-ம் வருடம் நடந்த சுயேச்சைப் போரின் முடிவாக அமெரிக்காவுக்குச் சுயராஜ்யம் வழங்கப்பட்டது. அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் இருந்த சகல சம்பந்தங்களும் ஒழிந்து போனமையால் அமெரிக்கா ஓர் அந்நிய நாடென ஆங்கிலேயரால் கருதப்பட்டது. ஆனல், அமெரிக்கர்கள் மேற்கு இந்தியத் தீவுகளுடன் எவ்விதத் தடையுமின்றி வழக்கம்போல் வியாபாரஞ் செய்து வந்தனர். அமெரிக்கர்கள் அத்தீவுகளுக்குச் சாக்குகளை ஏற்றிச் சென்று, அவற்றை விற்றபின் ஆங்குள்ள சர்க்கரையை வாங்கிக் கொண்டு அமெரிக்கா போந்து, அதனை அங்கே விற்ற

பின் மீண்டும் மேற்கு இந்தியத் தீவுகளுக்குச் சரக்கேற்றிப் போவது வழக்கம். இவ்வித வசதியை முன்னிட்டு அமெரிக்கர்கள் தங்கள் சரக்குகளைக் குறைந்த இலாபத்திற்கே விற்று வந்தனர். மேற்கு இந்தியத் தீவினரும் அமெரிக்காவின் சரக்குகளையே வாங்கிவந்தனர். எனவே, இங்கிலாந்தின் சாமான்கள் அத்தீவுகளில் விலையாகாமற் போயின. கப்பற் படையினரும் அத்தீவுகளின் கவர்னர்களும் செய்வது இன்னதென அறியாமல் வாளாவிருந்தனர்.

நெல்சன் இதனைக் கண்டான். சமாதான காலங்களில் இங்கிலாந்தின் வியாபார முன்னேற்றத்தைக் கவனிக்கவேண்டுவது கப்பற் படையின் கடமை என்பதை உணர்ந்த நெல்சன், படைத் தலைவரான யூகீஸ் என்பவரிடஞ் சென்று, "ஐயா! நம் தாய் நாட்டின் வியாபாரத்தைக் காப்பாற்றுதல் நம் கடமை யாதலால் அமெரிக்காவின் வியாபாரக் கப்பல்களை நமது தீவுக்குள் வாராமற் செய்தலே முறைமையாகும். கடற் சட்டப்படி அவ்வதிகாரமும் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது" என்றான். "அத்தகைய சட்டம் இருப்பதாக எனக்குத் தெரியாது" என்று படைத்தலைவர் சொன்னவுடன், நெல்சன் புத்தகத்தை எடுத்துச் சட்டத்தைப் படித்துக் காட்டித் தெளிவுற விளக்கியபின் அவரும் இணங்கினார். பிறகு, "அமெரிக்கர்கள் இங்கிலாந்துக்கு அன்னியராதலால் அவர்கள் மேற்கு இந்தியத் தீவுகளோடு எவ்வித வியாபார சம்பந்தமும்

வைத்துக்கொள்ளாதபடி தடுக்கப்படவேண்டும்" என்ற ஓர் உத்தரவை நெல்சனுக்கு அனுப்பினர்.

இவ்வுத்தரவின்படியே நெல்சனும் அவனது நண்பனை காலிங்வுட்டும் தங்கள் துறைமுகங்களிற் காணப்படும் அமெரிக்கக் கப்பல்களை வெளியேற்றி வந்தனர். இவ்வாறு மாதம் ஒன்று கடந்தபின் படைத்தலைவரிடமிருந்து நெல்சனுக்கு ஓர் உத்தரவு கிடைத்தது. அதாவது,

"வியாபார விஷயமாகச் சட்ட நிபுணர்களைக் கலந்து பார்த்ததில் எனது முந்திய உத்தரவை ரத்துச் செய்து இப்புதிய உத்தரவைப் பிறப்பிக்கும் அவசியம் நேரிட்டது. அன்னியரது கப்பல்கள் நம் துறைமுகம் வரின் அவற்றை அங்கே தங்கச் செய்து அவ்விஷயத்தை அத்தீவின் கவர்னருக்குத் தெரியப்படுத்துக. அக்கப்பல்கள் துறைமுகத்தில் தங்கியிருக்கலாம் எனக் கவர்னர் தெரிவித்தால் அவற்றை அப்புறப்படுத்தவோ அன்றிக் கைப்பற்றவோ உமக்கு அதிகாரம் இல்லை எனத் தெரியப்படுத்துகிறேன்."

இவ்வுத்தரவைப் பார்த்தவுடன் நெல்சன் அனுப்பிய பதில் நிருபம் பின் வருமாறு,

"ஐயா! கடற் சட்டங்களை அமுலுக்குக் கொண்டு வரத் தக்கவர்கள் கப்பல் அதிகாரிகளே அன்றிக் கவர்னர்கள் அல்லர். சமாதான காலங்களில் தாய் நாட்டின் வியாபாரத்தைக் காப்பாற்றலே கடற்படையின் கடமையாகும். வியாபாரிகளின் பொய்யுரைகளையும் கவர்னர்கள் நம்பக் கூடும். ஆனால், எல்லாவற்றையும் நேரிற்காணும் கப்பல் உத்தியோகத்தர்களே உண்மையை உணர வல்லவர். நான் கப்பற்றலை

வனுக இருக்கும் வரையில் கவர்னர்களுக்கு அடங்கி இருக்கவாவது அல்லது சட்ட விரோதமான நடவடிக்கைகளில் அவர்களுடன் கலந்து கொள்ளவாவது நான் சம்மதியேன். ஆதலால், தங்களை நேரிற்கண்டு பேசும் வரையில் உமது உத்தரவின்படி நடக்க இயலாதவனுயிருக்கின்றேன். ஆயினும், மன்னிப்பீரென நம்புகின்றேன்."

இந்நிருபத்தைப் பார்த்ததும் யூகீஸுக்கு ஆற்ருெணுக் கோபம் பிறந்தது. இராணுவத்திலும் கடற்படையிலும் மேலதிகாரியின் உத்தரவை மீறினவர்களுக்கு மரணதண்டனை விதிப்பது வழக்கம். மேலதிகாரியின் உத்தரவை எவனுவது நிராகரிப்பின் படைத்தலைவரும் கப்பற்றலைவர்களும் சபை கூடி, நீதி விசாரித்துக் குற்றம் இழைத்தவற்கு மரண தண்டனை விதிப்பது உண்டு. நெல்சனை அவ்வாறு ஒழிக்க யூகீஸ் விரும்பினுர். ஆனுல், கப்பற்றலைவர்கள் எல்லோரும் நெல்சன் சார்பாக இருந்ததையுணர்ந்த யூகீஸ் அவ்வாறு செய்ய இயலாதவராய் வாளாவிருந்தனர்.

மேற்கு இந்தியத் தீவுகளுக்குச் செல்லும் அமெரிக்காவின் வியாபாரக் கப்பல்கள் பறிமுதல் செய்யப்படும் என்ற அறிக்கையை நெல்சன் வெளியிட்டான். இதனைப் பொருட்படுத்தாமல் வந்த நான்கு கப்பல்களை நெல்சன் பறிமுதல் செய்தான். உடனே, ஊரெங்கும் கலவரம் உண்டாயிற்று. அரசாங்க உத்தியோகத்தர், கவர்னர், பொது ஜனங்கள் முதலிய அனைவரும் நெல்சனைக் கண்டித்தனர். நாற்பதினுயிரம் பவுனுக்கு

நஷ்டதாவா நெல்சன்மீது தொடுக்கப்பட்டது. நெல்சனுக்குச் சம்மன் அனுப்பப்பட்டது. ஆனால், நெல்சனது கீழ் உத்தியோகத்தர் அதனை வழங்கவிடாமல் தடுத்து விட்டனர். நெல்சனைப் பலவந்தமாய்ப் பிடித்துக் கொண்டு போகப் பலர் பிரயத்தனம் செய்தனர். ஆனால், நெல்சனோ கப்பலைவிட்டு வெளிப் போகாமல் இரண்டு மாதகாலம் துன்பமுற்றான். மனக்கவலையால் அவனது உடல் நலமுங் குன்றியது. நெல்சனது துன்பத்தைக் கண்டு ஒருவன், "அந்தோ! பாவம்" என்றான். அவ்வுரை கேட்ட நெல்சன், "நான் இரக்கத்துக் குரியவன் அன்று, எனைக் கண்டு பிறர் பொறுமைப் படும்படி வாழ்பவன் நான்" என்று கம்பீரமாய் விடை யளித்தான்.

இந்த நிலைமையில், நிகழ்ந்தனவற்றையும் தனது நிலைமையையும் அரசாங்கத்தார்க்குத் தெரிவித்துத் தன்னைப் பாதுகாக்குமாறு நெல்சன் ஒரு விண்ணப்பம் அனுப்பினான். நெல்சன்மீது தொடுக்கப்பட்ட பிராது அரசாங்கத்தாரது செலவிலேயே நடத்தப்பட வேண்டுமென்றும், நெல்சனைப் பாதுகாக்க அரசாங்கத்தார் கடமைப்பட்டவர் என்றும் இங்கிலாந்திலிருந்து உத்தரவு பிறந்தது. தனது செய்கையை அரசாங்கத்தார் ஆமோதித்ததைக் குறித்து நெல்சனுக்கு அளவிலா மகிழ்ச்சி உண்டாயிற்று.

சில மாதங்கள் கழிந்தன. மேற்கு இந்தியத் தீவுகளில் சட்டத்துக்கு விரோதமாகவும் ஆங்கிலேய

ரின் வியாபாரத்துக்குப் பாதகமாகவும் அமெரிக்கர் செய்து வந்த வியாபாரத்தைத் தடை செய்யும் விடயத்தில் யூகீஸனும் அவாது கீழுத்தியோகத்தரும் எடுத்துக் கொண்ட சிரமத்தைக் குறித்துத் தாங்கள் அதிக திருப்தி அடைவதாகப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் தகவுரை அனுப்பினர். இதைக் கண்ட நெல்சனுக்கு மகிழ்ச்சி ஒரு புறமும் முனிவு ஒரு புறமும் உண்டாயின. அதைக் குறித்து, "பிரிட்டிஷ் அரசாங்கத்தார் உண்மையை உணர்ந்திலர். அவர்கள் என்னை முற்றிலும் மறந்து யூகீஸனுக்கு வந்தனம் அளிப்பது என் மனதைப் புண்படுத்துகின்றது. உடல் நலத்தையுங் கவனியாமல், உயிரையும் பொருட்படுத்தாமல் மேல் அதிகாரியின் உத்தரவை நிராகரித்துத் தைரியத்துடன் நான் ஊழியம் புரிந்திருக்க அம்மேலதிகாரிக்கே வந்தனம் அளிக்கப்படுமாயின் அதனை நான் எங்ஙனம் சகிக்கக் கூடும். நான் செய்தது தவறாயின் என்னைத் தக்கபடி தண்டித்திருத்தல் வேண்டும்; சரியாயின், என் செய்கையினை ஆமோதித்துத் தகவுரைகள் அனுப்பியிருத்தல் வேண்டும். செய்கையோ தக்கது என அறிவித்து, செய்தவனை முற்றிலும் மறப்பது முறைமையன்று. உண்மையுடனும், ஊக்கத்துடனும் உழைத்தமைக்கு இதுவே பரிசாயின் என் உறுதியும், ஊக்கமும் இனி என்னாகும்? ஆனால், என்மீது குறையின்றி என் கடமையை ஆற்றினேன். இதைக் காட்டிலும் பெரிய பரிசு வேறும் உளதோ?" என்று நெல்சன் மனம் நொந்து உரைத்தான்.

பிறகு, அந்நியாது வியாபாரம் முற்றிலும் தடை செய்யப்பட்டது. நாளடைவில் ஜனங்களும் அமைதி யுற்றனர்.

இத்தருணத்தில், ஹேர்பர்ட் என்னும் தனவந்தர் ஒருவர் இருந்தார். அவருக்குப் புத்திரன் இல்லை; புத்திரி ஒருத்தியே இருந்தனள். அவரது தமையனுக்கும் ஒரே புத்திரி இருந்தாள். அவள் சிறு வயதில் கணவனை இழந்து விதவையானாள். கணவன் இறக்கும்போது அவளுக்கு நிஸ்பெட் என்னும் பெயருடைய ஒரு புத்திரனிருந்தான். அவ்விதவைப் பெண் தனது புத்திரனை அழைத்துக் கொண்டு சிறிய தந்தையாகிய ஹெர்பர்ட்டின் வீட்டுக்குச் சென்று அவருடன் வசித்து வந்தனள்.

ஒரு நாள் ஹெர்பர்ட்டின் வீட்டுக்கு நெல்சன் சென்றான். அங்கே விளையாடிக் கொண்டிருந்த நிஸ்பெட்டைக் கண்டு நெல்சன் சந்தோஷமுற்றுத் தானும் அப்பையனிடம் சிறிது நேரம் விளையாடிக் கொண்டிருந்தான். அச்சிறுவன்மீது நெல்சனுக்கு விருப்பம் உண்டாயிற்று. ஹெர்பர்ட்டு இவற்றை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தார். சிறிது நேரம் சென்றபின் நெல்சன் விடை பெற்றுத் திரும்பிச் சென்றான்.

சில வாரங்கள் கடந்தபின் நெல்சன் மறு முறையும் ஹெர்பர்ட்டின் வீட்டுக்குச் சென்றான். அவரும் தமது தமையனுடைய புத்திரியை நெல்சனுக்கு அறி

முகப்படுத்தினர். அம்மங்கை நெல்சனைப் பார்த்து, "ஐயா! எனது புதல்வனிடத்துத் தாங்கள் முன்னொரு நாள் அதிக அன்பு காட்டியதாக என் சிறிய தந்தை யாரால் கேள்வியுற்றேன். ஆதலால், எனது மனமார்ந்த வந்தனங்களை உமக்குத் தெரியப்படுத்துகின்றேன்" என்று கூறினள். அம்மங்கையின் மதுர மொழிகளையும், இனிய குரலையும், அடக்கத்தையும் நெல்சன் கண்டான். நெல்சனது தோளின் வனப்பையும், கம்பீரமான பார்வையையும் அவளும் கண்டாள். இருவரும் ஒருவர் உள்ளத்தை ஒருவர் கொள்ளை கொண்டனர். இருவரும் காதலித்தனர்.

பல மாதங்கட்குப் பின், 1787-ம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் இருவர்க்கும் திருமணம் நடைபெற்றது. வில்லியம் ஹென்றி என்னும் இளவரசரும் அம்மன்றற்கு விஜயம் செய்தனர். ஹெர்பர்ட் என்பவர் தமது சொந்த புத்திரியின் நடக்கையைக் குறித்து வெறுப்புற்றமையால் அவளைப் புறக்கணித்துவிட்டுத் தமது சொத்துக்கள் அனைத்தையும் நெல்சனது மனைவிக்கே கொடுத்துவிடத் தீர்மானித்தார். ஆனல், நெல்சன் அதற்குச் சம்மதப்படாமல், தந்தைக்கும் மகளுக்கும் ஒற்றுமை உண்டாக்கி இருவரையும் சமாதானப் படுத்தினன்.

நெல்சனது திருமணத்தைக் கேள்வியுற்ற ஒருவன், "நம் கப்பற்படை ஓர் ஒப்பற்ற வீரனை இழந்தது. இல்லறத்தில் இறங்கிய நெல்சன் இனிக் கப்பற்றொழி

ற்கு ஒப்புவனே? நெல்சனது விவாகத்தால் நமது தாய் நாட்டுக்குப் பெரியதோர் நஷ்டம் நேர்ந்தது" என்று சொன்னான். இதை உரைத்தவன் நெல்சனது ஆற்றலை நன்கு உணர்ந்தவனே யெனினும் வீரமும் தீரமும் ஓர் உருவாய்ப் பிறந்து தேசத் தொண்டையே தனது இலட்சியமாகக் கொண்ட நெல்சனது உள்ளக்கிடக்கையை அவன் அறிந்திலன். என்? தேசப் பற்று உடையவர் நெஞ்சில் இல்லறப் பற்றும் சிற்றின்ப விருப்பமும் பதிந்து நில்லாவென்பதை அறியானதலின்.

விவாகம் முடிந்த பின்னர், நெல்சன் தொழிலின் காரணமாய் மனைவியைப் பிரிந்து வாழ நேர்ந்தது.

நட்டார் குறைமுடியார், நன்றாற்றார், நன்னுதலாள்
பெட்டாங் கொழுகு பவர். —திருக்குறள்.

என்பதனை யுணர்ந்த நெல்சன் தனது மனைவிக்கு எழுதிய கடிதங்கள் பல உண்டு. அவற்றில் ஒன்று ஈங்குக் குறிப்பிடத் தக்கது.

"ஆருயிர்க் காதலி! உன் அன்பார்ந்த திருபத்தைக் கண்டேன். அதில் குறித்துள்ள அன்பின் வயத்ததான உட் கருத்துக்களைப் பார்த்ததும் எனக்குண்டான மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. உன்னுடன் கூடி இருத்தலே எனது விருப்பம். இல்வாழ்க்கையின் இன்பத்தையும், அன்பின் திறத்தையும், காதலின் பெருமையையும் உன்னிடமிருந்தே உணர்ந்தேன். உன் பிரிவு என் மனதைப் பிளக்கின்றது. எனினும், ஒன்று கேள். நமது முதற் கடமை தேசத்திற்கே ஆகும். நமது சொந்த சௌகரியங்கள் பொது ஜன சேவையை முன்

னிட்டுத் தியாகம் செய்யப்படவேண்டும். கடமையே கடல் உத்தியோகத்தரின் முதல் நோக்கமாகும். பிறவெலாம் அதற் குப் பிந்தியவைகளேயாம். மேலும், இப்பிரிவு நம் அன் பினைக் குறைக்க வல்லதன்று. அன்பினை வளர்ப்பது மன உணர்ச்சியே யாகும். உண்மை அன்பிற்கு இறுதியும் உண்டோ?"

நெல்சனது தேசப் பற்றையும், உயரிய இலட்சி யத்தையும் விளக்குதற்கு இந்நிருபம் ஒன்றே போது மானதன்றோ?

கப்பற் படைக்குச் சாமான்கள் விற்றுவந்த வியா பாரிகள் ஏராளமான சுங்கம் பிடித்து அரசாங்கத்தை ஏமாற்றிக் கொள்ளை அடித்து வந்தார்கள். இதனை யறிந்த நெல்சன் அவ்வூழலை ஒழிக்க விரும்பினன். சாமான்கள் வாங்கியதற்கு ரசீதுகள் காண்பித்தாலன் றிப் பணம் கொடுக்க முடியாதென்று நெல்சன் கூறி னன். ஆனால், ரசீதுகள் பெறுவது வழக்கமில்லை யென்றும், அவ்வாறு பெறுதல் முடியாத காரியமென் றும் அறிந்தபின் அவ்வநியாய வழக்கத்தினைத் தடுக்க முடியாத நிலைமையிலிருந்தான். அத்தருணத்தில், அம்மோசடியில் உடந்தையா யிருந்த சிலர் தங்கள் கணக்குப் புத்தகங்களைக் கொண்டுவந்து நெல்சனுக்குக் காண்பித்து உண்மையைக் கரவாது உரைத்தனர். அக் கணக்குகள் முழுவதையும் நெல்சன் பரிசோதித்துப் பார்த்தான். இலட்சக் கணக்கான பவுன்கள் கொள்ளையிடப் பட்டுள்ளதை அறிந்த நெல்சன் அக் கணக்குகளை அரசாங்கத்தார்க்கு அனுப்பினன்.

மோசக்காரர்கள் அதிகச் செல்வாக்கு உடையவர்கள். ஆதலால் அரசாங்கத்தார் அவர்கள்மீது எவ்வித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளாமல் வாளாவிருந்தது மன்றி நெல்சன்மீது அருவருப்புங் கொண்டனர்.

சில மாதங்கள் கடந்தபின் உடல் நலங் குன்றியமையால் நெல்சன் விடுமுறை பெற்று மனைவியுடன் இங்கிலாந்துக்குச் சென்று தனது தந்தையகம் எகினன். நெல்சனது தந்தையார் நோய் வாய்ப்பட்டு இறக்குந் தருவாயிலிருந்தார். வைத்தியர்களும் கைவிட்டனர். ஆதலால், உடல் நலத்தை முன்னிட்டுப் பாத் என்னும் இடம் சென்று சில காலம் வசித்து வந்தனர். தந்தை சிறிது சுகமடைந்த பின்னர், பிரஞ்சு பாஷையைக் கசடறக் கற்க நினைத்துப் பிரான்சுக்குப் போகத் தந்தையிடம் நெல்சன் உத்தரவு வேண்டினன். அதற்கு அக்கிழவர், "மைந்தனே! உன்னைக் கண்டவுடன் எனது நோயும் பறந்து போயிற்று. எனக்கு வயது முதிர்ந்து விட்டது. இன்னும் சிறிது காலமே உயிருடனிருப்பேன். அது வரையிலும் நீ என்னுடனிருந்து ஆனந்தம் அளிப்பாயாக" என்று கூறினர். இத்தகைய வேண்டுகோளுக்கு வேறு பதிலும் உண்டோ? நெல்சன், தந்தையின் வார்த்தையைச் சிரமேற் கொண்டு அவருடனே வசித்து வந்தான்.

இடையிடையே நெல்சன் கப்பல் மந்திரியிடஞ் சென்று மேற்கு இந்தியத் தீவுகளில் அரசாங்கத்தை

ஏமாற்றி வரும் மோசடிக்காரரின் வஞ்சகத்தை விள க்கிவந்தான். நெல்சன் சொல்லிய யாவும் சரியென அரசாங்கத்தார் ஒப்புக்கொண்டனர். நெல்சனுல் பிரேரேபிக்கப்பட்ட ஒவ்வொரு தடை முறையும் கையா ளப்பட்டது. விசாரணையின் முடிவாகச் சிலர் தண்டிக் கப்பட்டனர். அரசாங்கத்தார்க்கு இதனுல் ஏராள மான இலாபம் உண்டாயிற்று. ஆனுல், நெல்சனுக்கு எவ்விதப் பரிசும் அரசாங்கத்தால் அளிக்கப்படவில்லை.

குதிரை ஒன்று வாங்கவேண்டும் என்று நெல்சன் நெடுநாளாக எண்ணியிருந்தான். ஒரு நாள், குதிரை வாங்கும் பொருட்டு நெல்சன் சந்தைக்குச் சென்றுன். அப்பொழுது, இரண்டு பேர்கள் நெல்சனது வீட்டுக் குச் சென்று, அவன் மனைவியிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்து, புருஷன் வந்தவுடன் அவனிடம் அதனைக் கொடுக்குமாறு சொல்லிப் போயினர். நெல்சன் ஒரு சிறு குதிரையை வாங்கிக் கொண்டு மாலையில் வீட் டுக்குச் சென்றதும் அக்குதிரையைப் பற்றிச் சிறப் பாக மனைவியிடம் பேசிக்கொண்டிருந்தான். அப் போது, அவள் அக்கடிதத்தை நெல்சனிடம் கொடு த்தாள். அமெரிக்காது கப்பல்களைப் பறிமுதல் செய் தமைக்காக நெல்சன் இருபதினுயிரம் பவுன்கள் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்று அதில் குறித்திருந்தது. அதனைப் பார்த்தவுடன் நெல்சனுக்கு அளவற்ற கோபம் பிறந்து, "இவ்விஷயத்தைக் குறித்து நான் ஒரு பைசாவேனும் செலவு செய்யமாட்டேன். இந்த

அவமானத்திற்கு நான் உரியவன் அன்று. என்னை ஆதரிக்க அரசாங்கம் கடமைப் பட்டுள்ளது. அவர்களும் என்னை ஆதரிக்காமல் கைவிடின் நான் பிரான்சு தேசம் சென்று சரண் புகுவேன் " என்று மனம் நைந்துரைத்தான். உடனே, தான் கூறியவாறே அரசாங்கத்துக்கு ஓர் நிருபம் அனுப்பிவிட்டுப் பிரான்சுக்குப் போகத் தயாராயிருந்தான். அரசாங்கத்தார் நெல்சனை ஆதரிப்பதாக வாக்களித்தனர். நெல்சனும் அமைதி யுற்ருன்.

தனக்கு ஒரு வேலை கொடுக்கும்படி நெல்சன் அரசாங்கத்துக்கு ஓர் விண்ணப்பம் அனுப்பினுன். ஆனுல், அது கவனிக்கப்படவில்லை. இதுவரையிலும் நெல்சனுக்கு அடிக்கடி சிபார்சு செய்துவந்த மாரீஸும் இறந்து விட்டனர். எனவே, வேலையில்லாமல் நெல்சன் பெரிதும் இடர்ப் பட்டான். உத்தியோக வேட்டைக்குக் கேவலம் மதிநுட்பமும், தொழில் வல்லமையும் மாத்திரம் போதுமானவை அல்ல. உயர் குலப் பிறப்பு, செல்வம், செல்வாக்கு, சிபார்சு முதலியன இல்லாமல் ஒரு உத்தியோகம் கிடைப்பதரிது. இவற்றில் ஒன்றேனும் இல்லாத நெல்சன் எளிதில் உத்தியோகம் பெறுதல் எங்ஙனம் கூடும்? அரசாங்கத்துக்குப் பன்முறையும் விண்ணப்பம் அனுப்பினுன். ஆனுல் அவ்வளவும் அவலமாயின. நெல்சன் ஐந்து வருட காலம் வேலையின்றிக் கவலை யுற்றிருந்தான்.

# அத்தியாயம்—3.

## மத்திய தரைக்கடல் யுத்தங்கள்

## 1793—1797.

இது இங்ஙனமிருக்க, பிரான்சு தேசத்தில் அரசியற் புரட்சி எற்பட்டது. அதற்குப் பல காரணங்கள் உண்டு. அரச குடும்பத்தாரும், பிரபு வம்சத்தினரும் பொது ஜனங்களைத் தாழ்த்தியும் துன்புறுத்தியும் வந்தனர். ஏழை மக்கள் பாடு பட்டு உழைத்தும் பசிப்பிணி அகலாது பெரிதும் வருந்தினர். பெரும்பான்மையோரான ஏழை மக்கள், சிறுபான்மையரான பிரபுக்களால் பலவகையிலும் தாழ்த்தப்பட்டு, எவ்வித உரிமையு மின்றி இடர்ப்பட்டனர். இவ்வித கொடுமைகளைப் பொறுக்கமுடியாமல் ஏழை மக்கள் புரட்சியில் இறங்கினர். பிரான்சு எங்கும் களவும் கொலையும் மலிந்தன. பிரபு வம்சத்தினர்கள் ஆங்காங்குத் தாக்கப்பட்டுக் கொலையுண்டனர். அரச குடும்பத்தாரின் மாளிகைகளும் தாக்கப்பட்டன. அரச வம்சத்தினரும் பிரபுக்களும் பயந்து தத்தம் மாளிகைகளினின்றும் ஓடி வெளியேறினர். இப்புரட்சி நான்கு வருட காலம் நீடித்தது. கடைசியாக 1793-ம் வருடம் ஜனவரி மாதம் 21-ம் தேதியன்று பிரான்சு தேசத்தினர்

தமது அரசரான பதினாறுவது லூயி என்பவரைத் தூக்கிலிட்டுக் கொன்றனர். சின்னாட் கழிந்தபின் அரசியையும் கழுவேற்றினர். அரசனையும் அரசியையும் கொன்று வீழ்த்தியபின் பிரான்சு தேசத்தில் குடியரசு நிறுவப்பட்டது. இதனைக் கண்ட ஐரோப்பாவின் மன்னர்கள் எல்லோரும் நடு நடுங்கினர். அந்தக் குடியரசு இயக்கத்தை அடியோடு ஒழிக்க எல்லாரும் முன் வந்தனர். எனவே, இங்கிலாந்து தேசமும் பிரான்சின்மீது பகைமை கொண்டு போருக்குத் தயாரானது. ஆதலால் 1793-ம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ம் தேதி, அகமெம்னன் என்னும் கப்பலிற் சேருமாறு நெல்சனுக்கு உத்தரவு கிடைத்தது.

நெல்சனும் விருப்பமுடன் வேலையில் அமர்ந்தான். நெல்சனுடன் நிஸ்பெட்டும் சென்றான். ஒரு நாள் நெல்சன் தனது கீழ் உத்தியோகத்தர்களைப் பார்த்து, "நீர் எப்பொழுதும் ஞாபகத்தில் வைக்கவேண்டுவன மூன்றுண்டு. முதலாவதாக, மேல் அதிகாரிகளின் உத்தரவுக்கு உடனே கீழ்ப்படிதல் வேண்டும்; இரண்டாவதாக, நமது அரசரை இகழ்ந்து பேசுபவனை நமது விரோதியெனக் கருதல் வேண்டும்; மூன்றாவதாக, பிரான்சுக்காரர்களைப் பெரிதும் வெறுக்க வேண்டும்" என்று அறிவுரை கூறினான். நெல்சனது கப்பல் லார்டு ஹூட் என்பவரின் தலைமையின்கீழ் மத்திய தரைக் கடலுக்கு அனுப்பப்பட்டது.

தவுலன் என்பது பிரான்சு தேசத்தின் சிறந்த துறைமுகப் பட்டினமாகும். அப்பட்டினத்தில் கப்பற் படையும், பீரங்கிப் படையும், ஆயுதச் சாலையுமிருந்தன. சுமார் இருபத்தையாயிரம் ஜனங்கள் அதில் வசித்து வந்தனர். இவர்களில் பெரும்பான்மையோர் பிரபு வம்சத்தினர். பிரான்சு தேசத்தின் பிற பாகங்களி லிருந்து பயந்து ஓடிய பிரபுக்களும் தவுலனில் குடியேறி அவ்வூர் வாசிகளுடன் கலந்து கொண்டனர். இவர்கள் எல்லோரும் ஒன்று கூடிக் கோட்டையையும், படை வீட்டையும், கப்பல்களையும், அவ்வூரையும் ஆங்கிலேயரிடம் ஒப்புவித்தனர். ஆங்கிலேயர்களும் ஆகஸ்டு மாதம் உள் நுழைந்து அனைத்தையுங் கைப்பற்றினர்.

இதையறிந்த பிரான்சு தேசத்தின் ஜனாதிபத்திய அரசாங்கத்தார் தவுலன் பட்டினத்தைக் கைப்பற்று மாறு நெபோலியன் என்ற ஓர் வீரனை அனுப்பினார்கள். அவ்வீரனும் போர்க்களம் சென்று ஊண் உறக்கமின்றி விடா முயற்சியுடன் பொருதனன். தவுலன் பட்டினத்தை ஆங்கிலேயர் டிசம்பர் மாதம் விடுத்துச் சென்றனர். அப்பட்டினம் மீண்டும் பிரான்சுக்குச் சொந்தமாயிற்று.

தவுலன் முற்றுகையை நீத்தவுடன் ஆங்கிலேயர் கார்சிகா மீது கவனத்தைச் செலுத்தினர். கார்சிகா அப்பொழுது பிரன்சுக்காரர்களின் ஆதிக்கத்தில் இருந்தது. பிரன்சுக்காரர்களைக் கார்சிகாவிலிருந்து துரத்த எண்ணிப் பாஸ்டியா என்னும் ஊரினை முற்றுகை செய்

தனர். 1200 வீரர்கள் அடங்கிய ஓர் சிறிய இராணுவப்படையும் வந்து சேர்ந்தது. பிரன்சுக்காரரின் சேனை நெல்சனது படையைக் காட்டிலும் இருமடங்கு அதிக எண்ணிக்கை உடையதாயிருந்தது. இதை நெல்சன் அறிந்தும், தனது வீரர்கள் அஞ்சிப் பின்வாங்கக்கூடும் என எண்ணி, வேறெவர்க்கும் உண்மையை வெளியிடாது இருந்தான். முற்றுகை நடந்தது. இராணுவ வீரர்களும் மாலுமிகளும் உற்சாகத்துடன் முனைந்து போர் புரிந்தனர். பிரன்சுக்காரர்களும் தற்காப்பைப் பலப்படுத்திக் கொண்டு முனைந்து நின்றனர். கடைசியாக, நெல்சன் வெற்றி பெற்றான். இவ்வெற்றியைக் குறித்து, "பகைவர்கள் நம்மினும் இருமடங்கு அதிக எண்ணிக்கையாய் இருந்தனர். இதனை நான் முதலிலேயே வெளிப்படுத்தி இருப்பின் எனது யோக்கியதையும் நம் தாய் நாட்டின் பெருமையும் பறந்து போயிருக்கும். ஒரு ஆங்கிலேயன் மூன்று பிரன்சுக்காரருக்குச் சமமானவன் என்பதே எனது நம்பிக்கை. அந்நம்பிக்கையை இம்முற்றுகை நிரூபித்து விட்டது" என்று நெல்சன் தன் மனைவிக்கு நிருபம் வரைந்தான். இவ்வெற்றிக்கு முதற் காரணம் நெல்சனே எனினும் தகவுரையும் பரிசுகளும் பெற்றவர்கள் பிறரே யாவர். லார்டு ஹூட்டும் நெல்சனை நேரிற் புகழ்ந்தாரே யன்றி அவனது வீரத்தைக் குறித்து அரசாங்கத்தார்க்குத் தெரிவித்தார் இல்லை.

பிறகு, கார்சிகாவின் வடமேற்கிலுள்ள கால்வி என்னும் ஊரை முற்றுகையிட எண்ணி லார்ட்

ஹூட்டும் நெல்சனும் கப்பற் படையுடன் சென்றனர். முற்றுகை ஆரம்பம் ஆயிற்று. நெல்சன் அயர்வின்றி உழைத்து வந்தான். அவ்வூரின் சீதோஷ்ணத்தால் அநேக ஆங்கிலேய வீரர்கள் நோய்வாய்ப் பட்டனர். வெய்யிலின் கொடுமையைச் சகிக்கமாட்டாமல் அநேகர் மனம் தளர்ந்தனர். பகைவர்களோ படைவலியும் போர்த்திறனுங் கொண்டு அஞ்சாமற் பொருதனர்.

இம்முற்றுகை காலத்தில் நெல்சன் தன் மனைவிக்கு எழுதிய கடிதத்தில், "இம்முற்றுகையில் இரு திறத்தினரும் முனைந்து நிற்கின்றனர். கடவுளின் திருவுளப்படியே இம்முற்றுகை முடிவதாகுக. இப்போரில் நான் உயிர் துறக்க நேர்ந்தால் உன்னையும் நம் குடும்பத்தாரையும் காப்பாற்ற அரசர் கடமைப்பட்டுள்ளார். எனக்கும் என்னைச் சார்ந்தார்க்கும் எவ்விதப் பழியும் இன்றி நான் என் கடமையைச் செலுத்துகின்றேன். உன்னையும் உனது மைந்தனையும் கடவுள் காப்பாற்றுவாராக" என்று குறித்துள்ளான்.

இம்முற்றுகையில் நெல்சனுக் கருகே பகைவரின் துப்பாக்கிக் குண்டு ஒன்று தரையில் விழுந்தது. அது விழுந்த வேகத்தால் எழுந்த கற்களில் ஒன்று நெல்சனது வலது கண்ணில் தைத்தது. இதனை நெல்சன் பொருட்படுத்தாமல் இருந்தான். ஆனால் அவ்வேதனையின் மிகுதியால் ஒருநாள் முழுதும் நெல்சன் துன்புற்றான்; இதன் முடிவாக அக்கண்பார்வை

இழந்தான்; ஆனால் காரிகையாலுயர்ந்தான்; விழுப் புண் படலன்றோ வீரர்க்கழகு.

> விழித்தகண் வேல்கொண் டெறிய அழித்திமைப்பின்
> ஓட்டன்றோ வன்க ணவர்க்கு. —திருக்குறள்.

முற்றுகை அநேக நாள் நடந்தது. கடைசியில் ஆங்கிலேயர் வெற்றியுற்றனர். நெல்சனது வீரச் செயல்கள் முன்னுக்கு வரவில்லை. அடிபட்டவர்களின் ஜாபிதாவிலும் அவன் பெயர் காணப்படவில்லை. இதைக் குறித்து, "நூற்றுப் பத்து நாட்களாகப் பகைவர்களைப் பின்றொடர்ந்து கடலிலும் கரையோரங்களிலும் காலம் கழித்தேன். பகைவரின் கப்பல்கள் பன்னிரண்டைத் தீக்கிரை யாக்கினேன். இரண்டு ஊர்களையும் கைப்பற்றினேன். ஒரு கண்ணையும் இழந்தேன். இவ்வாறிருந்தும், அரசாங்கத்தார் என்னை முற்றிலும் மறந்து மற்றவர்களைப் புகழ்ந்திருப்பது எனது துரதிர்ஷ்டமே யாகும்" என்று நெல்சன் மனம் நைந்து உரைத்தான்.

கால்வியைக் கைப்பற்றியபின் மத்திய தரைக்கடலில் நெல்சன் புரிந்த சில்லரைச் சண்டைகள் பல உள. அவற்றை விரிவஞ்சி விடுத்தனம். இச்சண்டைகளில் நெல்சனே வெற்றிபெற்றமையால் கப்பற் சண்டையில் நெல்சன் ஒப்பற்று விளங்கினான். அவன் புகழ் உலகெங்கும் பரவியது. நெல்சனது பெயரைக் கேட்டவளவில் பகைவர்கள் இடியேறுண்ட நாகம் போல் கலங்கினர்.

இத்தருணத்தில், அரசாங்கத்துக்கும் தமக்கும் உண்டான அபிப்பிராயப் பேதத்தினால் ஹூட் என்பவர் தமது வேலையை இராஜீநாமா செய்து விட்டார். அவருக்குப் பதிலாக சர்ஜான் ஜெர்விஸ் என்பவர் படைத்தலைவராக நியமிக்கப்பட்டார். நெல்சனது மதி நுட்பத்தையும் நிபுணத் தன்மையையும் ஜெர்விஸ் நன்கு உணர்ந்தவராதலால் அவர் நெல்சனை அன்புடன் ஆதரித்து வந்தார்.

இந்தச் சமயத்தில் ஸ்பெயின் தேசம் பிரான்சு தேசத்துடன் நட்புக் கொண்டு சமாதானம் செய்து கொண்டது. எனவே, ஸ்பேனியரும் ஆங்கிலேயருக்கு விரோதிகள் ஆயினர்.

இங்ஙனமிருக்க, ஒரு நாள் நெல்சன் தனது நண்பரான ஹார்டி என்பவருடன் ஓர் தனிக் கப்பலில் ஜிப்ரால்டருக்கு அருகே போய்க் கொண்டிருந்தான். இதைக் கண்ட ஸ்பேனியக் கப்பற்படை நெல்சனைத் துரத்திச் சென்றது. நெல்சனது கப்பல் பகைவர்களால் கைப்பற்றப்படுந் தருவாயில் இருந்தது. அத்தருணத்திலும் நெல்சன் தைரியத்தைக் கைவிடாமலிருந்தான். "பற்றலரைக் கண்டு பணிவேனல்லேன்; உற்றவிடத்தில் உயிர் வழங்குந் தன்மையேனாதலின் அவர்களை எதிர்த்தே தீருவேன்" என்று நெல்சன் சொன்னான்.

இந்நெருக்கடியான நிலையில் நெல்சனது கப்பலி லிருந்து ஒரு மனிதன் தவறிக் கடலில் விழுந்தான். ஹார்டி என்பவர் உடனே ஒரு படகிற் சென்று அம்மனிதனைக் காப்பாற்ற முயன்றும் பயனின்றி முடிந்தது. கப்பலை விரைவாக ஓட்டிச் சென்றால் ஹார்டி திரும்பி வரமுடியாது. சிறிது நேரம் நிறுத்தி னால் பகைவர்கள் கப்பலைக் கைப்பற்றுவது திண்ணம். நண்பனைக் காப்பாற்றித் தானும் அந்நண்பனும் பகை வரிடம் சிறைபுகுவதா அல்லது கப்பலைக் காப்பாற்றி நண்பனை இழப்பதா என்னும் சங்கை பிறந்தது. கப்ப லுடனும், நண்பனுடனும் பகைவர்பால் சரண்புகு வதைக் காட்டிலும் நண்பனை இழப்பதே சாலச் சிறந்த தொன்றும். ஆனால், நெல்சன் அவ்வாறு செய்யாமல் தனது நண்பனைக் காப்பாற்றக் கருதிக் கப்பலை நிறுத்தி னான்.

நெல்சன் போர் தொடங்க எண்ணிக் கப்பலை நிறுத்தினான் எனப் பகைவர்கள் கருதினர்கள். முக லில் வந்து கொண்டிருந்த கப்பற்றலைவன் நெல்சனுடன் தனியே போர் செய அஞ்சியதால் மற்றைக் கப்பல் களும் வந்தவுடன் போர் தொடங்கலாமென்றெண்ணித் தனது கப்பலையும் நிறுத்தினன். பகைவர்கள் இவ் வாறு ஏமாற்றம் எய்திக் காலத்தை வீணாக்கினர் இதற்குள் ஹார்டியும் விரைவாகச் சென்று தமது கப்ப லிற் சேர்ந்தார். சேர்ந்ததும், நெல்சன் கப்பலை விரை வாகச் செலுத்திப் பகைவர்களுக்கு அகப்படாமல்

தனது கப்பற்படையுடன் சேர்ந்தான். பகைவர்களும் நெல்சனைத் துரத்திக் கொண்டே சென்று, அன்றிரவு ஆங்கிலேயரது கப்பற் படையை நாற்புறமும் சூழ்ந்து கொண்டனர். மூடுபனியின் மிகுதியால் ஆங்கிலேயர் இதைக் கவனிக்கவில்லை.

மறுநாட்காலை எட்டு மணிக்குத்தான் கப்பல் அதிகாரியான ஜெர்விஸ் என்பவர் தமது நிலைமையை அறிந்தார். உடனே யுத்தத்துக்குத் தயாராயினர். பகைவரின் படைவலியை அறிந்தும் ஆங்கிலேயர்கள் அஞ்சினரில்லை. வின்சேண்ட் என்னுமிடத்தில் யுத்தம் ஆரம்பித்தது. ஆங்கிலேயர்கள் பீரங்கிப் பிரயோகத்தை ஆரம்பித்தவுடன் பகைவர்கள் தைரியத்தைக் கைவிட்டனர். நெல்சனுடைய வீரமும் ஆற்றலும் எதிரிகளை அஞ்சச் செய்தன. எங்கணும் நெல்சனே காணப்பட்டான். பகைவர்களின் கப்பல்கள் பாய்மரங்களற்றுச் சிதறின.

நெல்சன் பகைவர்களின் கப்பல்களுக்குச் சென்றதும் அக்கப்பற்றலைவர்கள் தத்தம் பட்டாக்கத்திகளை அவனிடம் தந்தனர். எனவே, ஸ்பேனியர்கள் முறியடிக்கப்பட்டுச் சுழல் காற்றுற்ற செத்தைபோல் பறந்தனர். ஆங்கிலேயர் வெற்றி பெற்றனர்.

ஒலித்தக்கா லென்னும் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும். —திருக்குறள்

இச்சண்டையில் நெல்சனது வயிற்றில் ஒரு பலத்த அடிபட்டது. இவ்வெற்றிக்குக் காரணம் நெல்சனே எனினும் வழக்கம்போல் அவன் பெயர் முன்னுக்கு வரவில்லை. நெல்சனது வீரச் செயல்களைப் படைத் தலைவரும் அரசாங்கத்துக்குத் தெரியப்படுத்தவில்லை. ஆனால், ஜெர்விஸ்ஸுக்கு லார்ட் சேண்ட் வின் சேண்ட் என்ற பட்டம் கொடுக்கப்பட்டது.

அரசாங்கத்தின் பரிசையோ அல்லது தகவுரைகளையோ நெல்சன் பெறவில்லை எனினும் அவனுடைய கீழ் உத்தியோகத்தாராலும் நண்பர்களாலும் பெரிதும் போற்றப்பட்டனன்.

உறினுயி ரஞ்சா மறவர் இறைவன்
செறினுஞ்சீர் குன்றல் இலர். — திருக்குறள்

நெல்சன்மீது இருந்த அன்பின் திறத்தால் அவர்கள் நெல்சனுக்காக உயிரையும் இழக்கத் தயாராயிருந்தனர். நெல்சனே அவர்களைச் சகோதரர்களைப்போல் நடத்தி வந்தான். அவர்களிடத்து எப்பொழுதும் இனிய வார்த்தைகளையே பேசுவான். அவர்களுடைய கஷ்டங்களை நன்கு உணர்ந்து அவர்களை அன்புடன் ஆதரித்துவந்தான். ஆதலால், நெல்சன் ஒரு கப்பலிலிருந்து மற்றொரு கப்பலுக்கு மாற்றப்பட்டால் அக் கப்பலில் இருந்த அனைவரும் அவனுடனே போகத் தீர்மானித்து விண்ணப்பம் அனுப்புவது வழக்கமாக முடிந்தது.

மெக்ஸிகோ என்பது தங்கம் விளையும் நாடு. இது ஸ்பெயின் தேசத்தாரின் ஆளுகையிலிருந்தது. எனவே, மெக்ஸிகோவிலிருந்து ஸ்பேனியக் கப்பல்கள் தங்கம் கொண்டு வருவது வழக்கம். சுமார் எழுபது லட்சம் பவுன் மதிப்புள்ள தங்கத்தை ஏற்றிக்கொண்டு ஒரு ஸ்பேனியக் கப்பல் டெனிரிப் துறைமுகம் செல்வதாக நெல்சன் ஒருநாள் கேள்வியுற்று அதனைக் கைப் பற்றிப் பறிமுதல் செய்யத் தீர்மானித்தான். லார்ட் வின்சண்டின் உத்தரவைப் பெற்று நெல்சன் 1797-ம் ஆண்டு ஜூலை மாதம் 15-ஆம் தேதி டெனிரிப் நோக்கிச் சிறிய சேனையுடன் புறப்பட்டான்.

ஜூலை மாதம் 22-ம் தேதி நெல்சன் டெனிரிப்பை அணுகினான். பகைவர்களைத் திடீரென்று தாக்கி வெற்றிபெற நெல்சன் எண்ணினான். ஆனால், அது முடியாமற் போயிற்று. நெல்சனது வருகையைப் பகைவர்கள் முன்னரே யறிந்து தமது தற்காப்பைப் பலப்படுத்திக் கொண்டனர். தவிரவும், அந்நகரம் கோட்டை கொத்தளங்களாலும் வானளாவிய மாளிகைகளாலும் சூழப்பட்டு வெல்லற் கரியதாய் அமைந்திருந்தது. இவற்றைப் பார்த்தும் அஞ்சா நெஞ்சனாகிய நெல்சன் மனந்தளராமல் அந்நகரினை 24-ம் தேதி இரவில் தாக்குவதென்று தீர்மானித்தான். செய்ய வேண்டுவன வனைத்தையும் செவ்வனே செய்து முடித்தான்.

24-ம் தேதி இரவு நெல்சன் யுத்தத்துக்குத் தயாராயினன். போருக்குப் புறப்படுமுன் தனது மனைவியின் கடிதங்கள் அனைத்தையும் திக்கிரையாக்கிய பின் நிஸ்பெட்டைப் பார்த்து, "மைந்தா! இக்கப்பலைப் பார்த்துக் கொண்டு நீ இங்கு இருப்பாயாக. போர்முனையில் நாம் இருவரும் இறந்துபடின் உனது தாயாரின் கதி என்னும்? ஆதலால், நீ என்னுடன் வருதல் சரியன்று" என்று சொன்னன். அதற்கு அச்சிறுவன், "ஐயா! எவ்வுயிரும் காக்க ஒரு ஈசன் உண்டு. என் தாயும் அவ்வுயிரில் ஒருத்தி அன்றோ? ஆதலால், அவளைக் காப்பாற்றும் பாரம் அவ்வீசற்கே அன்றி நமக்கு அன்று. எனவே, எது எவ்வாருயினும் ஆகுக. இன்றிரவு நானும் உம்முடன் வருவேன்" என்று சொன்னன். நெல்சனும் இணங்கினன்.

அன்றிரவு ஆயிரம் மாலுமிகள் கரைக்குக் கொண்டு போகப் பட்டனர். வீரர்களையும், பீரங்கிகளையும் எற்றிக் கொண்டு கப்பல்கள் சென்றன. நெல்சன் முன்னணியில் சென்ருன். இருள் அதிகமாயிருந்தது. காற்றும் நீரோட்டமும் பாதகமாயிருந்தன. கப்பல்கள் நிதானமாகவும் அதிக ஜாக்கிரதையுடனும் சென்றன. இவற்றைக் கண்டவுடன் பகைவர்கள் போருக்குத் தயாராயினர். ஊரெங்கும் மணிகள் ஒலித்தன. வண்டிகள் அங்குமிங்கும் திரிந்தன. பீரங்கிகள் முழங்கின. பகைவரின் பீரங்கிக் குண்டினுல் நெல்சனது கப்பல் ஒன்று கடலில் மூழ்கியது. மற்றக் கப்பல்கள் மூலைக்கு ஒன்

ருகச் சிதறின. நெல்சன் தனியே கடற்கரை யணுகிய தும் வாளை உருவும் சமயத்தில் வலது கையில் பீரங்கிக் குண்டு பாய்ந்தது. நெல்சன் கூச்சல் போட்டான். அருகே இருந்த நிஸ்பெட் உடனே ஓடிச்சென்று நெல்சனைத் தழுவிக் கொண்டான். நெல்சனது கையிலிருந்து இரத்தம் ஆருகப் பெருகியது. அடிபட்ட இடத்தில் நிஸ்பெட் ஒரு கட்டுக் கட்டி இரத்தப் பெருக்கினைக் குறைத்தபின் நெல்சனை ஒரு படகிலேற்றிக் கப்பலுக்குக் கொண்டு போனுன்.

கப்பலின் அருகே சென்றதும் நெல்சன், "என்னை விட்டு விடுங்கள். இன்னும் ஒரு கையும் இருகால்களும் எனக்கு இருக்கின்றன. நீங்கள் விரைவிற் சென்று இரணவைத்தியரை அழைத்து வருக. இக்கையை வெட்டி அப்புறப் படுத்தலே ஏற்றதாகும்" என்று சொல்லிக் கொண்டு கப்பலில் தானுகவே ஏறினுன். இரணவைத்தியரும் வந்து சேர்ந்தனர். அடிபட்ட கையினைத் துண்டித்து விடலே தகுதியான தென்று அவரும் கூறினுர். எனவே, நெல்சனது வலதுகை அன்றே துண்டிக்கப்பட்டது. பிறகு, அவ்வைத்தியர் நெல்சனைப் பார்த்து, "இவ்வறு பட்ட கையினை இங்கிலாந்துக்கு அனுப்பலாமா?" என்று கேட்டார். அதற்கு நெல்சன், "வேண்டாம். அதனைக் கடலில் எறிக" என்று உத்தரவு செய்தான்.

டெனிரிப் முற்றுகையில் ஆங்கிலேயர் தோல்வி யுற்றனர். பிறகு, நெல்சன் இங்கிலாந்துக்குப் புறப்

பட்டுச் சென்றான். 1797-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் தனது தாரமும் தந்தையும் வசித்து வந்த பாத் என்னும் ஊருக்கு நோகச் சென்றான். வலதுகை துண்டிக்கப்பட்டதால் ஏற்பட்ட இரணத்தினால் நெல் சன் அதிக வேதனை பட்டான். அப்புண் விரைவில் குணமாகாமல் அதிகத் துன்பத்தைக் கொடுத்தது. நெல் சனது மனைவி கணவருக்குக் குற்றேவல் புரிந்து கண் துஞ்சாமல் கவலையுடன் நெல்சனைக் காப்பாற்றினாள். இரணத்தின் வேதனையால் நெல்சன் அடிக்கடி கோபித் துச்சீறியும் அவன் மனைவி பொறுமையுடன் தொண் டாற்றி வந்தாள். மனைவியின் அயர்விலாத் தொண்டி னால் அப்புண்ணும் நாளடைவில் குணமாகி வந்தது.

இப்படியிருக்க, ஒரு நாள் இரவில் நெல்சன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். அன்று, பிறி தொரு இடத்தில் ஆங்கிலேயர் வெற்றியுற்றனர். அவ் வெற்றியை எல்லோரும் கொண்டாடினர். ஜனங்கள் எங்கணும் ஆரவாரித்தனர். தெருக்களும் வீடுகளும் அலங்கரிக்கப் பட்டு இந்திரசபைபோல் விளங்கின. மணிவிளக்குகள் வீடுகளிலும் தெருக்களிலும் ஏற்றப் பெற்றதால் ஊரெங்கும் வெளிச்சமாயிருந்தது. ஆனால், நெல்சனது வீடு மாத்திரம் அலங்காரமும் வெளிச்சமும் இன்றி இருந்தது. அது இன்னாருடைய வீடு என் பதை அறியாத மாந்தர்கள் கோபம் எய்தி அதனைத் தாக்கிக் கலகம் செய்யச் சென்றனர். அதைக் கண்ட காவற்காரன், "ஐயன்மீர்! டெனிரிப் யுத்தத்தில் கை

யிழந்த நெல்சன் புண்ணின் வேதனையால் நாள் முழுதும் துன்புற்று இப்பொழுது சற்று அயர்ந்து தூங்குகின்றார்" என்று சொன்னான். இதைக் கேட்ட அவர்கள் தங்களது தவற்றினை உணர்ந்து, "ஐயா! மன்னிப்பீர். அறியாது செய்தோம். இனி இப்பக்கம் நாங்கள் வர மாட்டோம். எமது ஒப்பிலா வீரனை இறைவன் ஆசீர்வதிப்பாராக" என்று கூறி அமைதியுடன் சென்றனர்.

நவம்பர் மாதம் நெல்சனது இரணம் முற்றிலும் குணமடைந்தது. கண்ணிழந்தது முதல் தனக்குச் சேரவேண்டிய ஒருவருடச் சம்பளத்தைப் பெறும் பொருட்டுச் சென்றான். ஆனால், கண் உண்மையாகவே பார்வையை இழந்தது என்று வைத்தியரிடமிருந்து ஒரு அத்தாட்சிப் பத்திரம் கொண்டுவந்தா லன்றிச் சம்பளம் கொடுக்க முடியாதெனக் குமாஸ்தா பகர்ந்தான். கண்பார்வை இழந்தமை பார்ப்போருக்கு வெளிப்படை அன்றாயினும் உலகம் அறிந்த தோர் உண்மையாகும். இதனை அறிந்தும் அத்தாட்சிப் பத்திரத்தின் அவசியத்தை வற்புறுத்தும் குமாஸ்தாவைப் பரிகாசம் செய்ய நெல்சன் தீர்மானித்தான். கண்ணிழந்தமையைச் சந்தேகித்த குமாஸ்தா கையிழந்ததையும் ஐயுறக்கூடும் என யூகித்து, வைத்தியரிடம் சென்று, அவ்விரண்டற்கும் அத்தாட்சிப் பத்திரம் பெற்று, மீண்டும் குமாஸ்தாவிடம் சென்றான். நெல்சனைப் பார்த்ததும் அக்குமாஸ்தா, "ஐயா! நீர் கேட்பது வருடச் சம்பளம் தானே. நீர் அதிகம் கேட்டதாக நினைத்

தன்றே அவ்வாறு சொன்னேன்" என்றான். அதைக் கேட்ட நெல்சன், "ஓ! இப்பொழுது வந்தது கண்ணி ழந்தமைக் காகவே. சிலநாட் கழிந்தபின் கையிழந்த மைக்காக வருவேன். அதன் பின்னர் ஒருகால் காலுக் காக வரினும் வருவேன்" என்று பரிகாசமாகச் சொன் னான். இந்நகை மொழிகளைக் கேட்ட குமாஸ்தா வெட்கி மௌனமுற்றான். சம்பளம் கொடுக்கப் பட் டது. அதைப் பெற்றபின் நெல்சன் வீடு சென்றான்.

நெல்சன் தேசத்திற்குப் புரிந்த நன்மைகளை முன் னிட்டு அவனுக்கு வருடம் ஆயிரம் பவுன் உபகாரச் சம்பளம் கொடுப்பதாக அரசாங்கத்தார் தீர்மானித் தார். பல பட்டங்களும் நெல்சனுக்கு அளிக்கப் பட் டன. "கண்ணிழந்தேன்; கையிழந்தேன்; ஆனால், என் உற்சாகத்தை இழக்கிலேன்" என்று இறுமாந்து சொன்ன நெல்சனுக்கு இப்பரிசுகளும் பட்டங்களும் மிகக்குறைந்தனவே என்பதை எவரே மறுக்கக் கூடும்.

# அத்தியாயம்—4

## நைல் யுத்தம்.

1798-ம் ஆண்டு எப்ரல் மாதம் வான்கார்ட் என்னும் கப்பற்குத் தலைவனாக நெல்சன் நியமிக்கப்பட்டான். நெல்சன் புறப்படும்போது அவன் தந்தை, "மைந்தா! பரமண்டலத்திலுள்ள நமது பிதா உன்னை ஆசீர்வதிப்பாராக. முன்முறை நீ போருக்குச் சென்றபோது நான் கவலையுற்றுக் கதறினேன். ஆனால், வெற்றிக் கொடியுடன் திரும்பி வந்த உன்னைக் கண்டு ஈன்ற பொழுதிற் பெரிதுவந்தேன். கண்ணே! போய் வருக. சென்றவிடம் எல்லாம் வெற்றியே அடைக" என ஆசீர்வதித்து விடை தந் தனுப்பினர். நெல்சனது மனைவியோ கணவாது பிரிவாற்ருது கவலையுடனிருந்தாள். மனைவியின் விடையை அரிதிற் பெற்றதும் நெல்சன் புறப்பட்டுச் சென்று மே மாதம் ஜிப்ரால்டரை அடைந்தான்.

இத்தருணத்தில், பிரான்சு தேசத்தில் நெபோலியன் ஒப்பற்ற வீரனாக விளங்கினான். இவன் இதாலி முழுவதையும் வென்று பிரான்சுக்குத் திரும்பிவந்தான். வந்ததும், இந்தியாவின்மேல் படையெடுக்க எண்ணினான். கங்கை, சிந்து முதலிய ஜீவ நதிகளால் பாயப் பெற்ற இந்தியாவின் நீர் நிலவளங்களையும், ஜனத்

தொகையினையும், மதப் பெருமையினையும் புத்தக வாயிலாகச் சிறுவயதில் உணர்ந்த நெபோலியன் இந்தியாவைக் கைப்பற்றக் கருதினான். ஆனால், எகிப்து தேசத்தைக் கைப்பற்றிய பின்னரே இந்தியாவின்மீது படையெடுத்துச் செல்லுதல் சாத்தியமென அறிந்து முதலில் எகிப்தினைக் கைப்பற்றத் தீர்மானித்தான். தனது கருத்தினைத் தன் அரசாங்கத்தார்க்குத் தெளிவுறச் சொன்னான். அவர்களும் உடனே இணங்கினர். நெபோலியனது யாத்திரைக்கு வேண்டியன யாவும் விரைவில் தயாரிக்கப்பட்டன. நாற்பத்தாறுயிரம் வீரர்களும், விஞ்ஞான நிபுணர்களும், கணித நூல் வல்லாரும், தத்துவ அறிஞர்களும் தயாராயினர். பெரிய கப்பல் ஒன்றும், சிறிய கப்பல்கள் முப்பதும் சேகரிக்கப்பட்டன. மே மாதம் 19-ஆம் தேதி நெபோலியன் பரிவாரங்களுடன் புறப்பட்டான்.

நெபோலியன் எங்கே போனான் என்பது பிரான்சு அரசாங்கத்தின் தலைவர்களைத் தவிர்த்த மற்ற எவர்க்குந் தெரியாது. இந்தியாவின்மீது படையெடுத்துச் சென்றனன் என்றனர் சிலர். இங்கிலாந்து நோக்கிச் சென்றனன் என்றனர் வேறு சிலர். சூயஸ் கால்வாயை வெட்டச் சென்றான் என்றனர் மற்றும் சிலர். இங்ஙனம், பலர் பலவிதமாகக் கூறினர். நெபோலியனது நோக்கத்தை அறிய முடியாமல் ஆங்கிலேயர் திகைத்தனர். கடைசியாக, வின்செண்ட் என்பவர்

ஓர் கப்பற்படையை நெல்சனிடம் ஒப்புவித்து நெபோலியனைத் தேடிச் செல்லுமாறு கட்டளையிட்டார். வயதிலும், அநுபவத்திலும் குறைந்த நெல்சனுக்கு மிகவும் பொறுப்புள்ள கடமையைக் கொடுத்ததைக் குறித்து மற்றைக் கப்பல் அதிகாரிகளும் அரசாங்கத்தாரும் அதிருப்தி அடைந்தனர். எனினும், நெல்சனது ஆற்றலில் நம்பிக்கையுள்ள வின்சண்டு தாம் செய்தது சரியென்றே சொல்லிவந்தார். நெல்சனும் தனது கப்பற்படையுடன் நெபோலியனைத் தேடிச் சென்முன்.

இதற்குள் நெபோலியன் மால்டா தீவு சென்று அதனைக் கைப்பற்றினுன். இதைக் கேட்ட நெல்சன் உடனே மால்டாவுக்குச் சென்முன். ஆனுல், நெபோலியன் மூன்று நாளைக்கு முன்னர் மால்டாவினின்றும் புறப்பட்டுச் சென்றதாக நெல்சன் அறிந்து மனம் நொந்தான். நெபோலியன் கீழ்த்திசைக்கே சென்றிருத்தல் வேண்டுமென நெல்சன் யூகித்துத் தனது கப்பற்படையுடன் எகிப்து நோக்கிப் புறப்பட்டான். பிரன்சுப் படையைப் பற்றிய செய்தி ஒன்றும் நெல்சனுக்குக் கிடைக்கவில்லை. எனினும், தனது படையை விரைவாய்ச் செலுத்திச் சென்று அலெக்ஸாந்தர் குடாவினை அடைந்தான். ஆனுல், நெபோலியன் அங்கு வரவில்லை எனவறிந்து எமாற்றம் அடைந்தான். ஆதலால், நெல்சன் மீண்டும் வந்தவழியே திரும்பினுன்.

இடையில் ஓர் நள்ளிரவில் இரண்டு கப்பற் படைகளும் சந்தித்தன. ஆனுல் மூடுபனியின் மிகுதியாலும்,

அஞ்சன இருளாலும் ஒருவரை ஒருவர் கண்டாரில்லை. எனவே, நெபோலியன் எவ்விதத் தடையுமின்றி விரைவிற் சென்று, அபேகூர் குடாவில் கப்பல்களை நிறுத்திவிட்டு, இராணுவப் படையுடன் எகிப்து சென்று, ஆங்குள்ள அரசர்களுடன் நிலப்போர் புரிந்து வந்தான்

இஃது இங்ஙனமிருக்க, திரும்பிப் போன நெல்சன் சிஸிலிக்குச் சென்றான். அவ்வரசாங்கம் பிரான்சுக்குப் பயந்து, நெல்சனுக்கு எவ்வித உதவியும் அளிக்கவில்லை. நெபோலியனைக் கண்டுபிடிக்க முடியாமல் நெல்சன் திரும்பிவந்தமையைக் குறித்துப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அகங் குழைந்தனர். வின்செண்டையும் நெல்சனையும் பலர் பலவாறு இழித்துக் கூறினர். இதைக் கேள்வியுற்ற நெல்சன், "நெபோலியன் சென்ற இடம் இன்னதென நிச்சயமாய் உணராமல் நான் அதிக தூரம் சென்று வீணில் திரும்பி வந்ததைக் குறித்து என்னைப் பலர் பலவாறு கண்டிக்கின்றனர். நெபோலியன் எந்த இடம் போனான் என்பதை நிச்சயமாய்ச் சொல்லக் கூடியவர் ஒருவரும் இல்லை. நேப்பிள்ஸ், சிஸிலி முதலிய அரசாங்கங்கள் அறிந்தோ அல்லது அறியாமலோ அதனை எனக்குச் சொல்ல வில்லை. செய்தி அறியும் வரையில் மௌனமாய்க் காத்திருப்பது பேதமையே யாகும். ஆதலால், நெபோலியன் எகிப்துக்கே சென்றிருக்கவேண்டுமென யூகித்து அங்குச் சென்றேன். அங்கே அவர்களை

நான் காணவில்லை யெனினும் நான் செய்தது சரி யென்றே நம்புகின்றேன். முடியுமாகில் மீண்டும் எகிப்துக்கே செல்லக் கருதியுள்ளேன்." என்ற கடிதத்தை வின்செண்டுக்கு அனுப்பினுன்.

பிறகு, நெல்சன் நேபிள்ஸ் சென்றுன். அங்கே ஹேமில்டன் என்பவர் பிரிட்டிஷ் மந்திரியாக இருந்தார். அம்மந்திரியாரின் மனைவியான எம்மா என்னும் இயற்பெயர் வாய்ந்த ஹேமில்டன் அம்மைக்கு அரசாங்கத்தில் அதிகச் செல்வாக்கு இருந்தது. ஆதலால், அவளுடைய நன்முயற்சியால் நெல்சன் ஓர் இரகசியக் கடிதம் பெற்று, சைரகியூஸ் சென்று, வேண்டிய உணவுப் பொருட்களையும் உண்ணீரையுஞ் சேகரித்துக் கொண்டு, "அம்மையே! உமது உதவிக்காக அநேக வந்தனம். உண்ணீரும் உண்பொருளும் சேகரித்துக் கொண்டோம். மீண்டும் எகிப்து செல்லத் தீர்மானித்துள்ளோம். ஜெயகோலத்துடனே அன்றிச் சவகோலத்துடனே திரும்புவேன் என்பது திண்ணம். பிரன்சுக்காரர்கள் எங்கிருப்பினும் அவர்களைக் காணும் வரையிலும் ஒரு கணமும் வீணுக்கேன் என்பதை நம்புங்கள்" என்ற நிருபத்தை எம்மாவுக்கு அனுப்பினுன்.

பிறகு, நெல்சன் தனது கப்பற் படையுடன் எகிப்து நோக்கிச் சென்றுன். சில நாட்களுக்குப் பின்னர், நெல்சன் அபேகூர் குடாவை அணுகியதும் பிரஞ்சுப் படையினைக் கண்டான். கண்டதும்

களிப்புற்றான். பல நாட்களாக ஊணுறக்கமின்றி உழைத்து வந்த நெல்சன் தனக்குச் சிறிது ஆகாரம் கொண்டுவருமாறு ஏவினான். உண்டபின் அருகிருந்தோரை நோக்கி, "நாளையதினம் இவ்வேளைக்குள் வெற்றி யடைவேன் அல்லது வானுலகு செல்வேன்" என நெல்சன் கூறினான். பிறகு, கப்பல் அதிகாரிகள் எல்லோரையும் அழைத்து எதிரிகளைத் தாக்கவேண்டிய முறையினைச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் எடுத்துரைத்தான். அவர்களும் அதனை அங்கிகரித்து நெல்சனது திறத்தை வியந்தனர். அப்பொழுது ஒரு கப்பற்றலைவன் எழுந்து நின்று, "ஐயா! உமது அறிவின் திறத்தைப் பெரிதும் மெச்சினேன். நாம் வெற்றியடைவோமாயின் உலக முழுவதும் உவகையுறும் அன்றோ?" என்று சொன்னான். அதைக் கேட்ட நெல்சன், "ஐயா! அடைவோமாயின் என்ற ஐயம வேண்டாம். வெற்றி நமதே என்பது நிச்சயம். ஆனால், அவ்வெற்றியின் விவரத்தை உலகோர்க்கு விளக்கிக் காட்ட நாம் உயிருடன் இருப்போமா என்பதுதான் சந்தேகம்" என்று பதிலிறுத்தான்.

பிரிட்டிஷ் கப்பல்கள் நெல்சனது ஏவற்படியே பிரன்சு கப்பல்களை நான்கு பக்கங்களிலும் சூழ்ந்து கொண்டு யுத்தத்தை ஆரம்பித்தன. பதினைந்து நிமிடங்களுக்குள் பகைவரின் இரண்டு கப்பல்கள் நாசம் ஆயின. இரவு எட்டரை மணிக்குப் பகைவரின் மூன்று கப்பல்கள் கைப்பற்றப்பட்டன. ஆங்கிலேயரின்

வெற்றி நிச்சயமாயிற்று. அத்தருணத்தில் நெல்சனது நெற்றியில் ஒரு குண்டு பட்டது. நெல்சன் கீழே விழுந்தருவாயில் அருகிருந்தவன் அவனைத் தழுவிக் கொண்டான். நெற்றியிலிருந்து பெருகிய இரத்தத்தைக் கண்டு நெல்சனுக்கு ஆபத்து வந்ததென்று அனைவரும் கருதினர். நெல்சனும் அவ்வாறே எண்ணினான். இதனை யறிந்த வைத்தியர் நெல்சனிடம் உடனே ஓடினர். நெல்சன் அவ்வைத்தியரை நோக்கி, “வைத்தியரே! வீரஞ் செறிந்த பலபேர் புண்பட்டுள்ளனர். அவர்களுக்கு முதலில் சிகிச்சை செய்த பின்னரே நீவிர் என்னிடம் வருதல் வேண்டும். எனக்கு முன் அடிபட்டவர்கள் கவனிக்கப்பட்ட பின்னரே என்னையும் கவனிப்பீராக” என்று சொன்னான். இவ்வாறு நெல்சன் வற்புறுத்தியதால் வைத்தியரும் அப்பாற் சென்று, சிறிது நேரம் கழிந்த பின்னர் மீண்டும் வந்தார். நெல்சனைச் சுற்றி இருந்தோர் மனங்கலங்கிக் கவலையோடிருந்தனர். வைத்தியர் அப்புண்ணினை நெடுநேரம் பரிசோதித்தபின் அது சாதாரணமான சிறுகாயம் என்று உவகையுடன் கூறினர். அங்குக் குழுமியிருந்த அனைவரும் பெருமகிழ்ச்சியுற்றுக் கரகோஷஞ் செய்து ஆனந்தக் கூத்தாடினர். வைத்தியரது நன்மொழியினைக் காட்டிலும் அன்பர்களது ஆனந்தக் கூத்தே நெல்சனை உவகைக் கடலில் ஆழ்த்தியது.

இத்தருணத்தில், ஓரியண்ட் என்னும் பிரன்சுக் கப்பல் தீப்பற்றியது. அக்கப்பற்றலைவனும் இறந்தான். தீ கப்பல் முழுவதும் பரவியது. அத்தீயின்

ஒளியினால் யுத்தகளமெங்கும் வெளிச்சமாயிருந்தது. பீரங்கி முழக்கம் இருதிறத்திலும் நின்றது. எங்கும் நிசப்தமே நிலவியது. சுமார் இரவு பத்துமணிக்கு அக்கப்பல் சின்ன பின்னமாயிற்று. அதன் பாய்மரங்களும் பலகைகளும் வெடிமருந்தின் வேகத்தால் உயரக் கிளம்பிக் கடலில் விழுந்தமையால் உண்டான சப்தம் கன்னெஞ்சினரையும் கலங்கச் செய்தது.

அக்கப்பலில் கஸபியான்கா என்னும் பதின்மூன்று வயதுள்ள ஒரு சிறுவன் இருந்தான். அவனது தந்தை அவனை ஒரு பக்கத்தில் இருத்தி, "எக்காரணத்தை முன்னிட்டும் இவ்விடத்தினின்றும் அகலாதே" எனச் சொல்லிவிட்டுப் போருக்குச் சென்றான். சென்ற சிறிது நேரத்திற்குள் அவன் பெருங் குண்டால் தாக்குண்டு, இறந்து, கப்பலின் ஓர் இடம் கிடந்தான். பிறகு, அக்கப்பலும் தீப்பற்றியது. எனவே, அதிலிருந்த மாலுமிகள் ஓடங்களில் ஏறி உயிர் தப்பி ஓடினர். அவர்கள் அப்பையனையும் அழைத்தனர். ஆனால், பையன், "தந்தையின் கட்டளையின்றி வரமாட்டேன்" என்று பதிலிறுத்தான். இதற்குள் அவனை நோக்கி வந்து கொண்டிருந்த தீ அவனது ஆடையிற் பற்றியது. தந்தை இறந்துபட்டதை அறியா மைந்தன் சூடு பொறுக்க மாட்டாமல் தந்தையை விளித்து, "என் தொழில் முடிந்ததா? அப்பா! இப்போதாயினும் இவ்விடம் விட்டு அகலலாமா?" என்று வினவினான். பதில் இன்மையால் அங்கு

இருப்பதே தந்தையின் விருப்பமென எண்ணித் துடித்துக் கொண்டே ஓடாமல் நின்றான். இதற்குள், தீ பையனது உடலையும் மயிரையும் பற்றி வருத்தவே அப்பையன், "அப்பா! அப்பா!! நான் போகலாமா?" என்று மீண்டும் இரந்து கூவினான். விடையொன்றும் இன்மையால் அப்பையன் இடம்பெயராது அங்கேயே நின்றான். இதற்குள் கப்பலிலிருந்த வெடிமருந்தில் தீ புகுதலும் கப்பல் படீரென வெடித்துச் சுக்கல் சுக்கலாய்ச் சிதறியது. பையனும் மேல் எறியப் பட்டுக் கடலில் விழுந்து இறந்தான். "தந்தை சொல் மிக்க மந்திர மில்லை" என்னும் ஆன்றோர் மொழியினைக் கைப்பற்றிய இச்சிறுவனது வெற்றுடம்பு மாயினும் அவனது புகழுடம்பு இற்றைக்கும் அழியாது நிலவுகின்றதன்றோ?

## கஸபியான்கா

---

1. என்றன்கட் டளையின்றி இவ்விடம்விட் டகலாதே
என்றுரைத்துத் தன்மகனை இருங்கலத்தின் மிசைநிறுத்திச்
சென்றதந்தை அந்தோ! அச் செருக்களத்தில் உயிர்நீத்தான்
குன்றனைய அக்கப்பல் கொடுந்தீவாய்ப் பட்டதுவே.

2. தந்தையிறந் தமையறியாக் கஸபியான்கா தனிநின்றான்
வெந்தழலுக் காற்றாராய் வீரர்விரைந் தோடுங்கால்
நிந்தையிலாய்! எம்மோடு நீவருக என்றழைத்தார்
மைந்தனவன் தந்தைமொழி அவர்க்குரைத்து மறுத்தனனே.

3. அப்போது விரைவாக அழல்மேன்மேல் படர்ந்துவர
இப்போதா யினுநானிவ் விடம் நீங்கிச் செலலாமோ?
அப்பா! வென் றேயரற்றி அலறினனே அவ்விளைஞன்
எப்பதிலும் இலாமையினல் இடர்ப்பட்டான் இடம்பெய
[ரான்.

4. அனலிதற்குள் முகத்தினையும் ஆடையையும் பற்றியதால்
எனதுதொழில் இனிதுநிறை வேறியதோ? என்தந்தாய்!
இனியேனும் செலலாமோ? இருந்திடலே நின்மனமோ?
எனவுரைத்தும் விடையிலதால் இளைஞனவன் இருந்
[தனனே.

5. வெடிமருந்தில் அரிபுகலும் விண்ணிடிபோல் அக்கப்பல்
வெடித்தது.சீர்ப் பாய்மரமும் பலகையுமவ் வேகத்தால்
எடுத்தெறியப் பட்டபொழு திளஞ்சிறுவன் மேற்கிளம்பி
நடுக்கடலில் விழுந்திறந்தான் நண்ணுரும் அகங்குழைந்தார்.

6. என்னேயிவ் வுலகியற்கை இருந்தவிதம்! தந்தைமொழி
பொன்னேபோல் பூண்டவனும் பொன்றுவதோ? அறங்
[கொடிதோ?
தன்னேரில் சிறுவனையித் தாரணியும் இழப்பதுவோ?
மின்னேயிவ் வாழ்க்கையென வெறுப்புற்றார் மேதினியோர்.

7. பெற்றோர்தம் ஆணைதனைச் சாவுறினும் பேணுதல்செய்
நற்றவத்திற் சிறிதேனும் நானிலத்தில் வழுவாதார்
வெற்றுடம்பு வெந்தாலும் புகழுடம்பால் வேகாமல்
எற்றைக்கும் இருப்பரிதற் கிவ்விளைஞன் சான்றுவான்.

நைல் யுத்தத்தில் நெல்சன் வெற்றிபெற்றுன். பகைவரது கப்பல்களில் நான்கே தப்பிச் சென்றன. இவ்வெற்றியால் எல்லோரும் உவகை எய்தினர். ஆயி

ரக் கணக்கான எகிப்து வாசிகள் கரையோரம் நின்று ஆரவாரித்தனர். யுத்தம் முடிவுற்ற பின்னர், கணக்கற்ற பிணங்கள் கடலில் மிதந்துகொண்டிருந்தன. கடற்கரை யோரம் எங்கும் நாசமுற்ற கப்பல்களின் சின்னங்களே காணப்பட்டன. அரேபியர்கள் அச் சின்னங்களை எடுத்துக் கொளுத்தி அவற்றிலிருந்த இரும்புத் துண்டுகளைச் சேகரித்து வைத்தனர்.

நெல்சனது கீர்த்தி உலகெலாம் பரவியது. ஐரோப்பாவின் மன்னர்கள் இவ்வெற்றியால் நடுக்கம் நீங்கி எல்லையிலா உவகை எய்தினர். ஒவ்வொரு அரசாங்கமும் நெல்சனுக்குப் பரிசுகள் அனுப்பியது. பிரிட்டிஷ் அரசாங்கத்தார் நெல்சனுக்குப் பேரன் (Baron) என்ற பட்டத்தை யளித்தனர். இதனினும் உயர்ந்த பட்டம் நெல்சனுக்கு அளிக்கப் படவேண்டும் என்று பார்லிமெண்டில் விவாதம் நடந்தது. அப்பொழுது பிட் என்னும் பிரதம மந்திரியார், "உலகத்தில் எக்காலத்திலும் எவராலும் அடையப் பெருத வெற்றியை நெல்சன் பெற்ருன். அதனுல், பிரிட்டிஷாரது பெயர் இவ்வுலகில் நிலவும் வரையில் அவன் பெயரும் நீடித்திருக்கும். எந்தப் பட்டம் கொடுப்பினும் நெல்சன் நெல்சனே. அழகுக்கு யாரே அழகு செய்வார்?" என்று நயமாகக் கூறிப் பேரன் பட்டத்தையே கொடுத்தனர். பட்டங்கள் எல்லாம் பயனற்றன என்று சொல்லிய பிரதம மந்திரி நெல்சனுக்கு உயரிய பட்டத்தைக் கொடுக்க மறுத்தமை விந்தையினும்

விந்தையே யாகும். உயர்ந்த பட்டம் கொடுக்க மறுத்தமைக்குக் காரணம் யாதாயினும் ஆகுக. எந்தப் பெயரைக் கேட்டு ஆங்கிலேயர் அன்பு காட்டினரோ; எப்பெயரைக் கேட்டு இதாலி, எகிப்து, துருக்கி முதலியோர் கொண்டாடினரோ; எந்தப் பெயரைக் கேட்டளவில் பிரன்சுக்காரர் இடியேறுண்ட நாகம் போல் கலங்கினரோ அந்தப் பெயரே உலகுள்ளளவும் அழியாது நிற்பது; பட்டம் அன்று.

நெல்சனுக்குக் கிடைத்த பரிசுகள் எல்லாவற்றினும் அதிசயமானது ஒன்று உண்டு. ஒரு கப்பற்றலைவன், தீக்கிரையான ஓரியண்ட் கப்பலின் பாய்மரத்தை எடுத்து, தச்சனிடம் தந்து, அதைக் கொண்டு ஒரு பிணப்பெட்டி செய்யுமாறு செப்பினன். சவப் பெட்டி அதிக அழகாகவும், வேலைப் பாடுடையதாகவும் செய்யப்பட்டது அக்கப்பற்றலைவன் அந்தப் பெட்டியினை நெல்சனுக்கு இனமாக அனுப்பி அதனுடன் கீழ்க் கண்ட நிருபத்தையும் அனுப்பினன்.

"ஐயா! உமது நிகரிலா வெற்றியை முன்னிட்டு ஓரியண்ட் கப்பலின் பாய்மரத்தினலேயே செய்யப்பட்ட ஓர் பிணப்பெட்டியை உமக்குப் பரிசாக அனுப்புகின்றேன். யுத்த வாழ்க்கையினை நீத்து, இவ்வுலகைத் துறந்து அவ்வுலகு சென்றபின் உமது உடல் இப்பெட்டியில் அடக்கம் செய்யப்படவேண்டுமென்பது எனது வேண்டுகோள். ஆனல், அந்தக்காலம் இறைவன் அருளால் சேய்மைத் தாகுக."

இப்புதுமையாம் பரிசினைக் கப்பற்றலைவன் எந்த நோக்கத்துடன் அனுப்பினனோ அந்த நோக்கத்துடனே நெல்சனும் பெற்றுக் கொண்டான். யாக்கையின் நிலையாமையை அறிவிக்கும் ஓர் கருவியென அதனை நெல்சன் மதித்து அதைப் பத்திரமாகக் காப்பாற்றி வந்தான். அஃது எதற்காகக் கொடுக்கப்பட்டதோ அதற்கே அது பயன் படுத்தப் படவேண்டுமென்று நெல்சன் அடிக்கடி கூறி வந்தான்.

பதினைந்து நாட்களுக்குப் பின்னர் நெல்சன் தனது கப்பற் படையுடன் எகிப்தினின்றும் திரும்பினன்.

---

# அத்தியாயம்—5.

## கூடாநட்பு.

வழியில் நெல்சனுக்கு ஜுரம் கண்டது. அவன் பதினெட்டு மணி நேரம் பிரக்ஞை யின்றிக் கிடந்தமையால் நெல்சனுக்கு இறுதிக்காலம் நெருங்கியதென்று அனைவரும் பயந்தனர். கொடிய ஜுரத்தாலும், அதிக இருமலாலும் நெல்சன் பலங்குன்றி உடல் தளர்ந்து தைரியத்தைக் கைவிட்டான். அந்நிலையில் நெல்சன், "ஐயா! உமது முகத்தை மீண்டும் பார்ப்பேன் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. சென்ற ஜூன் மாதத்திலிருந்து யான் அனுபவித்த மனக்கவலையின் முடிவு மரணமே என நினைக்கின்றேன். இறைவன் திருவுளத்தின் கருத்தெதுவோ அதுவே எனக்கும் சம்மதம். என் உடல், பொருள், ஆவி எனும் மூன்றையும் இறைவற்கே அர்ப்பணம் செய்து விட்டேன்" என்று வின்செண்டு பிரபுவுக்கு நிருபம் விடுத்தான்.

நேபிள்ஸ் தேசம் பிரன்சுக்காரருக்குப் பயந்து நடுங்கிக் கொண்டிருந்தது. நைல் வெற்றியைக் கேள்வியுற்றதும் நேபிள்ஸ் இராணி எய்திய மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. "வீரனே! எம்மைக் காத்த தீரனே! உம்மைக் கடவுள் ஆசீர்வதிப்பாராக" என்று அரற்றிக்

கடவுளைத் தொழுதாள்; தன்னுருழில் மறந்து தரை யினில் விழுந்தாள்; பின்னரும் எழுந்தாள்; இன்ப மெய் புளகித்து அழுதாள்; மக்களை மார்புறத் தழுவி னாள். இன்னன பிறவும் செய்து இங்கிலாந்திலிருந்த நேபிள்ஸ் மந்திரிக்குப் பின்வரும் நிருபம் எழுதினாள்.

"ஐயா! நைல் யுத்தத்தின் வெற்றிச் செய்தியையும் எமது வெற்றி வாழ்த்தினையும் கொண்டுவரும் இம்மனிதனுக்கு இறக்கைகள் இரண்டு இல்லையே என்று ஏக்கமுறுகின்றேன். இவ்வெற்றியைக் கேள்வியுற்றதும் நான் முதலில் நம்பவில்லை. கனவோ என ஐயுற்றேன். கப்பற் சண்டையில் ஒப்பற்ற ஆங்கிலேயர்களே இவ்வரிய செயற்கு அருகர்கள். இவ்வெற்றியைக் கேட்டதும் நாங்கள் அடைந்த மகிழ்ச்சியையும், எமது ஆனந்தக் கூத்தினையும் நீவிர் நேரிற் பார்க்க வில்லையே என வருந்துகின்றேன். இதாலி முழுவதும் காப்பாற்றப்பட்டது. நெல்சனது கீர்த்தி இவ்வூரெங்கும் பரவியது. குடிமக்கள் அனைவரும் இன்பக் கடலில் மூழ்கியுள்ளனர்."

ஹேமில்டன் பிரபு, தமது இல்லம் வந்து சின்னாள் களிப்பாறும்படி நெல்சனுக்கு நிருபம் வரைந்தனர். அத்தேசத்தின் பழக்க வழக்கங்களையும், அரண்மனையில் நடக்கும் அட்டூழியங்களையும், மந்திரிகளின் தந்திரங்களையும் நெல்சன் முற்றிலும் வெறுத்தான். எனவே, நேபிள்ஸுக்குப் போக நெல்சன் விரும்பவில்லை. ஆனால், அவசியமிகுதியே அவனை அங்குச் செல்லச் செய்தது.

நேபிள்ஸ் அரசாங்கத்தார் நெல்சனது வரவை ஆவலுடன் எதிர்பார்த் திருந்தனர். நெல்சனும் நேபிள்ஸ் அணுகினன். அரசனும், அரசியும், ஹேமில்டன் பிரபுவும், எம்மாவும் தமது பரிவாரங்களுடன் சென்று நெல்சனை எதிர்கொண்டு அழைத்தனர். நெல்சனைக் கண்டவுடன் எம்மா மூர்ச்சையுற்று உயிரற்றவள்போல் நெல்சன்மீது சாய்ந்தாள். எல்லோரும் தடமடு மூழ்கினற்போல் சரீரமும் குளிர்ந்துள்ளாறி, அடலேறனைய நெல்சனை அரண்மனைக்கு அழைத்துச் சென்றனர்.

ஒருவாரம் சென்றபின் நெல்சனது ஜெனன நாள் வந்தது. அந் நன்னாளைப் பொன்னாளெனப் போற்றி நேபிள்ஸ் தேசத்தார் மிகவும் சிறப்பாக விழா வாற்றினர். நெபோலியனும் அவனது சேனையும் எகிப்தில் அகப்பட்டுப் பிரான்சுக்குத் திரும்பிவர முடியாமலிருப்பதை அறிந்த ஆஸ்டிரியாவும், ருஷியாவும் ஒன்று சேர்ந்து பிரான்சை எதிர்க்க ஆரம்பித்தன. போரினைத் துரிதப்படுத்திப் பிரன்சுக்காரரை வேருடன் அழித்தலே ஒவ்வொரு தேசத்திற்கும் நோக்கமாயிருத்தல் வேண்டும் என ஆஸ்டிரியா மன்னற்கு நெல்சன் கடிதம் எழுதினன். நெல்சனது தூண்டுதலினல் நேபிள்ஸ் அரசனும் எண்பதினுயிரம் வீரர்களை உதவிக்கனுப்புவதாகத் தீர்மானித்தான். பிரன்சுக்காரர்களைத் தாக்கி நசுக்குவதற்கு அதுவே தருணம் என்று நினைத்த நெல்சன் நேபிள்ஸ் தேசத்திலேயே தங்கி, நேசக்கட்சி

யினர்க்குத் தன்னாலாய உதவியைப் புரியத் தீர்மானித்தான்.

இவ்வாறு நேசக்கட்சியினர் ஒன்று சேர்ந்து ரோமாபுரியில் தங்கியிருந்த பிரான்சுப் படையினை எதிர்க்கச் சென்றனர். நேபிள்ஸ் தேசத்தின் எண்பதினாயிரம் வீரர்களுக்கும் மாக் என்பவன் சேனைத் தலைவனாக நியமிக்கப்பட்டான். நேபிள்ஸ் இராணி அத்தலைவனைப் பார்த்து, "கடற்போரில் நெல்சன் எப்படியோ அப்படியே நிலப்போரில் நீயும் விளங்குக" என ஆசீர்வதித்து அனுப்பினாள். ஆனால், நெல்சனுக்கு மாத்திரம் மாக்கைப் பற்றி நல்ல அபிப்பிராயம் இல்லை.

இருதிறத்தினர்க்கும் யுத்தம் நடந்தது. நெல்சன் எதிர்பார்த்த படியே நேபிள்ஸ் வீரர்கள் போரில் தோற்றுப் புற முதுகு காட்டி யோடினார்கள். பிரான்சுக்காரர்கள் நேபிள்ஸ் நோக்கி வந்து கொண்டிருந்தனர். அரச குடும்பத்தார் ஆபத்தில் இருந்தனர். இச்சமயத்தில் அரச குடும்பத்தினரைப் பகிரங்கமாக அழைத்துச் செல்லுதல் அபாயகரமானது என்பதை உணர்ந்த ஹேமில்டன் அம்மை, அரண்மனையிலிருந்து கடற்கரைக்குப் போகும் ஒரு பிலத்தின் வழியாக முதலில் பெட்டி பேழை முதலியவற்றை அனுப்பிய பின் அரச குடும்பத்தினரையும் அழைத்துச் சென்றனள். நெல்சனும் அவர்

களுடன் சென்று, எல்லோரையுங் கப்பலில் ஏற்றிக் கொண்டு பாலர்மோ நோக்கிப் புறப்பட்டான். இவர்கள் சென்ற சிறிது நேரத்திற்குள் பிரன்சுக்காரர்கள் நேபிள்ஸ் நகரத்தில் நுழைந்து அனைத்தையுங் கைப் பற்றினர்.

நெல்சனும் அரச குடும்பத்தாரும் பாலர்மோவுக்குப் போகும்போது புயல்காற்றுப் பலமாக ஆரம்பித்தது. எல்லோரும் திகில் கொண்டனர். கப்பலும் கடலில் மூழ்கும் தருவாயில் இருந்தது. பகைவர் கையிலிருந்து தப்பிப் பாவையில் மூழ்க நேர்ந்ததை எண்ணி எல்லோரும் கவலையுற்றனர். அத்தருணத்தில், ஹேமில்டன் பிரபு ஒரு தனியறைக்குள் சென்று, கையில் ஒரு துப்பாக்கியுடன் அமர்ந்திருந்தார். அவரை எல்லோரும் தேட ஆரம்பித்தனர். கடைசியாக, ஒரு தனியறையில் பதுங்கிக் கொண்டிருந்த அவரைக் கண்ணுற்று, "என்னே இது!" என வினவினர்கள். அதற்கு ஹேமில்டன், "ஐயன்மீர்! கடலில் மூழ்கிக் 'கடக்' 'கடக்' என்று உவர்நீரை உண்டு உயிர் நீத்தலைக் காட்டிலும் கப்பல் மூழ்கும் சமயத்தில் இத்துப்பாக்கியின் உதவியால் தற்கொலை செய்துக் கொள்ளத் தயாராயுள்ளேன்" என்று பதிலுரைத்தார். புயல் காற்றின் மிகுதி இவ்வளவு இருந்தும் நெல்சனது ஆற்றலால் கப்பல் இடரின்றிச் சென்று பாலர்மோ சேர்ந்தது.

நெல்சன் பாலர்மோவில் தங்கியிருந்த பொழுது எம்மாவுடன் அந்நியோன்யமாய்ப் பழக நேர்ந்தது. அவள் 1763-ம் ஆண்டில் பிறந்தவள். சிறுவயதில் தாதிப் பெண்ணாகவும் பணிப் பெண்ணாகவும் வேலை செய்து வந்தவள். துன்மார்க்க இளைஞர் பலர் அவளுக்கு நண்பர்களாயிருந்தனர். இவள் 1786-ம் வருடம் சர் வில்லியம் ஹேமில்டனுடன் உறவு கொண்டு ஐந்து வருடங்கட்குப் பின்னர் அவரையே மணம் செய்து கொண்டனள். இவள் பேரழகு வாய்ந்தவள். துடி யிடையினள். உடல் நலம் மிகுந்தவள். பார்த்தவர்கள், "இவள் வானவர் அணங்கோ! மண்ணவர் அமிழ்தோ!" என்று ஐயுறும் எழில் வதனம் உடையவள். இத்தகைய அழகுடன், பிறரைக் கவரக் கூடிய பிற திறன்களும் அவளுக்கு இருந்தன. குயிலினும் இனிய குரல் உடையாள். யாழினும் இனிமையாய்ப் பாடும் சங்கீத ஞானம் கற்றவள். நாடகமேடையில் நன்கு நடிக்கக் கூடிய திறனும் பெற்றவள். பொய்யுரைகளையும் பிறர் மெய்யென நினைக்கும் வண்ணம் புனைந்துரைக்கும் சொல்வன்மை படைத்தவள்.

எம்மாவும் நெல்சனும் ஆருயிர் நண்பராயினர். இருவரும் ஆடல் பாடல்களில் காலத்தைக் கழித்து வந்தனர். ஒருநாளிரவு, நெல்சன் மேஜையின் மீது நித்திரை மயக்கத்துடன் சாய்ந்து கொண்டிருந்த போது அவனது பொற் குவியல்களைப் பணயமாக வைத்து எம்மா சூதாடினதாகச் சொல்லப் படுகிறது.

இக்கூடா நட்பே நெல்சனது வாழ்க்கையில் ஒரு களங்கமாக முடிந்தது.

கப்பல்களை நேப்பிள்ஸ் அரசாங்கத்தின் நன்மைக்காகவே நெல்சன் உபயோகித்து வருவதாகப் பிரிட்டிஷ் அரசாங்கத்தினரும் அபிப்பிராயப் பட்டனர். நிகரற்ற வெற்றிகளைப் பெற்ற ஒரு வீரன், நன்னடக்கையும் ஒழுக்கமுமில்லாத ஒரு நங்கையுடன் நட்புக்கொண்டு காலத்தை வீணாக்குதலைக் குறித்து நெல்சனது நண்டர்கள் கவலையுற்றனர். நெல்சனது ஆருயிர் நண்பன் ஒருவன் இச்சமயத்தில் நெல்சனுக்கு எழுதிய கடிதம் ஈங்குக் குறிக்கத் தக்கது.

"ஐயா! சூதாட்டத்தில் உமக்குப் பிரியமில்லை என்பது எனக்குத் தெரியும். வீரமும் மானமும் இல்லாத ஒரு தேசத்தாரின் வழக்கத்திற் குட்பட்டுத் தேக ஆரோக்கியத்தையும், புகழையும், பொருளையுங் கெடுக்கத்தக்க ஆடல் பாடல்களில் நீர் காலத்தை வீணாக்குவது எனக்கு ஆச்சரியத்தை விளைவிக்கின்றது. உமது செய்கையைக் குறித்துப் பலர் பலவாறு தூற்றுகின்றனர். அவ்விழிவுரைகள் என் காதில் நாடோறும் நாராசம்போல் பாய்கின்றன. 'இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறுந் திருநீக்கப் பட்டார் தொடர்பு' என்னும் பொய்யா மொழியை உணர்ந்திலீர்போலும். இனியேனும் உமது ஆடல் பாடல்களை விட்டொழிக்க வேண்டுகின்றேன். இப்புன் மொழியால் என்மீது உமக்குக் கோபம் உண்டாகலாம் எனத் தெரிந்தும் 'நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண் மேற்சென் றிடித்தற் பொருட்டு'

என்னும் பொய்யா மொழிப்படி என் கடமையைப் புரிந்தேன். நன்னெறி நிற்பீராக"

நெல்சனுக்கும் எம்மாவுக்கும் ஏற்பட்ட நட்பு நிஸ்பெட்டுக்கும் வருத்தத்தை யுண்டாக்கியது. நெல்சனது நடத்தையைக் குறித்து, நிஸ்பெட்டு, தன் தாயாருக்குக் கடிதம் வரைந்தான். எம்மாவின் குண விசேடங்களை முன்னரே நன்கு உணர்ந்த நெல்சனது மனைவிக்குப் பொறுமையும் கவலையும் உண்டாயின. அவள் நெல்சனுக்கு எழுதிய கடிதத்தில், "ஆருயிர் நாயகா! நான் சுகமாயிருக்கின்றேன். ஆனால், உமக்கும் எம்மாவுக்குமுள்ள நட்பின் மிகுதியைக் கேட்டறிந்தபின் மனக்கவலையும் பொறுமையும் என்னை வருத்துகின்றன. உமது வரவை விரைவில் எதிர்பார்க்கின்றேன். நீர் வாவில்லையேல் நான் அங்கு வந்து சேருவேன். என் மனக்கவலை செப்புந் தரமன்று" என்று குறிப்பிட்டனுப்பினள். நெல்சனது தந்தையும் அறிவுரைகளைத் தீட்டிப் பல கடிதங்கள் அனுப்பினர். எழுதியும் என்? அவையெலாம் நீர்மேல் எழுத்தாயின.

நெல்சன் தன் குற்றத்தைத் தானே உணர்ந்தான். தனது வாழ்க்கையைக் குறித்து அதிருப்தி கொண்டான். உலக வாழ்க்கையை நஞ்சென வெறுத்தான். மரணத்தையே மனமார விரும்பினன். எனினும், எம்மாவின் உறவினின்றும் தன்னை விடுவித்துக் கொள்ள முடியாத நிலைமையிலிருந்தான். பேயோடு பழகுறினும் பிரிதலரிதா மன்றோ?

இத்தருணத்தில், நேபிள்ஸ் தேசத்தைத் தாக்கிக் கைப்பற்றுமாறு கப்பற்படையை நெல்சன் அனுப்பினன். உள்நாடு சென்று முற்றுகைக்கு உதவி புரியுமாறு ஆயிரம் மாலுமிகளும் அனுப்பப் பட்டனர். முற்றுகை ஆரம்பித்தது. பிரன்சுக்காரர்கள் நெருக்கடியான நிலைமையில் இருந்தனர். ஆங்கிலேயர்களோ வெற்றி பெறுந் தருவாயிலிருந்தனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில், பிரன்சுக் கப்பற்படையும் ஸ்பேனியப் படையும் ஒன்று சேர்ந்து கார்த்தஜீனவை நோக்கிச் சென்றன. இதனையுணர்ந்த பிரிட்டிஷ் படைத்தலைவராகிய லார்ட் கேயித் என்பவர், உடனே கப்பற் படையுடன் சென்று மைனர்காவைக் காக்குமாறு நெல்சனுக்கு உத்தரவு அனுப்பினர். நெல்சன் அவ்வுத்தரவுக்குக் கீழ்ப்படியவில்லை. லார்டு கெயித் மீண்டும் ஒரு முறை உத்தரவு அனுப்பினர். அதனையும் நெல்சன் மீறிவிட்டு, “ஐயா! உத்தரவுகளை மீறி நடப்பதால் விளையுந் தீங்கினை நன்கு அறிவேன். நேபிள்ஸும் சிஸிலியும் கைப்பற்றப்படும் தருவாயில் இருக்கின்றன. உமது உத்தரவின்படிக் கப்பல்களை இப்பொழுது நான் அனுப்பினல் கைக்கெட்டியது வாய்க்கு எட்டாமற் போகும். ஆதலால் மைனர்காவுக்கு இப்பொழுது ஒரு கப்பலையேனும் அனுப்ப மாட்டேன். பகைவர்கள் மைனர்காவைத் தாக்க மாட்டார் என நான் நம்புகின்றேன். ஒருகால் அவர்கள் அதைத் தாக்கிக் கைப்பற்றினும் பாதகமில்லை.

அதற்குப் பதிலாக இதாலி முழுவதையும் நாம் இங்கே கைப்பற்றக்கூடும். என் செய்கையின் முழுப் பொறுப்பையும் நான் அறிவேன். உத்தரவை மீறுவதால் எனக்கு அளிக்கப்படும் தண்டனையையும் ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்கின்றேன்" என்று ஓர் நிருபம் விடுத்தான்.

பிறகு, நேப்பிள்ஸ், சிஸிலி, ரோம் முதலிய இராஜ்யங்கள் பிரன்சுக்காரரிடமிருந்து நெல்சனால் கைப்பற்றப்பட்டன. பகைவர்கள் மைனர்காவையுந் தாக்கவில்லை. எனவே, நெல்சன் நினைத்தபடியே சகலமும் நிகழ்ந்தன. ஆனால், நெல்சன் செய்த குற்றங்கள் இரண்டு. மேலதிகாரியின் உத்தரவை மீறினது ஒன்று. மாலுமிகளை நிலப்போர்க்கு அனுப்பி அவர்களையும் கப்பல்களையும் ஆபத்துக்குள்ளாக்கியது மற்றொன்று. இக்குற்றங்களே புரைதீர்ந்த நன்மை பயந்தனவாதலால் எவ்வித தண்டனையும் நெல்சனுக்கு விதிக்கப்படவில்லை. ஆனால், இவ்விரு குற்றங்களையும் குறிப்பிட்டுக் காட்டி இனியேனும் அவற்றை விலக்குமாறு அரசாங்கத்தார் நெல்சனைக் கண்டித்தனர்.

இவ்விஷயமாக நெல்சன் தனது நண்பனுக்கு எழுதிய கடிதம் கீழ்வருமாறு—

"நண்ப! மேலதிகாரிகளுக்குக் கீழ்ப்படிதலே உயர்ந்த நோக்கமாகப் பலரால் கருதப் படுகிறது. இஃது மிகவும் அவசியமானதே. ஆனால், யுத்தமுனையில் சந்தர்ப்பங்கள் கணந்தோறும் மாறி நிற்கின்றன. அச்சந்தர்ப்பங்கட்கு ஏற்ற

வாறு யுத்தமுறைகளை அவ்வப்போது மாற்ற வேண்டியதே முறை. அப்படியிருக்க, எந்தச் சந்தர்ப்பத்திலும், எந்தக் காலத்திலும் ஆயிரம் மைலுக்கப்பாலுள்ள மேலதிகாரியின் கட்டளைப்படியே போர் புரிய வேண்டும் என்பதை நான் அங்கீகரிக்கமாட்டேன். தேச ஊழியமும், பிரன்சு மக்களைப் பூண்டறக் களைதலுமே என் வாழ்க்கையின் இலட்சியங்களா வன. இவைகளே எனக்கு இறைவன் ஆணையாம். மானி டர்களால் இடப்பட்ட ஏனைய உத்தரவுகள் எல்லாம் அவற்றிற் குக் கீழ்ப்பட்டனவேயாகும். கடவுள் ஆணையும் மானிடர் ஏவலும் முரண்படின் இறைவன் உத்தரவையே சிரமேற் கொள்வேன். பிரன்சுக்காரன் என்ற பெயரைக் கேட்ட வளவில் என் இரத்தம் கொதிக்கின்றது."

சிஸிலி அரசாங்கத்தார் நெல்சனுக்குத் தக்க பரி சுகள் அளிக்கத் தீர்மானித்தனர். ஆனல் நெல்சன் மறுத்து விட்டான். பிறகு, எம்மாவும் அரசனும் அதிக வற்புறுத்தியமையால் நெல்சன் கடைசியாகச் சம்மதித்தான். எனவே, மூவாயிரம் பவுன் வருமான முள்ள ஒரு ஜாகிரும், வைரம் இழைத்த கைப்பிடியுள்ள ஒரு வாளும், டியூக் (**Duke**) என்ற பட்டமும் நெல்சனுக்குப் பரிசாக வழங்கப்பட்டன.

நிற்க, நெபோலியன் எகிப்து தேசம் முழுவதை யும் வென்ற பின்னர் ஏக்கர் கோட்டையை முற்றுகை செய்தான். அம்முற்றுகை அநேக நாள் நடந்தது. ஆங்கிலேயரது சேனையும் ருஷியச்சேனையும் கடும்போர் புரிந்தன. பிரன்சு சேனையில் கொள்ளைநோய் கண்டு

பலர் இறந்து பட்டனர். எனவே, நெபோலியன் முற்றுகையை நீத்து எகிப்து திரும்பினன். பிரான்சுக்காரர்கள் இதாலி, மால்டா முதலிய இடங்களை இழந்து விட்டதாகவும், குடியரசுத் தலைவர்கள் சுயநலவிச்சையுடன் தங்கட்குள் சண்டையிட்டுக் கொள்வதாகவும் பிரான்சு தேசம் மிகவும் நெருக்கடியான நிலையில் இருப்பதாகவும் பத்திரிகைகளின் வாயிலாக நெபோலியன் அறிந்தான். உடனே தனது வீரர்களை எகிப்திலேயே நிறுத்திவிட்டுச் சில நண்பர்களுடன் இரு சிறு கப்பல்களில் ஏறிப் பிரான்சுக்குப் புறப்பட்டான். வழியில் எவ்வித இடையூறும் இன்றிப் பிரான்சைச் சேர்ந்தான். இதைக் கேள்வியுற்ற முடி மன்னர் எல்லோரும் மனங்குழைந்தனர். சில கப்பல்களை வழியில் நிறுத்திவைத்து நெபோலியன் மீண்டும் ஐரோப்பாவுக்குச் செல்லாவண்ணம் ஏற்பாடுகள் செய்ய நெல்சன் முன்னமே எண்ணினன். ஆனல், போதுமான கப்பல்கள் இன்மையாலும், இதர அலுவல்களில் நெல்சன் ஈடுபட்டு இருந்தமையாலும் அவ்வெண்ணம் அவலமாயிற்று. நெபோலியன் மீண்டும் ஐரோப்பா வந்தமைக்கு நெல்சனது அஜாக்கிரதையே காரணம் எனச் சிலர் நினைத்தனர். நெல்சனும் ஹேமில்டன் அம்மையும் பேசிக்கொண்டு நிற்பதுபோலவும் அவர்களுடைய கால்களின் மத்தியில் நெபோலியன் உயிர் தப்பிச் செல்வதுபோலவும் ஒரு விநோதப் படம் இங்கிலாந்தில் வரையப்பட்டு, அச்சிடப் பெற்று ஊரெங்கும் வழங்கப் பட்டது.

இத்தருணத்தில், ஹேமில்டனுக்குப் பதிலாக வேறொருவர் நேப்பிள்ஸ் மந்திரியாக நியமிக்கப்பட்டனர். எனவே, ஹேமில்டனும் எம்மாவும் இங்கிலாந்துக்குத் தரைமார்க்கமாய்ப் புறப்பட்டனர். நெல்சனும் விடுமுறை பெற்று அவர்களுடன் சென்றான். இவர்கள், சென்ற விடம் எல்லாம் சிறப்பொடு வரவழைக்கப்பட்டனர். அரசர்கள் விருந்தளித்தனர். ஜனங்கள் நெல்சனைக் காணத் திரள் திரளாய்க் குழுமினர். ஒரு ஊரில் ஒரு கிழவன் வேதபுத்தகம் ஒன்றைக் கையிலேந்தி நெல்சன்முன் தோன்றி, "ஐயா! எனக்கு வயது எண்பது. இவ்வேத புத்தகத்தின் முதற் பக்கத்தில் உமது கையெழுத்தைப் பெறும் பொருட்டு நாற்பது மைல் தூரத்திலிருந்து வந்துள்ளேன்" என்றான். அக்கிழவனது வேண்டுகோளுக்கு நெல்சன் உடனே இணங்கினான். கிழவனும் நெல்சனை ஆசீர்வதித்துத் திரும்பிச் சென்றான்.

கடைசியாக, நெல்சனும் அவனது பிரியா நண்பர்களும் யார்மத் துறைமுகத்தைச் சேர்ந்தனர். துறைமுகம் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது. மாந்தர்கள் இன்னிசை பாடி ஆரவாரித்தனர். இவற்றிற்கிடையே, நெல்சன் வண்டியில் ஏறினான். ஜனங்கள் உவகை மிகுதியால் வண்டியின் அருகே சென்று, குதிரைகளை அவிழ்த்து ஓட்டி, வண்டியைத் தாங்களே இழுத்துச் சென்றனர். எல்லோரும் கோயிற்குச் சென்று நெல்சன் சுகமாகத் திரும்பிவந்ததைக் குறித்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தினர். பிறகு, 1800-ம் வருடம் நவம்பர் மாதம் நெல்சன் தனது வீட்டுக்குச் சென்றான்.

---

## அத்தியாயம்—6.

பால்டிக் வெற்றி.

நெல்சன் தனது மனைவியுடன் இரண்டு மாதம் வசித்து வந்தான். அவ்வாழ்க்கை அவனுக்கு இன்பம் அற்றதாயிருந்தது. ஒரு நாள் நெல்சனும் அவனது மனைவியும் சில நண்பர்களுடன் உணவருந்துகையில் எம்மாவைப் பற்றிப் புகழ்ச்சியாகவும் பெருமையாகவும் நெல்சன் பேசினான். அதைக் கேட்ட மனைவிக்குக் கோபம் பொங்கியது. அவள் உடனே எழுந்து நின்று, "ஐயா! உமது ஆருயிர் எம்மாவின் பிரதாபங்களை நீர் அடிக்கடி சொல்லக் கேட்டுச் சலிப்புற்றேன். அவளுடைய நட்பினை ஒழிக்க வேண்டுகின்றேன். இல்லையேல் நானே பிரிந்துவிட நிச்சயித்துள்ளேன்" என்று கடிந்து கூறினாள். அதைக் கேட்ட நெல்சன், மனைவியைப் பார்த்து, "நங்காய்! அறியாது கூறினாய். உன்னை முழுவன்புடன் நேசிக்கின்றேன். ஆனால், எம்மா எனக்குச் செய்துள்ள பேருதவியை மறக்கவும் முடியாது; அவளைப் புகழ்ந்தும் பெருமைப் படுத்தியும் பேசுவதன்றி வேறுவிதமாகக் கூறலும் முடியாது" என்று அமைதியுடன் பதிலுரைத்தான். இதைக் கேட்டதும் நெல்சனது மனைவி அந்த இடத்தைவிட்டு

நீங்கினுள். இதன் பின்னர் அவர்கள் இருவரும் ஒன்று கூடி வாழவேயில்லை.

நிற்க, போர்க் கருவிகளையும் படைக்கலங்களையும் ஏற்றிச் செல்லும் பகைவாது கப்பல்களைக் கைப்பற்றிப் பறிமுதல் செய்யும் வழக்கத்தை ஆங்கிலேயர் அநேக ஆண்டுகளாகக் கையாண்டு வந்தனர். இக்கடலாதிக்கத்தைக் கண்டு ஐரோப்பாவின் வல்லரசுகள் பொறுமை கொண்டன. எனவே; ருஷியா, ஸ்வீடன், டென்மார்க்கு, பிரஷியா முதலிய தேசங்கள் ஒன்று சேர்ந்து ஆங்கிலேயரது கடல் ஆதிக்கத்தைத் தகர்க்க எண்ணின. பிரான்சு தேசத்தின் முதல் நாயகனுன நெபோலியனும் அவர்களுடன் நட்புக்கொண்டு பிரிட்டிஷாரது வியாபாரத்தை நாசஞ் செய்யத் தீர்மானித்தான். இவர்கள் எல்லோரும் இவ்வாறு ஒன்று கூடிச் சதியாலோசனை செய்து கொண்டிருந்ததை ஆங்கிலேயர் உணர்ந்தனர். பகைவர்களைத் தனித்தனியே தாக்கித் தமது நெருக்கடியான நிலைமையினை நிவர்த்திக்கக் கருதிய ஆங்கில அரசாங்கத்தார் ஒரு திரண்ட கப்பற் படையைப் பார்க்கர் என்பவரிடம் ஒப்புவித்து டேன்மார்க்கின் முக்கிய பட்டினமாகிய கோபன் ஹேகனைத் தாக்குமாறு கட்டளை யிட்டனர். நெல்சன் உப தலைவனுக நியமிக்கப்பட்டான். இருட்காலமானதாலும், பனிக்கட்டியின் மிகுதியாலும் பார்க்கர் சிறிது தளர்வுற்றுக் காலதாமதம் செய்து வந்தனர். நெல்சன் அவரைப் பார்த்து, “ஐயா! அஞ்சற்குக் காலம் இதுவன்று. பகைவர்மேல் பீரங்கிக் குண்டுகளை

மாரியெனப் பொழிந்து நமது கடல் ஆதிக்கத்தை நிலைநாட்டுவோம்" என்று வீரத்துடன் கூறினன். 1801 வருடம் மார்ச்சு மாதம் 12-ம் தேதி யார்மத் துறைமுகத்திலிருந்து கப்பற்படை புறப்பட்டது.

சின்னுட் சென்றபின் பார்க்கர் டென்மார்க் அரசனுக்குச் சமாதானச் செய்தி அனுப்பினர். டேனிஷ்காரர்கள் சமாதானத்துக்கு இணங்கவில்லை. இதைக் கேள்வியுற்றதும் நெல்சன் பார்க்கரை நோக்கி, "இனி ஒரு கணமேனும் தாமதம் வேண்டாம். நமது கால தாமதத்தால் பகைவர் தற்காப்பைப் பலப்படுத்திக்கொள்ளுகின்றனர். அவர்களைத் தாக்கி வெற்றியுற இதுவே தக்க காலமாகும். இங்கிலாந்து தேசத்தின் பெருமையும் புகழும் உமது பொறுப்பில் ஒப்புவிக்கப்பட்டுள்ளன. எய்தற்கு அரியது இப்பொறுப்பு. ஆதலால், செய்தற்கரியதைச் செய்வீராக. நம் தேசத்தின் ஆக்கமும் அழிவும் உம் கையில் உள்ளன. இங்கிலாந்தின் பெருமையைப் பெருக்கலும் பகைவரின் செருக்கினை அடக்கலும் உமது கடமையாகும்" என்று சொன்னன்.

உடனே, ஆலோசனைசபை கூடியது. டென்மார்க்கு அதிக பலமுள்ளதென்றும் அதனைத் தாக்குதல் எளிதன்று என்றும் பலர் பலவிதமாகப் பேசினர். பார்க்கருக்கும் யுத்தத்தை உடனே ஆரம்பிக்கப் பிரியமில்லை. டேனிஷ் கப்பல்கள் துறைமுகத்தினின்று வெளிக்கிளம்பும் வரையில் காத்திருந்து, அவைகள்

வெளியே வந்த பின்னர் யுத்தத்தைத் தொடங்குவதே சாலச் சிறந்தது என்று பார்க்கர் அபிப்பிராயப் பட்டார். ஆனால், நெல்சன் அதற்கு இணங்காமல் யுத்தத்தை உடனே ஆரம்பிக்குமாறு வற்புறுத்தினான். நெல்சனது வார்த்தையை மீற முடியாமல் எல்லோரும் இணங்கினர். பிறகு, மார்ச்சு மாதம் 30-ம் தேதி பிரிட்டிஷ் கப்பல்கள் கோபன்ஹேகனை நோக்கிச் சென்றன.

இதற்குள் தற்காப்பைப் பலப்படுத்திக்கொண்ட டேனிஷ்காரர்கள் யுத்தத்துக்குத் தயாராயிருந்தனர். பிரிட்டிஷ் கப்பல்களைக் கண்டவுடன் டேனிஷ்காரர்கள் கரையிலிருந்து பீரங்கிக் குண்டுகளைச் சரமாரியாய்ப் பொழிந்தனர். ஆனால், பிரிட்டிஷ் கப்பல்கள் கரைக்கு அதிக தூரத்தில் சென்றமையால் அக்குண்டுகள் அனைத்தும் கடலில் விழுந்து ஒழிந்தன. அன்றிரவு பிரிட்டிஷ் கப்பல்கள் கோபன்ஹேகனுக்கு அருகே சென்று தங்கின. அந்நள்ளிரவில், நெல்சனும் பார்க்கரும் பகைவர்களின் பலத்தைப் பரிசோதிக்கும் பொருட்டுப் படகுகளில் சென்று வேவுபார்த்து வந்தனர். வந்தவுடன் ஆலோசனைசபை கூடியது. டேனிஷ்காரர்களைத் தாக்குதல் இயலாத காரியம் என்றும் பகைவர்கள் அதிக எண்ணிக்கையினராய் இருப்பதால் யுத்தத்தில் இறங்காமல் திரும்பிவிடலே அறிவுடைமையாகும் என்றும் பலர் பலவிதமாகக் கூறினர். செய்வது இன்னதென அறியாமல் சபையார் தயங்கியபோது நெல்சன் எழுந்து நின்று, " அன்பர்களே! பகைவர்

கள் எம்மட்டும் படைவலி உடையரோ அம்மட்டும் நமக்கு நன்மையே யாகும். அவர்கள் இதனினும் இருமடங்கு பலமுடையராயிருப்பினும் எனக்கு விருப்பமே. ஏனெனில், நமது வெற்றியும் இருமடங்கு எளிதே யாகும். இதை நம்புவீர்களாக" என்று கர்ச்சித்துக் கூறினன். சுடர் விளக்காயினும் தூண்டு கோல் ஒன்று வேண்டும் என்பதேபோல் நெல்சனது வீரமொழிகளைக் கேட்டு எல்லோரும் துணிவு எய்திப் போர்க்கு எழுந்தனர்.

இதை யறிந்த டேனிஷ்காரர்களும் வீரத்துடன் எழுந்தனர். மாந்தர்கள் அனைவரும் தாய்நாட்டைக் காப்பாற்றத் தாமே முன்வந்தனர். பல்கலைக் கழகத்தாரும் ஆயிரத்திருநூறு வாலிபர்களைப் போர்க்கு அனுப்பினர். படையூற்றம் இல்லாத அவ்வாலிபர்கள் இரவு பகலாய் உழைத்துத் துப்பாக்கிகளையும் பீரங்கிகளையும் கையாள விரைவில் கற்றுக் கொண்டனர்.

இத்தருணத்தில், நெல்சன் ஊணுறக்கமின்றி உயிரையுந் துரும்பென மதித்து உழைத்து வந்தான். தனியே படகிற் சென்று கடலின் ஆழத்தை யறிந்து கப்பல்களுக்கு வழியைக் காண்பித்து வந்தான். ஒரு நாள் இரவு நெல்சன் மிகவும் இளைத்துக் களைத்திருந்தமையால், சற்றுக் களைப்பாறும்படி எல்லோரும் அவனை வற்புறுத்தினர். ஆனல், நெல்சன் அதற்கு இணங்காமல் கப்பற்றலைவர்களை அழைத்து அவர்களுக்குப் போர் முறைகளைப் புகட்டினன். அப்பொழுது அரு

கேயிருந்த பணியாள் ஒருவன் நெல்சனைப் பார்த்து "இக்கட்டிலில் சற்று படு" என்று அன்புடனும் அதி காரத்துடனும் ஏவினன். அனேக ஆண்டுகளாகத் தனக்குக் குற்றேவல் புரிந்து வந்தவனும், வயது முதிர்ந்தவனுமாகிய அவ்வேலைக் காரனது அன்பார்ந்த ஏவற்கு அடங்கி நெல்சன் கட்டிலிற் படுத்தான். படுத் தும் உறங்கினன் இல்லை. "மெய் வருத்தம் பாரார், பசி நோக்கார், கண் துஞ்சார், கருமமே கண்ணாயினர்" என்றபடி படுத்தவண்ணமே எல்லோர்க்கும் சொல் வனவற்றைச் சொல்லி முடித்தான்.

மறுநாட்காலை பத்துமணிக்கு யுத்தம் ஆரம்பித் தது. ஒரு மணி நேரத்திற்குள் போர் மும்முரமா யிற்று. அச்சமயத்தில் நெல்சனுக்குக் காற்றும் நீரோட்டமும் பிரதிகூலமாயின. ஆங்கிலேயருக்கு அச்சந் தோன்றியது. ஆனல், நெல்சனே கவலையும் அச்சமு மின்றிச் சந்தோஷமாயிருந்தான். அவனது முகத்தில் உவகைக் குறியே தோன்றியது. அவனது சம்பாஷணேயோ கேட்பவர்க்கு உற்சாகத்தையும் ஊக் கத்தையும் அளித்தது. இத்தருணத்தில் சிறிது தூரத் திலிருந்து பார்வையிட்டுவந்த பார்க்கர் தங்கட்கு நேர்ந்த பிரதிகூலங்களையும் பகைவரின் அயர்விலாமையையுங் கண்டு மனந்தளர்ந்து, சண்டையை நிறுத்திவிட்டுப் பின் வாங்கும்படி நெல்சனுக்கு அறிக்கை செய்தனர்.

முன் வைத்த காலை பின் வைக்காத நெல்சன் படைத்தலைவரின் அறிக்கையைக் கண்டான். கண் டதும் அளவிலாக் கோபம் கொண்டான். அறுபட்ட

அவனது வலது தோள் துடித்தது. கப்பற்றலைவனை விளித்து, "படைத்தலைவரின் அறிக்கை யாது?" என்று வினவினன். அதற்கு அவன், "யுத்த நிறுத்தமே" என்றான். அதைக் கேட்ட நெல்சன், "யுத்த நிறுத்தமா? போரினை நிறுத்துவனேல், 'தஞ்சென அடைந்தவர் தமக்கிடர் நினைக்கும் நஞ்சனைய பாதகர் நடக்கும் நெறிசேர்வேன்', ஒரு கண் உடையேன் ஆதலால் சில வேளைகளில் படைத்தலைவரின் அறிக்கையினைக் காணாதிருக்கும் உரிமையும் எனக்குண்டு" என்று சொல்லித் தூரதரிசினியைத் தனது பொட்டைக் கண்ணில் வைத்துப் பார்த்து, "தலைவரது அறிக்கையினை உண்மையிலேயே நான் பார்க்க முடியவில்லை" என்று கூறினன். எனவே மேலதிகாரியின் உத்தரவை அவமதித்துத் தனது இஷ்டப்படியே யுத்தத்தைத் தீவிரமாய் நடத்தினன். மற்றவர்களும் நெல்சனையே பின் பற்றி முனைந்து பொருதனர்.

டென்மார்க்குத் தேசத்தில் இதைப் போன்ற யுத்தம் எக்காலத்திலும் நடந்ததே இல்லை. டேனிஷ் வீரர்கள் வீரத்துடன் போர் புரிந்தனர். டேனிஷ் படையின் தலைவர்களும், வீரர்களும் பலர் இறந்தனர். அவர்களுக்குப் பதிலாக புதியோர் வந்து கொண்டே இருந்தனர். வில்லிமோஸ் என்னும் டேனிஷ் இளைஞனது தீரத்தையும் போர்த்திறத்தையுங் கண்டு நெல்சனும் வியப்புற்றான். பிற்பகல் இரண்டு மணிக்கு டேனிஷ்காரர்கள் சிறிது தளர்ந்து பீரங்கிப் பிரயோகத்தை நிறுத்தினர். அதற்குள், டேனிஷ் கப்பல்களில்

சில மூழ்கின ; சில தீவாய்ப்பட்டன; சில நாசமுற்றன; சில மணலிற் சிக்குண்டன ; சில கைப்பற்றப்பட்டன; சில திரும்பிச் சென்றன ; தோல்வியுற்ற கப்பல்களைக் கைப்பற்ற ஆங்கிலேயர் சென்றனர். ஆனுல், பகைவர்கள் இடையிடையே பீரங்கிகளை எறிந்தமையால் அஃது இயலாமற் போயிற்று. சுமார் இரண்டரை மணிக்கு யுத்தம் முடிந்தது. ஆங்கிலேயர் பக்கலில் ஓராயிரம் பேர் இறந்தனர். ஆனுல், பகைவர் பக்கலில் ஆறுயிரம்பேர் மாண்டனர். கடைசியாக நெல்சனே வெற்றி பெற்ருன்.

நெல்சன், பகைவர்களுடன் சமாதானம் செய்ய நினைத்து டேனிஷ் இளவரசனுக்குக் கீழ்கண்ட கடிதம் எழுதினுன். "ஐயா ! உமது கரையோரம் இருந்த கப்பல்கள் எல்லாம் கொடிகளைத் தாழ்த்தி விட்டன. தோல்வியுற்ற கப்பல்களை நாங்கள் கைப்பற்றப் போகும் போது பீரங்கிக் குண்டுகள் எங்கள்மீது எறியப் படுகின்றன. இஃது போர்முறை யன்று. எம்மால் கைப்பற்றப்பட்டுள்ள உமது கப்பல்களையும் வீரர்களையும் நாசமாக்கும்படி உமது செய்கையே எம்மைத் தூண்டுகிறது. ஆனுல், நீங்கள் எமது சகோதரர்களாதலால் அவ்வாறு செய்ய எமக்கு விருப்பமில்லை. எம்மிடத்து நீங்கள் பகைமை காட்டுதல் நீதியன்று. ஆதலால் உம்முடன் சமாதானம் செய்ய விழைகின்றேன்."

இந்நிருபத்தை எழுதியபின், ஒரு மெழுகுவத்தியை யும் அரக்கையும் கொணரும்படி நெல்சன் ஏவினன். அவை வந்தபின், அக்கடிதத்தை ஓர் உறையிற் போட்டு அதன்மீது அரக்கு முத்திரை இட்டு இளவாசற்கு அனுப்பினன். அருகிருந்தோர் நெல்சனைப் பார்த்து, "ஐயா! அக்கடிதத்தைச் சாதாரண உறையில் அனுப்பி யிருக்கலாமே. இவ்வளவு ஆடம்பரம் எதற்கு?" எனக் கேட்டனர். அதற்கு நெல்சன், "அப்படியன்று; சாதாரண உறையில் பசையொட்டி அனுப்பினல், மிக வும் அவசரத்துடனும், பரபரப்புடனும் அந்தக் கடிதத்தை நாம் அனுப்பியதாக இளவாசன் நினைத்து அலட்சியம் செய்யக்கூடும். அதை விலக்கவே முத்திரை வைத்து அனுப்பினேன்" எனப் பகர்ந்தனன்.

இந்நிருபத்தைப் பார்த்த இளவாசன், "உம் கடி தத்தின் நோக்கம் யாது?" என்ற பதில் கடிதம் அனுப் பினன். அதைப் பார்த்த நெல்சன், "எனது நிருபத் தின் நோக்கம் ஜீவ காருண்யமே யாகும். நீர் சமாதா னத்திற்கு இசைந்தால் எம்பால் சிறைபட்டுள்ள உமது வீரர்கள் விடுதலைபெற்று உயிர்தப்புவர். டென் மார்க்கு தேசத்திற்கும் இங்கிலாந்துக்கும் பகைமை ஒழிந்து ஒற்றுமை ஏற்படின், இவ்வெற்றியினைப் பெரிய தோர் வெற்றியென நான் எஞ்ஞான்றும் கருதுவேன்" என்று பதில் எழுதி மீண்டும் இளவாசற்கு அனுப் பினன்.

சமாதான விஷயமாய் நெல்சனும் இளவாசனும்

நேரிற் கலந்து யோசித்தலே சாலச் சிறந்ததெனத் தீர்மானிக்கப்பட்டது. நெல்சனும் இளவரசனைக்காண அவனது அரண்மனைக்குச் சென்றான். நெல்சனது தற்காப்பையும் அந்தஸ்தையுங் கருதித் திரண்ட மெய்க் காப்புப் படையொன்று நெல்சனுடன் சென்றது. தங்கள் தேசத்தைச் சீர்குலைத்து நாசப் படுத்திய நெல் சனை டேனிஷ்காரர்கள் அதிசயத்தோடும் அருவருப் புடனும் நோக்கினர். நெல்சனைக் கண்டு அவர் ஆர வாரம் செய்திலர்; அவமரியாதையான மொழிகளையும் கூறிற்றிலர். ஆரவாரம் செய்தல் சுயமரியாதையின்மை யைக் காட்டும். அவமரியாதையாகப் பேசுதலோ ஒழுங்கீனத்தைக் காட்டும். எனவே, அவ்விரண்டு மின்றி வீரஞ் செறிந்த மாந்தர் மற்றொரு வீரம் நிறைந்த பகைவனை எவ்வாறு வரவேற்க வேண்டுமோ அவ் வாறே நெல்சனும் வரவேற்கப் பட்டான். சமாதான விஷயமாய் ஆலோசனை நடந்தது. அப்பொழுது நெல் சன் இளவரசனைப் பார்த்து, "அரசே! நூற்றுக் கணக்கான போர்களைப் புரிந்துள்ளேன். ஆனல் இந்த யுத்தமே மிகப் பெரியதும் கொடியதும் ஆகும். யுத்தத்தில் பிரன்சுக்காரர் வல்லுநரே. ஆனல், அவர்களைக் காட்டிலும் நீங்களே தைரியசாலிகள். ஏனெனில், நான்கு மணிநேரம் நீங்கள் முனைந்து வெஞ் சமர் புரிந்தீர். பிரன்சுக்காரர்களாயின் ஒரு மணி நேரத்தில் பஞ்செனப் பறந்திருப்பர்" என்று சொன் னான். பிறகு, நெல்சன் வில்லிமோஸ் என்னும் இளை ஞனது வீரச் செயலைப் புகழ்ந்துபேசி அவனைத்

தனக்கு அறிமுகப் படுத்துமாறு அரசனை வேண்டி ஞன். அவ்வாறே அரசனும் அறிமுகப் படுத்தினன். நெல்சனும் வில்லிமோஸும் கைகுலுக்கி நட்புற்றனர். நெல்சன் பின்னரும் இளவரசனைப் பார்த்து, "ஐயா! இவ்வீரன் அஞ்சா நெஞ்சினன். இவனே உம் வீரர் களிற் சிறந்தவன். இவனை விரைவில் கப்பற்றலைவன் ஆக்குவீர்" என்றான். அதைக் கேட்ட இளவரசன், "வீரனே! வீரஞ் செறிந்தோரை எல்லாம் தலைவராக்கு வது என்றால் சீழ் உத்தியோகங்கட்கு உரியவர் எம் தேயத்தில் எவருமிலர்" என்று இறுமாந்து கூறினன்.

சமாதானப் பேச்சு ஐந்து நாட்கள் நடந்தது. போர்நிறுத்தம் எத்துணைக் காலம் நீடிக்க வேண்டும் என்பதைக் குறித்து விவாதம் ஏற்பட்டது. இருதிறத் தினர்க்கும் அபிப்பிராயபேதம் தோன்றியது. அந்தச் சமயத்தில் டேனிஷ் மந்திரி ஒருவர், "யுத்த ஆரம் பமே சரி" என்று பிரன்சு பாஷையில் கூறினர். அதை யறிந்த நெல்சன் பிரன்சு மொழியிலேயே பதிலுரைக்க முடியாமல், "யுத்த ஆரம்பமா? அதற்கும் நாங்கள் தயாராயுள்ளோம். டென்மார்க்கை இன்றிரவே நாச மும் செய்வோம்" என்று ஆங்கிலத்தில் கூறி அதனை மொழிபெயர்த்துக் கூறுமாறு அருகிருந்தவரை ஏவி ஞன். நெல்சனது கோபத்தைக் கண்டு அனைவரும் அமைதியுற்றனர். பிறகு, அதிக விவாத மின்றி நெல் சனது விருப்பப்படியே யுத்தம் பதினன்கு வாரங்கள் நிறுத்தப்படவேண்டு மென்றும், அதன் பின்னர் யுத்

தத்தில் இறங்குவதாயின் பதினன்கு நாள் முன்னதாக அறிக்கை செய்தல் வேண்டும் எனவும் சமாதானம் நிறைவேறியது.

இவ்வெற்றியின் காரணமாக வைகவுண்ட் என்ற பட்டம் நெல்சனுக்குக் கொடுக்கப்பட்டது. நெல்சனது அரிய செயற்கு அப்பட்டம் ஏற்றது அன்று எனினும், நெல்சன் அதை விருப்பமுடன் ஏற்றுக் கொண்டான். ஆனல், டேனிஷ்காரர்களை அவமதிக்கக் கூடாது என்றோ, அல்லது மற்றக் காரணங்களை முன்னிட்டோ வீரர்களுக்கு எவ்விதப் பரிசும் அரசாங்கத்தால் வழங்கப்பட வில்லை. இதைக் குறித்துப் பெரிதும் மனக் கவலையடைந்த நெல்சன், "யுத்தத்தில் வெற்றியுற்றோர்க்குப் பரிசு அளிக்கும் விஷயத்தில் அரசர்க்கே முழுச் சுதந்தரமும் உண்டு என்பதை அறிவேன். ஆனல், வெற்றியுற்ற வீரர்களுக்குப் பதக்கங்களும் பரிசுகளும் அளிப்பதாக, 1794-ம் ஆண்டில் அரசர் எனக்கு வாக்களித்தனர். அரசர் சொற்படியே வின்செண்ட், நைல் முதலிய வெற்றிகளை முன்னிட்டுப் பதக்கங்களும் பரிசுகளும் வீரர்க்கு வழங்கப்பட்டன. ஆனல், மிகவும் அரியதும் சிறந்ததுமான கோபன்ஹேகன் வெற்றியை முன்னிட்டு எவ்விதப் பரிசும் வீரர்க்கு வழங்காததன் காரணம் யாதோ அறிகிலேன்" என்ற நிருபத்தை அனுப்பினன்.

பிறகு, நெல்சனைச் சில கப்பல்களுடன் கோபன் ஹேகனில் நிறுத்திவிட்டு, எஞ்சிய கப்பல்களுடன்

பார்க்கர் ருஷியா நோக்கிச் சென்றார். வழியில் ஸ்வீடன் தேசத்துக் கப்பற்படை கட்புலனாயது. கோபன்ஹேகனில் இருந்த நெல்சனுக்கு அச்செய்தி இரவில் எட்டியது. நெல்சன் குளிர் மிகுதியையுங் கவனியாமல் ஓர் படகிலேறி உடனே புறப்பட்டான். அவசர மிகுதியால் தனது கம்பளிச் சட்டையை எடுத்துச் செல்லவும் மறந்தான். கொஞ்ச தூரம் சென்றபின் நெல்சனது நண்பன் தனது கம்பளிச் சட்டையை நெல்சனிடம் கொடுத்து அதனைத் தரித்துக் கொள்ளுமாறு வேண்டினான். அதற்கு நெல்சன், "நண்ப! எனக்குக் குளிர் இல்லை. தாய் நாட்டின் கவலையே என் உடலை உஷ்ணத்துடன் வைத்திருக்கிறது" என்று விடையளித்தான். அந்தக் கொடுமையான குளிரில் ஐந்து மணிநேரம் பிரயாணம் செய்து தனது கப்பற்படையை அணுகினான். அணுகலும் ஸ்வீடன் தேசத்தார் சமாதானச் செய்தி அனுப்பினர். இத்தருணத்தில், ருஷியா தேசத்தின் மன்னனாகிய பால் என்பவன் குடிமக்களால் கொல்லப்பட்டு இறந்தான். அவன் மைந்தனான அலெக்ஸாந்தர் என்பவன் முடிசூட்டப்பட்டான். அவனும் பார்க்கருக்குச் சமாதானச் செய்தி அனுப்பினான். எனவே, டென்மார்க்கு, ஸ்வீடன், ருஷியா முதலிய மூன்று தேசங்களும் பகைமையை நீத்து இங்கிலாந்துடன் நட்புக் கொண்டமையால் பால்டிக் வெற்றி மிகவும் சிறந்ததென இற்றைக்கும் கொண்டாடப் படுகிறது.

இந்த நிலைமையில், பார்க்கர் இங்கிலாந்து சென்றார். நெல்சன் படைத்தலைவனாக நியமிக்கப் பட்டான். நெல்சன் ரிவல் என்னும் துறைமுகம் சென்று, அலெக்ஸாந்தருடன் நட்புக்கொண்டு, பால் மன்னனால் கைப் பற்றப்பட்டிருந்த ஆங்கிலக் கப்பல்களைச் சிறை மீட்ட பின், டென்மார்க்குக்குத் திரும்பினான். அப்போது, நெல்சனது தமையனார் இறந்தனர். அந்தத் துக்கச் செய்தியைக் கேட்டவுடன், நெல்சன் தனது அண்ணியார்க்குப் பின்வரும் கடிதம் எழுதினான்.

" என் அருமை அண்ணியரே! நீரோ ஆருயிர்க் காதலரை இழந்தீர். நானோ தமையனை இழந்தேன். இத்துன்பம் என் மனதைப் பிளக்கின்றது. எனினும், என் செய்வது? ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவதில்லை என்பதை யுணர்ந்து ஆறுதல் அடைவதே அறிவுடைமையாகும். உமக்கு வேண்டிய உதவிகளைச் செய்யுமாறு என் நண்பர் ஒருவர்க்கு இன்று கடிதம் எழுதியுள்ளேன். என் அண்ணர் அதிக தயாளகுணம் உடையவர். அவர் அதிகச் செலவாளி. ஆகையால் அவர் வைத்துப்போன பொருள் அதிகமாயிருக்காது என எண்ணுகிறேன். நானோ அவரது ஏவலாளி. எனவே, உமக்குப் பொருள் உதவி வேண்டியிருப்பின், அவ்வுதவியைப் புரிய நான் எப்போதும் தயாராயுள்ளேன். "

இக்காலத்தில் நெல்சனது தினசரி வழக்கங்களிற் சில கூறுதும். நெல்சன் வைகறை எழுந்து காலக் கடன்களை முடித்துக்கொண்டு ஆறு மணிக்குள் உண

வருந்துதல் வழக்கம். தினந்தோறும் முறைப்படி இருவரை விருந்துக்கு அழைப்பான். சாப்பிடும்போது நெல்சன் சந்தோஷமாகவும், குதூகலமாகவும் இருப்பான். விருந்தினரை உபசரித்து, முகமன் கூறி மகிழ்விக்கும் உத்தம குணம் நெல்சனிடம் சிறந்து விளங்கியது. எல்லோரிடத்தும் மரியாதையாகப் பேசுவான். எந்த வேலையையும் தள்ளிவைக்காமல் அப்பொழுதே செய்து முடிப்பான். காலத்தை வீணுக்க மாட்டான். "காலமே முக்கியமானதாகும். ஐந்துநிமிட வித்தியாசமே வெற்றியைத் தோல்வியாக்கும்; தோல்வியை வெற்றியாக்கும்" என்று நெல்சன் அடிக்கடி கூறுவதுண்டு.

பகைவர்களுடன் சமாதானமாற்றி இங்கிலாந்தின் கடலாதிக்கத்தை நிலைநாட்டியபின், ஜூன் மாதம் 1-ந் தேதி நெல்சன் இங்கிலாந்து சென்று அங்கு இனிதிருந்தான்.

---

# அத்தியாயம்—7

## போலோன் பாசறை.

ஐரோப்பாவின் நேசக் கட்சியினர் பால்டிக் யுத்தத்தில் தோல்வியுற்று இங்கிலாந்துடன் நட்புக் கொண்டமையால், நெபோலியனது எண்ணம் அவலமாய்ப் போயிற்று. இங்கிலாந்து தேசத்தைக் கடற்போரில் வெல்லுதல் இயலாத காரியம் என்று அறிந்த நெபோலியன் இங்கிலாந்தின்மீது படையெடுத்துச் சென்று அதனை நிலப்போரில் தாக்கி வெற்றிபெற எண்ணினான். எனவே, இங்கிலீஷ் கால்வாயைக் (English Channel) கடந்து செல்லற்குக் கப்பல்கள் தயாரிக்கப்பட்டன. பிரான்சு தேசம் முழுவதும் போர்க்குத் தயாராயிருந்தது. ஒரு லட்சம் வீரர்கள் முன்வந்தனர். பீரங்கிப் படகுகள் தயாரிக்கப்பட்டன. பிரான்சு தேசத்தின் கரையோரங்கள் நன்கு காக்கப்பட்டன. பிறகு, போலோன் என்னுமிடத்தில் இராணுவத்தையும் கடற்படையையும் அணிவகுத்து இங்கிலாந்தைத் தாக்குவதற்குத் தக்க தருணத்தை நெபோலியன் எதிர்பார்த்திருந்தான்.

நெபோலியனது ஏற்பாடுகளைக் கண்டு ஆங்கிலேயரும் அஞ்சினர். இங்கிலாந்து தேசம் கடல் அரசியே

யாயினும் நிலச்சண்டையில் நெபோலியனுக்கு அஞ்சி யது. சிறந்த இராணுவத்தையும் கடற் படையையும் ஆங்கிலேயர் ஆங்காங்கு அமைத்து, நெல்சனை படைத் தலைவனாக நியமித்தனர்.

ஒருநாள், நெல்சன் தனது கப்பல்களுடன் போலோனுக்கருகே சென்று பகைவரின் இரண்டு படகுகளை நாசஞ் செய்தான். அவைகளிலிருந்த அநேக பிரன்சு வீரர்கள் இறந்தனர். போலோனி லிருந்து வெளிக் கிளம்புதல் முடியாத காரியம் எனப் பகைவர்கள் உணரும் வண்ணஞ் செய்துவிட்டு, நெல்சன் திரும்பினான்.

சில வாரங்கட்குப் பின்னர், மறுபடியும் பிரன்சுக் கப்பல்களைத் தாக்கி நாசஞ் செய்ய நெல்சன் புறப்பட் டான். நெல்சன் தனது படையை நான்கு பிரிவாகச் செய்து, ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு தலைவனை நியமித்து நள்ளிரவில் புறப்பட்டான். இருள் மிகுதியாலும், அலைகளினாலும், அந்நான்கு பிரிவுகளும் தனித்தனியே அதிக தூரம் பிரிந்து சென்றன. பிறகு, எல்லோரும் ஒன்று சேர்ந்து பிரன்சுப் படகுகளைத் தாக்கினர். ஆனால், பிரன்சுக்காரர்களோ தற்காப்பைப் பலப்படுத்தி இருந்தனர். ஒவ்வொரு படகைச் சுற்றிலும் கூர்மை யான ஈட்டிகளை அமைத்திருந்தனர். படகுகள், ஒன் றுக்கொன்று இரும்புச் சங்கிலியால் பிணைக்கப்பட்டி ருந்தன. ஒவ்வொரு படகும் கரையிலிருந்து இழுக் கப்படுமாறு நீண்ட இரும்புச் சங்கிலியால் கட்டப்பட்

டிருந்தது. கரையோரத்தில் அநேக பீரங்கிகளும் அமைக்கப்பட்டிருந்தன. இதை அறியாத ஆங்கிலேயர்கள் பிரன்சுப் படகுகளைத் தாக்கிச் சமர் செய்தனர். பகைவரின் படகுகளில் ஒன்றையேனும் ஆங்கிலேயர் கைப்பற்ற முடியவில்லை. ஆங்கிலேயர் பக்கத்தில் நாற்பத்தைந்துபேர் இறந்தனர். அடிபட்டவர்கள் அதனினும் அதிகம். எனவே, நெல்சன் ஏமாற்றம் அடைந்து திரும்பினான்.

நிற்க, நெல்சன் தனக்காக வீடொன்றை வாங்கி அதை அழகுபடுத்தி வைக்குமாறு எம்மாவுக்குக் கடிதம் எழுதினான். நெல்சனது கட்டளையின்படியே எம்மாவும் "மெர்ட்டன் அகம்" என்னும் ஒரு வீட்டினை வாங்கி அதனைத் தோட்டம் முதலியவற்றால் எழில் பெறச் செய்தனள்.

இச்சமயத்தில், இங்கிலாந்தில் ஒரு பஞ்சம் நேர்ந்தது. அப்போது ஜனங்கள் உணவின்றி வருந்தினமையால் சமாதானத்தையே விரும்பினர். ஆங்கிலேயரது கடல் வெற்றிகளைக் கண்ட நெபோலியனுக்கும் ஒருவித திகில் உண்டாயது. எனவே, இருதிறத்தினரும் சமாதானத்தையே அவாவினர். ஏமியன்ஸ் என்னுமிடத்தில் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் உடன்படிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டது.

பிரன்சுக்காரர்கள் எகிப்து தேசத்தை ஆங்கிலேயருக்கு விட்டுவிட்டு வெளியேறவேண்டுமென்றும்,

மால்டா தீவினைப் பழைய அரசர்க்கே கொடுத்து விட்டு ஆங்கிலேயாது சேனையும் பிரன்சுச் சேனையும் வெளியேறவேண்டுமென்றும் உடன்படிக்கை நிறைவேறியது. இரண்டு அரசாங்கங்களும் ஏகோபித்து அவ்வுடன்படிக்கையில் கையெழுத்திட்டன.

இவ்வுடன்படிக்கை ஆங்கிலேயராலும் பிரன்சுக் காரராலும் கொண்டாடப்பட்டது. இரண்டு தேசங்கட்கும் பகைமை ஒழிந்து உறவு ஏற்பட்டது. நெல்சனும், "மெர்ட்டன் அகம்" சென்று, சின்னாள் இளைப்பாறினான். நெல்சனது தந்தையார் எழுபத்தொன்பதாம் வயதில் இறந்தார். தந்தையின் மரணத்தைக் குறித்து நெல்சன் மனம் நொந்து கவலை எய்தினான்.

ஏமியன்ஸ் சமாதானம் முடிந்ததும் பிரன்சுக்காரர் எகிப்தைக் காலி செய்தனர். எனவே, எகிப்து தேசம் ஆங்கிலேயருக்குச் சொந்தமாயிற்று. இதை முன்னிட்டு லண்டன் நகரசபையார் இராணுவத்திற்கும் கடற் படைக்கும் ஓர் விருந்து அளித்தனர். நெல்சனும் அவ்விருந்துக்கு அழைக்கப்பட்டான். ஆனால், நெல்சன் அவ்விருந்துக்குப் போகாமல் கீழ்க்கண்ட நிருபத்தைச் சபைத்தலைவர்க்கு அனுப்பினான்.

"ஐயா! முன்னொரு நாள் வின்செண்ட் வெற்றியை முன்னிட்டு எமக்கு ஒரு விருந்து வைத்து, வீரர்க்குப் பரிசும் வழங்கினீர். 'ஒவ்வொரு வெற்றிக்கும் பரிசளிக்கும் வழக்கத்தை நீர் கைக்கொண்டால், இந்நகரத்தார் செல்வமெல்லாம் பரிசளிப்பதிலேயே செலவழிந்துபோம்' என்று நான் அப்

பொழுது சொன்னேன். அதற்குத் தாங்கள் என்னைத் தட்டிக் கொடுத்து, 'வீரனே! நீ வெற்றிகளைத் தேடு, நாங்கள் வெகுமதியைத் தேடுவோம்' என்று அன்புடன் விடையளித்தீர். உமது மொழிப்படியே ஒவ்வொரு சிறிய வெற்றிக்கும் வெகுமானங்களைத் தவறாமல் இதுவரை அளித்து வந்தீர். ஆனால், பால்டிக் வெற்றியை நீவிர் முற்றிலும் மறந்தீர். நமது வீரர்களின் தீரத்தாலும் ஆற்றலாலுமே வெல்லற்கரிய டேனிஷ் படையை நாசஞ் செய்தோம். நம் நாட்டின் கடலாதிக்கத்தையுங் காப்பாற்றினோம். உயிரையுந் துரும்பென மதித்து வெஞ்சமர் புரிந்தோம். பல வெற்றிகளினும் இதுவே சிறந்ததாகும். அங்ஙனமிருந்தும், அதனை அசட்டை செய்து எம்மை அவமதித்தீர். யுத்த காலத்தில் என் உத்தரவிற்கடங்கி இரத்தத்தைச் சிந்திய போர்வீரர்களைக் குறித்தே நான் மிகவும் வருந்துகின்றேன். அவர்களின் வீரத்தையும் நன்னடக்கையையும் தருணம் வாய்த்த போது எடுத்துரைக்க வேண்டுவது எனது கடமையன்றோ?"

நெல்சன் தனது கீழுத்தியோகஸ்தர்களிடத்து எவ்வளவு அன்புடனும் கருணையுடனும் இருந்தான் என்பதை இந்நிருபமே கூறுநிற்கும். கீழதிகாரிகளை நெல்சன் எப்போதும் அன்புடன் நடத்திவந்தானேயன்றி அவர்களிடம் கொடுமையையும் கோபத்தையும் காட்டினானில்லை. அவர்களுக்கு நன்மையையும் உதவியையும் செய்தற்குரிய சந்தர்ப்பத்தை நெல்சன் எதிர்பார்த்த வண்ணமே இருப்பான். தைரியமில்லார்க்குத் தைரியத்தையும், ஆத்திரக்காரர்க்கு அமைதியையும் அவ்வப்போது நெல்சன் ஊட்டிவந்தான். எல்லோரையும் சகோதரர்போல் பாவித்து வந்தான். "ஆள விரும்பு

வோன் அடங்கி இருக்கக் கற்கவேண்டும். அடக்கம், இரக்கம், அமைதி, அன்பு முதலிய நற்குணங்கள் இல்லாதான் உயர்பதவி வகித்தற்குத் தகுதியற்றவன்" என்று நெல்சன் அடிக்கடி கூறுவதுண்டு.

கீழதிகாரிகளும் நெல்சனை அன்புடன் நேசித்தனர். நெல்சனது கட்டளையைச் சிரமேற்கொண்டு அவர்கள் ஊக்கத்துடன் உழைத்து வந்தனர். "நமது நெல்சன், தைரியத்தில் அடலேறு அனையான்; அடக்கத்தில் பசுவை நிகர்த்தவன்" என்று அவர்கள் அடிக்கடி கூறுவதுண்டு.

இத்தருணத்தில், ஹேமில்டன் பிரபு நோயுற்றார். நெல்சனும் எம்மாவும் அவர் அருகிருந்து ஆறுநாள் அவர்க்குச் சிகிச்சை செய்தனர். கடைசியாக, ஹேமில்டன் பிரபு ஒரு கையில் நெல்சனையும் மற்றொரு கரத்தில் எம்மாவையும் பிடித்துக்கொண்டு நெல்சனைப் பார்த்து, "வீரரே! எம்மாவை உமது பாதுகாப்பில் விடுத்துச் செல்கின்றேன். இங்கிலாந்துக்கு அவள் செய்துள்ள உதவியினை நீரே நன்கு உணர்வீர். அவளைப் பாதுகாத்தல் அரசாங்கத்தின் கடமையாகும். அவ்விஷயத்தில் சிரமம் எடுத்துக்கொள்ளுமாறு உம்மை வேண்டுகின்றேன். நட்பிலும், வீரத்திலும், சன்மார்க்கத்திலும் சிறந்த புருடர் நீரே. உம்மைக் கடவுள் ஆசீர்வதிப்பாராக" என்று சொல்லிக்கொண்டே 1803-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் உயிர் துறந்தார்.

பிறகு, எம்மாவுக்கு உபகாரச் சம்பளம் கொடுத்தருளுமாறு நெல்சன் அரசாங்கத்துக்கு விண்ணப்பம் அனுப்பினுன். "தேசத்தினர் எம்மாவுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளார்" என்று அரசாங்கத்தார் பதிலனுப்பிவிட்டுப் பணவுதவி சிறிதும் அளிக்காது வாளாவிருந்தனர். அரசாங்கத்தாரால் எம்மா கைவிடப்பட்டதை அறிந்த நெல்சன் மாதம் நூறு பவுன் வீதம் தனது மாணபரியந்தம் அவளுக்குத் தானே கொடுத்துவந்தான்.

## அத்தியாயம்—8

பகைவரைத் துரத்தல்.

**1803—1805.**

இங்ஙனமிருக்க, எமியன்ஸ் சமாதானம் நிராகரிக்கப்பட்டது. அதன் காரணங்களை விரிவஞ்சி ஈங்குக் கூருது விடுத்தனம். எனவே, பிரான்சுக்கும் இங்கிலாந்துக்கும் மீண்டும் பகைமை ஆரம்பித்தது. மத்திய தரைக்கடலிலுள்ள கப்பற்படைக்குத் தலைவனாக நெல்சன் நியமிக்கப்பட்டான். மே மாதம் 20-ஆம் தேதி நெல்சன் புறப்பட்டு, மத்திய தரைக்கடற் சென்று, தவுலன் அருகே தங்கியிருந்தான்.

நெல்சன் காவல்பூண்டு இருப்பதை அறிந்த பிரன்சுக் கப்பல்கள் தவுலன் துறைமுகத்தினின்று வெளிக்கிளம்பாமல் இருந்தன. இடையிடையில் இரண்டொரு பிரன்சுக் கப்பல்கள் வெளியே வருவதும், நெல்சனால் துரத்தப்பட்டு மீண்டுந் துறைமுகம் போவதுமாய் இருந்தன. சுமார் இரண்டு வருடகாலம் நெல்சன் அயர்விலாது தவுலனில் காவல்புரிந்தான். ஆங்கிலேய வீரர்கள் எல்லோரும் உடல் நலத்துடன் இருந்தனர். ஆனால், நெல்சன் மாத்திரம் உடல் நலங் குன்றி மெலிந்திருந்தனன்.

நீண்டகாலம் பிரான்சுக்காரர்களை வெளிக்கிளம்பா மற் காத்துவந்தமைக்காக லண்டன் நகரசபையார் நெல்சனுக்கு வந்தனோபசாரம் அனுப்பினர். இதைக் கண்டதும் நெல்சன், "ஐயா! உமது வந்தனத்தைப் பொன்னேபோல் போற்றுகின்றேன். ஆனால், வெற்றிகள் எல்லாவற்றினும் தலைசிறந்ததாகிய பால்டிக் வெற்றியைக் குறித்துத் தாங்கள் மௌனமாயிருந்துவிட்டு, இந்தச் சாதாரணமான செய்கைக்கு வந்தனம் அனுப்புதல் ஒரு பக்கம் அவமானத்தையும் மற்றொரு பக்கம் வருத்தத்தையும் அளிக்கின்றது. நாங்கள் தவுலனை முற்றுகை செய்யவில்லை என்பதை உங்கட்குத் தெரிவிக்கின்றேன். பகைவர்களை எவ்விதத்திலேனும் வெளிக்கிளம்பச் செய்து அவர்களைத் தாக்கி நசுக்குதலே எங்கள் நோக்கமாகும். அவர்கள் வெளியே வாராமல் உள்ளேயே பதுங்கி இருப்பது எமக்குக் கவலையைத் தருகின்றது. மேலும், உமது வந்தனோபசாரத்தில் எனது கீழதிகாரிகளைக் குறிப்பிடாமலிருப்பது மெத்தவும் வருந்தத் தக்கது" என்று சபைத் தலைவர்க்கு ஓர் கடிதம் அனுப்பினான்.

ஒருநாட்காலை, சமுத்திரம் அலையில்லாமலிருந்தது. மாலுமிகள் எல்லோரும் அமைதியோடிருந்தனர். அத்தருணத்தில் வேலையாள் ஒருவன் கடலில் தவறி விழுந்து, நீந்தத் தெரியாமல் தடுமாறிக்கொண்டிருந்தான். அதைக் கண்ட கீழதிகாரி யொருவன்

உடனே கடலிற் குதித்து அவனைக் காப்பாற்றினன். இவற்றையெலாம் பார்த்துக்கொண்டிருந்த நெல்சன் அந்தக் கீழதிகாரியை ஓர் உயர்ந்த பதவியில் அமர்த்தினன். அதை யறிந்த மற்றைய உத்தியோகத்தர்கள் கரகோஷம் செய்து நண்பனுக்கு வாழ்த்துக் கூறினர். நெல்சன் அங்கே சென்று, கூச்சலை அடக்கிவிட்டு, "இளைஞர்களே! இரையாதீர்கள். உமது நண்பன் ஓர் வீரச் செயல் புரிந்தான். இதைப்போன்ற தீரச் செயல்களை இதற்கு முன்னரும் அவன் செய்துள்ளானதலால் அவனுக்கு உயர்பதவி அளித்தேன். ஆனல், இத்தகைய செயலுக்கு எவ்விதப் பரிசும் இனி வழங்கேன் என்பதை உணர்வீராக" என்று சொன்னன்.

இதற்குள், இங்கிலாந்திற்கும் ஸ்பெயினுக்கும் பகைமை மூற்றியது. எனவே, ஸ்பெயின் தேசத்தின் திரவியக் கப்பல்களைத் தாக்கிப் பறிமுதல் செய்யுமாறு ஒரு சிறிய கப்பற்படையை ஜான் ஓர்டு என்பவரின் தலைமையின்கீழ் அரசாங்கத்தார் அனுப்பினர். காடிஸ் துறைமுகத்துக் கருகேயிருந்த நான்கு ஸ்பேனியக் கப்பல்களை அவர்கள் பறிமுதல் செய்தனர். அதனல், ஓர்டுவும் அவாது மாலுமிகளும் அதிக லாபம் அடைந்தனர். ஒரு மாதங் கழிந்தபின் இச்செய்தி நெல்சனுக்கு எட்டியது. அவன் மனம் புண்பட்டது. அவனுக்கு அப்போது உண்டான கோபம் அளவிடற்கரியது. அந்தக் கோபத்துடன் நெல்சன் பின்வரும் கடிதம் வரைந்தான்.

"தேசத்துக்கு உண்மை ஊழியம் செய்து வந்தேன் என்று நான் கருதியிருந்தேன். ஆனால், முக்கியமான இச்சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தார் என்னை அவமதித்துப் புண்படுத்துவதைப் பார்த்தால் நான் கருதியது கனவோ அல்லது நனவோ என ஐயுற வேண்டியுளது. நான் வருந்துவது எனக்காக அன்று; எனது வீரர்களின் பொருட்டேயாம். தைரியமும் வீரமுஞ் செறிந்த நம் வீரர்களை நினைக்குந்தோறும் என் உள்ளம் உவகை யடைகின்றது. இவர்கள் பல மாதங்களாக இரவும் பகலும் கடலில் காவல்புரிந்து நிற்க, பகைவரின் திரவியக்கப்பல்களை வேறு சிலர் கொள்ளையடித்து, இலாபம் அடைந்ததை எண்ணும்போது என் மனம் கொதிக்கின்றது."

நிற்க, நெல்சன் தனது படையுடன் சார்டீனியத் தீவுக்குப் போயிருந்தபொழுது, பிரன்சுக் கப்பற்படை எகிப்து சென்றதாகக் கேள்வியுற்று, நெல்சனும் எகிப்து நோக்கிப் புறப்பட்டான். அங்கே சென்று பகைவர்களைக் காணாமல் மீண்டும் மால்டாவுக்குத் திரும்பினான். பகைவர்கள் புயற்காற்றில் அகப்பட்டு, அல்லலுற்றுத் தவுலனுக்குத் திரும்பிச் சென்றதாக நெல்சன் அங்கே அறிந்ததும், தவுலனை நோக்கிச் சென்றான். செல்லும் வழியில், பிரன்சுக் கப்பல்களும் சில ஸ்பேனியக் கப்பல்களும் ஜிப்ரால்டர் ஜலசந்தியைக் கடந்து சென்றதாக நெல்சன் கேள்வியுற்று உடனே ஜிப்ரால்டரை நோக்கிச் சென்றான். பகைவர்கள் மேற்கிந்தியத் தீவுகளுக்கே போயிருக்க வேண்டுமென்று நெல்சன் ஊகித்தறிந்து கப்பல்களை வேகமாய்ச் செலுத்த எண்ணினான்.

ஆனல், காற்றும் அலையும் எதிர்த்து வீசின. எனவே, தான் எண்ணியவாறு விரைவிற் சென்று பகைவர்களைப் பிடிக்க முடியாமற் போயிற்று. அந்தச் சமயத்தில் நெல்சனுக்குத் தேகசுகமில்லாமையால் கோடைகாலத்துக்கு முன்னரே இங்கிலாந்து செல்லுமாறு வைத்தியர் நெல்சனை வற்புறுத்தினர். அதற்கு நெல்சன், "பகைவர்கள் அமெரிக்கா சென்றிருப்பதாக வதந்தி உலவுகிறது. அஃது உண்மையாயின், அவர்களைத் துரத்திச் செல்வதே என் கடமையாகும். அவர்கள் ஒருகால் நரகத்துக்குச் சென்றிருப்பினும் அவர்களை நான் விடப்போவதில்லை" என்று சொன்னன்.

காற்றும் அலையும் அநுகூலமாயிருந்தமையால் பகைவர்கள் வேகமாய் அமெரிக்காவுக்குச் சென்றனர். நெல்சன் விரைவாகச் சென்றும் பகைவர்களைப் பிடிக்க முடியவில்லை. நெல்சன் மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சென்றபின், பகைவர்கள் திரும்பிப் போயினர் எனக் கேள்வியுற்றுத் தானும் திரும்பினன். கடைசியாகக் காடிஸ் துறைமுகம் அடைந்தான். சுமார் ஆறுயிரம் மைல் அலைந்து திரிந்தும் பகைவரது படையினை நெல்சன் காணவில்லை. இரண்டு வருடகாலம் அயர்விலாமல் உழைத்த களைப்பாலும், தனது முயற்சிகள் வீண்பட்டனவே என்னும் கவலையாலும், இவ்விரண்டாலும் நேர்ந்த உடல் நலக் குறைவாலும் நெல்சன் விடுமுறை பெற்று, மெர்ட்டன் அகம் சென்று சின்னள் இளைப்பாறினன்.

---

V56:1;y.L3 N34

## அத்தியாயம்—9.

### டிரபல்கார் வெற்றியும் நெல்சன் மரணமும்.

35983

ஒருநாள், பிளேக்வுட் என்பவர் மெர்ட்டன் அகஞ் சென்று, நெல்சனைக் கண்டு, பகைவரது கப்பற் படை கட்புலனுயிற்றென்றும், அஃது காடிஸ் துறை முகத்தில் தங்கியுளது என்றும் தெரிவித்தபின் விடை பெற்றுச் சென்றனர். பிறகு, நெல்சன் ஆழ்ந்த சிந் தனையுடன் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தான். அப்போது எம்மா அருகே சென்று, "சிந்தனை முகத் தில் தேக்கிக் கவலையோடிருக்கக் காரணம் யாது?" என்று வினவினள். அதற்கு நெல்சன், "கவலை யொன்றும் இல்லை. எப்போதும்போல் சந்தோஷ மாகவே இருக்கின்றேன். என் உடலும் சுகமாயுளது. ஆருயிர்நண்பர்களும் என்னைச் சூழ்ந்துள்ளார். எனவே எனக்குக் கவலையுண்டாவது எங்ஙனம்?" என்று புன் முறுவலுடன் விடையிறுத்தான். அதற்கு எம்மா நெல்சனை நோக்கி, "ஐயா! உமது வார்த்தைகளை நான் நம்பவில்லை. அகத்தின் அழகு முகத்தில் தோன்று கிறது. பகைவரின் படையைத் தாக்கி வெற்றியுற விழைகின்றீர் போலும். அந்தப் படையினை ஆறுயிரம் மைல் தூரம் துரத்திச் சென்று மெய்வருந்திய நீவிர்

அதனைத் தாக்கி வெற்றிபெற நினைப்பது இயற்கையே. வேறொருவன் அவ்வெற்றியை அடையின் உமக்கு வருத்தம் உண்டாகும் என்பதும் எனக்குத் தெரியும்" என்று சொன்னாள். அதைக் கேட்டு நெல்சன் மௌன மாயிருந்தான். ஹேமில்டன் அம்மை பின்னரும் நெல்சனைப் பார்த்து, "நண்பரே! உமது பிரிவு எனக்கு அளவிலாத் துயரினைத் தருவதே யாயினும் நீர் யுத்தத் துக்குப் புறப்படலே ஏற்றதாகும். உமது மனமும் அதனால் சாந்தி யடையும். அரியதோர் வெற்றியையும் பெறுவீர். அதன் பின்னர், இங்கு வந்து இன்பமாய் வாழ்வீராக" என்று பகர்ந்தனள். இவ்வீர மொழி களைக் கேட்ட நெல்சன் எம்மாவை உற்று நோக்கிக் கண்ணீர் வடித்து, "வீரமங்கையே! ஆருயிர் நங் கையே!! உன்னை மெச்சினேன். உன்னைப் போன்ற எம்மாக்கள் பலர் இருப்பின் என்னைப் போன்ற நெல் சன்களும் பலர் இருப்பார்" என்று கூறினான்.

பிறகு, தான் யுத்தத்துக்குப் புறப்படுவதாக நெல் சன் அரசாங்கத்துக்கு அறிவித்தான். நெல்சனது ஊழியத்தை அரசாங்கத்தாரும் உவகையுடன் ஏற்றுக் கொண்டனர். நெல்சன் படைத்தலைவனாக நியமிக்கப் பட்டான். அந்த நியமனத்தைக் குறித்து மாந்தர்கள் மகிழ்ச்சியுற்றனர். பகைவர்களைக் காவல்புரிவதிலும், துரத்திச் செல்வதிலும் ஊணுறக்கமின்றி இரண்டு வரு டம் மெய்வருந்திய நெல்சனே அவர்களைத் தாக்கி வெற்றிமாலை யணியத் தகுதியுடயவன் என்று எம்மா

நினைத்தவாறே தேசமக்களுங் கருதினர். யுத்தத்துக்குப் புறப்படுமுன், ஓரியண்ட் கப்பலின் பாய்மரத்தால் செய்யப்பட்டதும் ஓர் நண்பனால் பரிசாக அளிக்கப்பட்டது மாகிய பிணப் பெட்டியைக் கொணரச் செய்து அப்பெட்டியின் சரித்திரத்தை அதன் மேல்மூடிமீது செதுக்குமாறு உத்தரவிட்டான். தான், யுத்தத்தில் இறந்துபடின், அப்பெட்டியிலேயே அடக்கம் செய்யப் படவேண்டும் என்றுந் தெரிவித்தான்.

தனக்கு இறுதிக் காலம் நெருங்கியது என்னும் எண்ணம் நெல்சனது உள்ளத்தில் பதிந்து கிடந்தது. பல வருடங்கட்குமுன், மேற்கிந்தியத் தீவுகளில் ஒரு குறத்தி நெல்சனைப் பார்த்து, "ஐயா! நாற்பத்தேழாவது வயதில் கப்பல் உத்தியோகத்தில் உயர் பதவி பெறுவீர். பெறுதற்கரிய பெரும்புகழும் அடைவீர்" என்று குறி சொன்னாள். அதைக் கேட்ட நெல்சன் அக்குறத்தியை நோக்கி, "அதற்கப்புறம் நடப்பது யாது?" எனக் கேட்டான். அதற்கு அவள், "அப்புறம் எமபுரமே. அதுவே உமது இறுதிக் காலம்" என்று இயம்பினாள். இச்சம்பவமும் நெல்சனது நினைவிற்கு வந்தது.

நெல்சன் யுத்தத்துக்குப் புறப்பட்டுச் செல்கையில் தனது தினசரிக் குறிப்புப் புத்தகத்தில் கீழ்க் கண்டவாறு குறித்துள்ளான்.

"1805-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13-ம் தேதி வெள்ளிக் கிழமை இரவு பத்தரை மணிக்கு ஆருயிர்க்கினிய

வற்றை மெர்ட்டன் அகத்தில் தனியே விடுத்துத் தேச சேவையை முன்னிட்டுப் போர்க்குப் புறப்படுகின்றேன். தேசமக்கள் என்னிடமிருந்து வெற்றியையே எதிர்பார்க்கின்றனர். நான் வெற்றி பெற்று உயிருடன் திரும்புமாறு இறைவன் அருள் புரிவாராயின் அவரது கருணைப் பெருக்கினை எஞ்ஞான்றும் மறவாது போற்றுநிற்பேன். எனது வாழ்நாள் இந்த யுத்தத்தில் முடிவுறல் வேண்டும் என்பது திருவுளக் கருத்தாயின் அதுவே எனக்கும் சம்மதம். நான் இறக்க நேரின் எனது சுற்றத்தாரையும் நண்பர்களையும் கடவுள் காப்பாற்றுவார் என்ற முழு நம்பிக்கையுடன் நான் செல்கின்றேன். எல்லாம் ஈசன் செயல்."

மறுநாட்காலை, நெல்சன் போர்ட்ஸ்மத் துறைமுகம் சேர்ந்தான். அவனைப் பார்க்க ஆயிரக் கணக்கான மாந்தர்கள் திரள் திரளாய்க் குழுமினர். நெல்சனைக் கண்டவுடன் அழுதனர் சிலர்; முழங்காலிட்டுத் தொழுதனர் சிலர்; ஆசிகூறினர் சிலர். பண்டைக் காலந் தொடங்கி இங்கிலாந்தில் அவ்வப்போது அநேக வீரர்கள் இருந்துவந்துள்ளார். எனினும், தேச மக்களின் அன்பினைக் கொள்ளைகொண்டவன் நெல்சன் ஒருவனேயாவான் அஞ்சாமையும், கருணைப் பெருக்கும் ஒருங்கே அமையப் பெற்ற நெஞ்சினனும், சுயநலமும் பேராசையும் அற்ற பெருந்தகையாளனும், தேச சேவையினையே தனது நோக்கமாகக் கொண்ட வாழ்க்கையனும் ஆகிய நெல்சனை மாந்தர்கள் தெய்வம்போல் போற்றினர். இவ்வாறு ஆனந்த மிகுதியால் ஆரவாரித்த அன்பர்களைக் கண்டு, நெல்சன் உள்ளங்குளிர்ந்து

தலையால் வணங்கினான். நெல்சனுடன் அவனது தங்கையும் சென்றனள். நெல்சன் அவளைக் கரையில் நிறுத்தி, விடைபெற்றுச் செல்கையில், "அருமைத் தங்காய்! நான் போகின்றேன். விடையும் பெற்றேன். மேற்கிந்தியத் தீவுகளில் குறமாது சொன்னதையும் உனக்கு நினைப்பூட்டுகின்றேன்" என்று சொல்லிச் சென்றான்.

செப்டம்பர் 29-ம் தேதியன்று (ஜெனன நாள்) நெல்சன் காடிஸ் துறைமுகம் சேர்ந்தான். நெல்சனைக் கண்டதும் தாயினைக் கண்ட சேயைப்போல் எல்லோரும் உவகை எய்தினர். நெல்சனும் அளவிலா மகிழ்ச்சி யடைந்தான். வரவேற்பு முடிந்தவுடன் கப்பற்றலைவர்களை அழைத்துத் தான் கருதியுள்ள போர் முறையினை விளக்கமாகச் சொன்னான். நெல்சனது மதி நுட்பத்தையும் போராற்றலையுங் கண்டு எல்லோரும் வியந்தனர்.

நெல்சனிடம் அப்போது இருபத்தேழு கப்பல்கள் இருந்தன. தனது படைவலியைப் பகைவர் உணர்ந்தால், துறைமுகத்தினின்றும் வெளிக்கிளம்ப மாட்டார் என்பதை அறிந்து நெல்சன் ஒரு தந்திரஞ் செய்தான். இரண்டு கப்பல்களை மாத்திரம் பகைவரின் அருகே நிறுத்தினான். இருபத்திரண்டு கப்பல்களுடன் தான் துறைமுகத்துக்குச் சுமார் ஐம்பது மைல் தூரஞ் சென்று தங்கியிருந்தான். எஞ்சிய மூன்று கப்பல்களை இடையிடையே நிறுத்திவைத்துப் பகை

வரின் சலனத்தைக் குறித்துத் தனக்கு அவ்வப்போது செய்தி எட்டுமாறு ஏற்பாடு ஆற்றினன். இச்சமயத்தில், இன்னும் ஐந்து கப்பல்கள் அரசாங்கத்தாரால் அனுப்பப்பட்டன. அவற்றை ஜிப்ரால்டர் ஜலஸந்தியில் நிறுத்தி வைத்தான். இவ்வேற்பாட்டால் பிரன்சுக் கப்பல்களுக்கு உணவுப்பொருள்கள் வர வழியில்லாமற் போயிற்று. பகைவர்க்கு உண்பொருள் கொணர்ந்த சில கப்பல்களும் வழிமறிக்கப்பட்டுப் பறிமுதல் செய்யப்பட்டன. எனவே, பிரன்சுக்காரர்கள் உண்ண உணவின்றி மிகவும் வருந்தினர். அவர்களது செய்கைகளைப் பிளேக்வுட் என்பவர் கண்ணுங்கருத்துமாகக் கவனித்து நெல்சனுக்கு அறிவித்து வந்தனர்.

இவ்வாறு வாரங்கள் சில கழிந்தன. நெல்சன் அதிகாலையில் எழுந்து, தேகப்பயிற்சி செய்து, காலைக் கடன்களை முடித்து, உணவருந்தியபின் கப்பலில் உலாவிக்கொண்டிருப்பான். அவ்வப்போது மனதில் உதித்த எண்ணங்களை உடனே புத்தகத்தில் குறித்துக் கொள்வான். மிதமாகவே உண்பான். திராட்சை இரசத்தையும் மிதமாகவே அருந்துவான். இரண்டு மணி நேரமே அவன் தூங்குவது வழக்கம். உடல் நலங் குறைந்தவனுயிருந்தும் தனது தேகத்தைக் குறித்து அதிகக் கவலை எடுத்துக்கொள்வதில்லை. மழையில் நனைந்தாலும் உடுப்பை மாற்றிக் கொள்ளும் வழக்கம் அவனிடத்தில்லை. பணியாட்களைத் துன்புறுத்தாமல் அற்ப வேலைகளையும் தானே செய்து கொள்வான்.

இங்ஙனமிருக்க, அக்டோபர் மாதம் 19-ம்தேதி பகைவர்கள் துறைமுகத்தை விட்டு வெளிக்கிளம்பு வதாக நெல்சனுக்குச் செய்தி எட்டியது. நெல்சன்,, தன் கப்பற்படையுடன் ஜிப்ரால்டரை நோக்கி உடனே புறப்பட்டான். அன்றே போர் தொடங் கும் என எல்லோரும் எண்ணினர். ஆனால், நெல்சன், "அப்படியன்று. 21-ந் தேதியே போர் நடைபெறும். ஏனெனில், அதுவே என் குடும்பத்தாரின் வெற்றி நாளாகும். என் தாய்மாமனாகிய சக்ளிங் என்பவரும் அக்டோபர் மாதம் இருபத் தொன்றாந் தேதியி லன்றோ பிரன்சுக் கப்பல்களை நாசமாக்கி வெற்றி பெற்றனர். ஆதலால், எனது வெற்றியும் அந்நன்னா ளிலேயே நிகழ்வுறும்" என்று சொன்னான்.

இருபதாந் தேதி, காலை, பகைவரது படை வெளிக் கிளம்பி வந்தது. ஆங்கிலேயரது கப்பல்கள் பகைவர் அறியா வண்ணம் ஜிப்ரால்டருக்கு அருகே சென்றன. தனது படைவலியைக் கண்டு பகைவர்கள் புறங்கொண் டோடுவரோ என நெல்சன் கவலையுற்றான். ஆனால், பகைவர்களோ ஆங்கிலேயரது படைவலியை அறியா மலும், பசியின் கொடுமைக்கு ஆற்றாமலும், புறப்பட்டு ஜிப்ரால்டரை அணுகினர்.

21-ந் தேதி, சூரியன் உதித்தான். இரண்டு படைகளும் நெருங்கின. நெல்சனும் போர்க்கோலம் பூண்டான். வெற்றிச் சின்னங்களையும் அணிந்தான். அவ்வெற்றிச் சின்னங்களால் நெல்சனை இன்னானெனப்

பகைவர்கள் அறிந்து, குறிவைத்து எளிதில் கொல்லக் கூடும். எனக் கருதி எல்லோரும் அச்சம் எய்தினர். ஆனால், நெல்சனுக்கு அதைப் பற்றிச் சொல்ல ஒருவருக்கும் தைரியமில்லை. முன்னொரு யுத்தத்தில், நண்பன் ஒருவன் வெற்றிக் குறிகளைக் கழற்றி வைக்கும்படி நெல்சனுக்கு எச்சரிக்கை செய்தபோது, "இச்சின்னங்களை என் வீரத்தால் சம்பாதித்தேன். ஆதலால், அவற்றுடனே பெருமையோடிறப்பேன்" என்று நெல்சன் அளித்த பதில் எல்லோருடைய ஞாபகத்திலும் இருந்ததனால், நெல்சனுக்கு எச்சரிக்கை செய்ய எவனும் துணியவில்லை.

அன்று பதினொரு மணிக்கு நெல்சன் பின்வரும் தோத்திரத்தை எழுதி முடித்தான்.

"பொதுவாக ஐரோப்பாவின் நன்மையையும், சிறப்பாக இங்கிலாந்தின் பெருமையையுங் கருதி நான் செய்யப்புகும் இந்த யுத்தத்தில் வெற்றியருளும்படி இறைவனை இறைஞ்சுகின்றேன். உடல், பொருள், ஆவி யாதியவெல்லாம் கடவுட்கே அர்ப்பணம் செய்தேன். நான் எவ்விதக் களங்கமுமின்றி நடந்துகொள்ள, ஈசன் அருள்புரிவாராக."

இதன் பின்னர், தனது மரண சாஸனத்தையும் பின்வருமாறு எழுதிவைத்தனன்.

"ஹேமில்டன் அம்மையார் இங்கிலாந்து தேசத்துக்கு அரும்பெருந் தொண்டாற்றியுள்ளார். அதற்குக் கைம்மாறாக எவ்வித உதவியும் அரசாங்கத்தார் இதுவரையிலும் செய்தாரில்லை.

நெபோலியனைத் தேடிச் சென்று எகிப்திலிருந்து திரும்பி வந்தபின் அவ்வம்மையின் அந்தரங்கக் கடிதம் பெற்று, சைரக்யூஸ் போந்து, உண்ணீரையும் உண்பொருளை யும் சேகரித்து, மீண்டும் எகிப்து சென்று நைல்வெற்றி பெற் றேன். அவ்வம்மையின் உதவியில்லையேல், நான் மீண்டும் எகிப்து சென்றிருக்க முடியாது; நைல்வெற்றியும் நிகழ்ந் திராது.

அக்காலத்திற் செய்த இவ்வுதவி சிறியதே எனினும் ஞாலத்தில் மாணப் பெரிதேயாம்! எம்மாவுக்குத் தக்கவாறு பிரதியுபகாரம் செய்ய எனக்குச் சக்தியின்மையால் அவளைத் தேசத்தாரின் பாதுகாப்பிலேயே விட்டுச்செல்கின்றேன். அவ ளுக்குப் போதுமான உபகாரச் சம்பளம் அளிக்குமாறு அர சரை வேண்டுகிறேன். போர்முனைக்குப் போகும் தருணத் தில் நான் செய்துகொள்ளும் இச்சிறு விண்ணப்பம் வீண் போகாதென நம்புகின்றேன்.

எனது சுற்றத்தாரைக் குறித்து அதிகம் சொல்ல வேண்டுவதில்லை. அவர்களுக்குப் போதுமான உதவி அர சாங்கத்தால் அளிக்கப்படுவதாகுக.''

இரண்டு படைகளும் டிரபல்கார் என்னுமிடத் தில் சந்தித்தன. "ஒவ்வொருவரும் தத்தம் கடமை யைச் செய்வாரென இங்கிலாந்து எதிர்பார்க்கின்றது." **"England expects every man to do his duty"** என்று நெல்சன் சொன்னவுடன், ஆங்கிலேய வீரர்களுக்கு வீராவேசமும், புதிய உணர்ச்சியும் உண்டாயின. பிறகு

யுத்தம் ஆரம்பமாயிற்று. நெல்சன் முன்னணியில் சென்றான். அதைக்கண்ட கப்பற்றலைவர்கள் நெல்சனிடம் சென்று, "ஐயா; நீவிர் முன்னணியில் சென்று உமது உயிரை ஆபத்துக்குள்ளாக்குவது எங்கட்குக் கவலையைத் தருகிறது. நாங்கள் முன்செல்வோம். தாங்கள் பின்னிருந்து போர் முறையைப் புகட்டுங்கள்" என்றனர். நெல்சன் அதற்கு இணங்காமல் பகைவர்களின் இடையே புகுந்தான். வெஞ்சமர் நிகழ்ந்தது. நெல்சனது கப்பலின்மீது பீரங்கிக் குண்டுகள் மாரி போல் பொழிந்தன; பிணங்கள் குவிந்தன; மக்களின் இரத்தம் கப்பலெங்கும் தேங்கியது.

நெல்சனும் அவனது ஆருயிர்நண்பனை ஹார்டியும் கப்பலில் உலாவிக்கொண்டிருந்தனர். சுமார் ஒன்றரை மணிக்கு நெல்சன்மீது ஒரு துப்பாக்கிக் குண்டு பாய்ந்தது. நெல்சனும் கீழே சாய்ந்தான். ஓடிவந்த ஹார்டியைப் பார்த்து, "ஹார்டி! என்னைச் சுட்டுக் கொன்றனர்" என்று நெல்சன் சொன்னான். அதற்கு ஹார்டி, "இல்லை, இல்லை, அப்படியிராது" என்று சொன்னான். அதைக் கேட்ட நெல்சன், "அறியாது பேசுகின்றீர். எனது முதுகெலும்பு முறிந்து விட்டது" என்றான். பிறகு, நெல்சனை வேறொரு இடத்துக்குத் தூக்கிச் சென்றனர். அப்போது, தன்னை ஒருவரும் இன்னானென உணரா வண்ணம் முகத்தையும் வீரச் சின்னங்களையும் நெல்சன் கைக் குட்டையால் மூடிக்கொண்டான்.

வைத்தியர் உடனே வந்து சேர்ந்தார். நெல்சன் அவரைப் பார்த்து, "வைத்தியரே! இன்னும் சிறிது நேரமே நான் உயிருடன் இருப்பேன். எனது முது கெலும்பு முறிந்துவிட்டது" என்று சொன்னான். வைத்தியர் பரிசோதித்துப் பார்த்து, துப்பாக்கிக் குண்டு முதுகெலும்பில் பதிந்து கிடப்பதை அறிந்து, நெல்சனைப் பார்த்து, "ஐயா! உம் தேகஸ்திதி எப்படி இருக்கிறது?" என்று கேட்டார். அதற்கு நெல்சன், "வைத்தியரே! எனது முதுகெலும்பு முறிந்துபோயிற்று என்பது நிச்சயம். மேலும், மார்பில் ஒவ்வொரு நிமிஷமும் இரத்தம் விரைந்து ஓடுவதுபோல் தோற்று கின்றது. தேகத்தின் கீழ்ப்பாகம் எவ்வித உணர்ச்சியு மின்றி உயிரில்லாக் கட்டைபோல் உளது. மூச்சுவிடுதல் சிரமமாயிருக்கின்றது. சுவாசிக்கும் போது அடிபட்ட இடத்தில் வலி மிகுதியாய் தோன்று கின்றது" என்றான். இதைக் கேட்ட வைத்தியர் மனங் கலங்கி நம்பிக்கை இழந்தார். எனினும், நெல்சனது அபாயகாமான நிலைமையினை எவர்க்கும் கூறாமல் இரகசியமாய் வைத்திருந்தார்.

இங்ஙனம் இருக்க, வெளியில் போர் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. ஹார்டி என்பவர் யுத்தத்தைக் கவனிக்குமாறு மேற்றளம் சென்றார். பகைவர்கள் போரில் தளர்வெய்தினர். ஒன்றன்பின் ஒன்றாக அவர் களுடைய கப்பல்கள் கைப்பற்றப்பட்டன. நெல்சனுக்குத் தாகமும் வியர்வையும் அதிகரித்தன. நீர் வேட்கையின் மிகுதியால் அடிக்கடி தண்ணீர் அருந்

தினன். அருகிருந்தோர் விசிறிக்கொண்டிருந்தனர். போரில் முனைந்து நின்ற ஹார்டி அதிக நேரம் வர வில்லை. அவரைப் பார்க்க விரும்பிய நெல்சன், "ஹார் டியை என்னிடம் அழைத்து வருபவர் எவரும் இல்லை யோ? அவரும் ஒருகால் இறந்து பட்டனரோ?" என்று உருக்கமாகச் சொன்னான். அப்போது ஒரு மாலுமி நெல்சனிடம் வந்து, யுத்தம் மும்முரமாக நடந்துகொண்டிருப்பதாகவும், கீழே வரமுடியாமல் வருந்துவதாகவும், அதி சீக்கிரத்தில் தாம் வருவதாக வும் ஹார்டி கூறியதாக நெல்சனுக்கு அறிவித்தான்.

ஓர் புண்பட்ட மாலுமி நெல்சனுக்கு அருகே படுத்துக்கொண்டு வைத்தியரை ஆவலுடன் எதிர் பார்த்து இருந்தான். அவ்வழிச் சென்ற ஒருவன் அம்மாலுமியை அறியாமல் மிதித்து அவனது வலியை அதிகப்படுத்தினன். பலங்குன்றிப் பேசவும் சக்தி யற்றிருந்த நெல்சன் உடனே திரும்பிப் பார்த்து, மிதித்துச் சென்ற மனிதனைக் கண்டித்துக் கடிந்து பேசினன். ஒரு மணி நேரம் கழிந்தபின் ஹார்டியும் நெல்சனிடம் வந்தார். இருவரும் அன்புடன் கை குலுக்கினர்.

நெல்சன் :—ஹார்டி! யுத்தம் எந்த நிலைமையில் இருக்கிறது?

ஹார்டி :—ஐயா! வெற்றி நம்முடையதே. பகைவர்களின் கப்பல்கள் பன்னிரண்டு கைப்பற்றப் பட்டன.

நெல்சன் :—நமது கப்பல்களில் ஏதேனும் பகைவரால் கைப்பற்றப்பட்டதா?

ஹார்டி :—இல்லை! இல்லை!! அதைக் குறித்துப் பயமே இல்லை.

நெல்சன் :—(மகிழ்ச்சியுடன்)—நண்பரே! எனது இறுதிக்காலம் நெருங்கியது. அருகே வாரும். இன்னும் சிறிது நேரமே நான் உயிருடன் இருப்பேன். நான் இறந்த பின்னர், எனக்குச் சொந்தமான அனைத்தையும் எம்மாவிடம் சேர்க்குமாறு வேண்டுகின்றேன்.

பிறகு, ஹார்டி நெல்சனிடம் விடைபெற்று மீண்டும் மேற்றளம் சென்றான். வைத்தியர் நெல்சனின் அருகே இருந்தனர். நெல்சன் அவரைப் பார்த்து, "ஐயா! உங்களால் என் பொருட்டு ஒன்றும் செய்ய முடியாது. ஆகையால் புண்பட்ட மற்றவர்க்கு உதவி செய்யச் செல்லுங்கள்" என்றான். அதற்கு அவ்வைத்தியர், "பிரபுவே! மற்ற வைத்தியர்கள் அதைக் கவனித்து வருகின்றார்கள்" என்றனர். எனினும் நெல்சன் வற்புறுத்தியமையால், வைத்தியரும் அப்புறம் சென்றனர்.

பிறகு, நெல்சனுக்கு வேதனை அதிகமாயிற்று. அவ்வலியைப் பொறுக்க முடியாமல், "ஐயோ! இந்த வலியைக் காட்டிலும் மரணமே விரும்பத்தக்கது.

எனினும், இன்னும் சில கணங்கள் உயிர் வாழ்தலையே எவனும் விரும்புகின்றான் அன்றோ?" என்று வருத்தத்தோடு கூறினான்.

ஹார்டி மீண்டும் நெல்சனிடம் வந்தார்.

நெல்சன் :—பகைவர்களது கப்பல்கள் எத்துணை கைப்பற்றப்பட்டன?

ஹார்டி :—பதினைந்துக்குக் குறைவில்லை.

நெல்சன் :—நன்று. நான் இருபது அன்றோ எதிர்பார்த்தேன். சரி. ஹார்டி! கைப்பற்றிய கப்பல்கள் உடனே நங்கூரம் பாய்ச்சுக.

ஹார்டி :—இனி நடக்கும் காரியத்தைக் காலிங்வுட் பிரபுவே கவனிப்பார் என எண்ணுகின்றேன்.

நெல்சன் :—நான் உயிருடன் இருக்கும்வரை அது முடியாத காரியம். விரைவிற் சென்று நங்கூரம் பாய்ச்சுக.

ஹார்டி :—அப்படியே செய்வேன்.

நெல்சன் :—நான் இறந்த பின்னர், என்னைக் கடலில் எறிந்துவிடவேண்டாம். என்ன செய்ய வேண்டும் என்பதை நீரே அறிவீர். திக்கற்ற எம்மாவைக் காப்பாற்றுக. எனக்கு ஒரு முத்தங் கொடும்—

ஹார்டி :—(கண்ணீர் வடித்து முத்தமிட்டனர்.)

நெல்சன் :—இப்பொழுது என் மனம் சாந்தம் அடைந்தது. என் கடமையைச் செலுத்தச் சந்தர்ப்பம் அளித்த கடவுளுக்கு நான் நன்றி செலுத்துகின்றேன்.

இவ்வாறு சொல்லியபின் நெல்சன் மூர்ச்சை யுற்றான். அருகிருந்தவர்கள் அடைந்த துயரத்துக்கு அளவும் உண்டோ? ஹார்டி, குழந்தையைப்போல் கண்ணீர் வடித்துக் கதறினர். ஹார்டி சிறிதுநேரம் நெல்சனைக் கவலையுடன் உற்று நோக்கியபின், அன்பின் மிகுதியால் நெல்சனுக்கு மீண்டும் ஒரு முத்தந் தந்தார். நெல்சன் உடனே, "யார் அது?" என்றான். ஹார்டி என்று அறிந்ததும், "ஹார்டீ! கடவுள் உம்மை ஆசீர்வதிப்பாராக!" என்று ஆசிகூறினன்.

அன்று, நான்கு மணிக்கு நெல்சனல் பேசமுடியாமற் போயிற்று. பாதிரியார் வந்தார். நெல்சன் அவரைப் பார்த்து, "ஐயா! இந்த ஊன் எடுத்த பின்பு நான் பாவங்கள் செய்தறியேன். நான் பாவி அல்லேன். எனவே, பாவ மன்னிப்பும் வேண்டேன்" என்று சொன்னன். பிறகு, "என் கடமையை நான் செவ்வனே செலுத்தியமைக்காகக் கடவுளுக்கு நன்றி செலுத்துகின்றேன்" என்று சொல்லிக்கொண்டே நெல்சன் மண்ணுலகு நீத்து விண்ணுலகு சென்றனன்.

என்னே கூற்றுவன் பேதமை!

*நயனில் கூற்றுவன் நனிபே தையனே
விரகின் மையால் வித்தட் டுண்டனன்
ஒளிறுவாண் மறவரைப் பொருகளத் தொழித்து
வாடுபசி யாற்றிய நெல்சனைக் கூற்றுவன்
கொள்ளைகொண் டனன் ஆதலால்
இனியார் மற்றவன் பசிதீர்ப் போரே.

[*இரக்கம் அற்ற கூற்றுவன் மிகவும் அறிவற்றவன். ஆராயுந் திறம் இன்றி விதையினையே சமைத்து உண்டன ஞதலான். விளங்குகின்ற வாள் ஏந்திய வீரரைப் போர்க் களத்தின்கண் கொன்று தனது கொடும்பசியை ஆற்றிய நெல்சனையே கூற்றுவன் கொள்ளைகொண்டான். எனவே, அவனது பசியை இனித் தீர்ப்பவர் யாவரோ?]

நெல்சன் இறந்ததும், யுத்தமும் நின்றது. ஆங்கிலேயரே வெற்றி பெற்றனர். பகைவர்களின் கப்பல்களில் பதினேழு கைப்பற்றப்பட்டன. பகைவர்கள் முறியடிக்கப்பட்டுப் பஞ்சுபோல் பறந்தனர்.

ஆங்கிலேயர்க்கு இவ்வெற்றியால் உண்டான மகிழ்ச்சியைக் காட்டிலும் நெல்சனது மரணத்தால் ஏற்பட்ட துயரமே அதிகமாயிருந்தது. நெல்சனது மரணத்தைக் கேள்வியுற்றதும், இங்கிலாந்து முழுவதும் துயரக்கடலில் ஆழ்ந்தது. இந்தத் துயரச் செய்தியைக் கேட்டதும் அரசர் ஆற்ருெணுத் துயரம் எய்திச் சிறிது நேரம் பேச நாவெழாமல் மௌனமாயிருந்தார். இராணியும் கதறினுள். பிரதம மந்திரியாகிய பிட் என்பவர் அன்றிரவு நித்திரையினின்றும் எழுப்பப் பட்டு

நெல்சனது மரணத்தைக் குறித்து அறிவிக்கப்பட்டார். அவர் அடைந்த துயரம் அளவிடற் கரியது. இதைக் குறித்து அவர் சொல்லியதாவது —

"அநேக இரவுகளில் பற்பல விஷயங்களை முன்னிட்டு நித்திரையினின்றும் எழுப்பப்பட்டுள்ளேன். அவ்விஷயங்களைக் கேட்டறிந்த பின் மீண்டும் படுக்கைக்குச் சென்று நான் அயர்ந்து தூங்குவதுண்டு. ஆனால், நெல்சனது மரணச் செய்தியோ என் மனதை முற்றிலும் கலங்கச் செய்தது. அதைக் கேட்டபின் நான் அன்றிரவு மறுபடியும் தூங்க முடியாமற் போயிற்று."

நெல்சனது மரணத்தைக் குறித்து, காலரிட்ஜ் என்னும் மகாகவி சொல்லியதாவது —

"நெல்சன் இறந்தபோது நான் நேபிள்ஸ் நகரத்தில் இருந்தேன். நெல்சனது மரணச் செய்தியைக் கேள்வியுற்றதும் ஒவ்வொரு ஆங்கிலேயனும் எய்திய துயரம் செப்பத்தரமன்று. ஆங்கிலேயரது முகத்தில் துக்கக் குறியும் கவலையுமே காணப்பட்டன. வழியில் சென்ற சிலர் என் முகத்தின் துக்கக்குறியால் என்னை ஆங்கிலேயன் என்றுணர்ந்து என்னுடன் கைகுலுக்கிக் கண்ணீர் வடித்தனர். நெல்சனது மரணத்தால் தேசத்துக்கு உண்டான நஷ்டம் அளவிடற்கரியது."

நிற்க, நெல்சனது பிரேதம் நன்கு காப்பாற்றப் பட்டு, டிசம்பர் மாதம் 17-ந் தேதி இங்கிலாந்துக்குக்

கொண்டுவரப்பட்டது. மாந்தர்கள் குழுமினர். அநேக வாரங்களாகியும் நெல்சனது பிரேதம் கெடாமல் இருந்தது. அருகே இருந்தவர்கள் ஒப்பற்ற வீரனது பிரேதத்தைக் கடைசி முறையாகக் கண்டனர். பிறகு, நெல்சனது பிரேதம் ஓரியண்ட் கப்பலின் பாய் மரத்தால் செய்யப்பட்ட பிணப்பெட்டியில் அடக்கம் செய்யப்பட்டுக் கடைசியாக சேண்ட்பால் மாதா கோயிலில் அடக்கம் செய்யப்பட்டது.

நெல்சனது சகோதரனுக்குப் பிரபுப் பட்டம் அளிக்கப்பட்டது. ஏனைய சுற்றத்தார்க்கும் போதுமான உபகாரச்சம்பளம் அரசாங்கத்தாரால் வழங்கப்பட்டது. ஆனால், எம்மாவுக்கு எவ்வித உதவியும் அரசாங்கத்தால் அளிக்கப்படவில்லை. அவளது கணவரது சொத்துக்களிலிருந்து வருடம் ஆயிரத்தைந்நூறு பவுன்கள் வருமானம் வந்தது. ஆனால், ஆடம்பர வாழ்க்கையினாலும், வரவுக்கு மிஞ்சிய செலவினாலும் அவளுக்கு அதிக கஷ்டங்கள் நேர்ந்தன. உதவி செய்யக் கருதியவர்களும் அவளுடைய வாழ்க்கையைக் கண்டு வெறுப்பற்றனர். அவளுடைய இறுதிக்காலம் மிகவும் பரிதாபமாக வருணிக்கப்பட்டுள்ளது.

நெல்சனது வெற்றுடம்பு மாய்ந்து வருடங்கள் பல கழிந்தும், அவனது புகழுடம்பு இற்றைக்கும் நிலவுகின்றது. நெல்சனது பெயரைக் கேட்டவளவில் ஆங்கிலேய இளைஞர்களுக்குப் பெருமையும் உற்சாகமும் உதித்தெழுகின்றன. தாய்நாட்டுப் பற்றும் தன்னல

மறப்பும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற நெல்சனை ஆங்கிலேயர் ஒரு உதாரணமாகக் கொண்டு அவனைப் பின்பற்றி வாழ்கின்றனர். நெல்சன் இறந்தும் இறவாதவனே. பெரியோர்கள் இறந்த பின்னரும் உலகோர்க்கு வழிகாட்டியாயிருக்கின்றனர் என்பதற்கு நெல்சன் சான்றாவான்.

தோன்றிற் புகழொடு தோன்றுக. அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று; —குறள்.

V561,l4;L58
N34




85983

சஞ்சீவி பிரஸ், கருமபுரி—34

புத்தகம் வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :—

**சஞ்சீவி பிரஸ்,**

**தருமபுரி,**

[சேலம் ஜில்லா.]